# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,884 — 1969 දෙසැම්බර් 12 වැනි සිකුරාදා — 1969.12.12

14,884 ஆம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் — வெற்றிடம் .. .. ... | 1235 | ஏலவிற்பனைகளும், குத்தகை விற்பனைகளும் .. .. | 1288 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 1265 | உத்தியோகத் தொடர்புற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. ... | 1280 | அறநிலை முகாமைக் கடிதங்களும் ஈட்டு விண்ணப்பங்களும் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் ... .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. . | 1287 | நானாவித அறிவித்தல்கள் ... .. | 1289 |


### பதவிகள் — வெற்றிடம்

#### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள், அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால், அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) 'கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கெனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அத்தாட்சி பெறல் வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

---

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறனடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்ச வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவரை (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரைவிலக்கணம்.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No. AB. 39/X.2091/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்பக்கல்வி நிலையங்களில் சிரேட்ட (வர்த்தக) போதனாசிரியர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் சிரேட்ட (வர்த்தக) போதனாசிரியர் பதவிகளை நிரப்புதல் தொடர்பில் 1969 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிய 14,856 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியான அறிவித்தல் சம்பந்தமாக மேலும் அறியத்தருவது.

2. குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டிருப்பதுடன் இத்தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிடப்பட்ட படிவங்களில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கீழ்க்காணும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்பட வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 9.1.1970.

(ஆ) கடல் கடந்த விண்ணப்பங்கள் : 16.1.1970.

தேவைப்படும் தகைமைகள்.—

அபேட்சகர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்டவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 9.1.1970 அன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக வர்த்தக அல்லது பொருளியல் பட்டதாரியாக இருப்பதுடன் ஐந்து வருட செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரண்டிலும் ஐந்து வருட அனுபவம் பெறறிருக்க வேண்டும்; அல்லது

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் வர்த்தக தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் ஐந்து வருட செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரண்டிலும் ஐந்து வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருப்பதுடன் ஐந்து வருட செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரண்டிலும் ஐந்து வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3. அபேட்சகர்கள் இவ்வறிவித்தலுக் கிணங்க விண்ணப்பிக்கும் பொழுது கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமைய வேண்டும் :—

(i) மேற்போந்த ii ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளுடன் 30.5.69 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக் கிணங்க விண்ணப்பித்துள்ள அபேட்சகர்கள் திரும்பவும் விண்ணப் பிக்க வேண்டியதில்லை.

(ii) 1969 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் இவ்வறிவித்தல் தொடர்பிலும் செல்லுபடியாகும்.

(iii) இதற்கிணங்க, மேற்போந்த 2 ஆம் பந்தியின் (இ) (iii) உப பந்தியில் குறிப்பிட்டுள்ள "சமமான அல்லது உயர்ந்த தகைமை யுடன் ஐந்து வருட செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரண்டிலும் ஐந்து வருட அனுபவம்" என்னும் தகைமை யைப் பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதே இவ்வர்த்தமானி அறிவித்தலின் நோக்கமென விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 4 ந் உ.

12–466/1—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

---

No. AB. 86/X2148/69

## கமத்தொழில் திணைக்களம்

### ஆராய்ச்சி தகுதிகாண் உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள்

1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 14,871 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலைப் பார்க்க. மேற்குறித்த பதவிகளுக்கான உள்நாட்டு, வெளிநாட்டு விண்ணப்பங்களின் கடைசித் திகதி 1969 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு–1,
4.12.1969.

12–466/2—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

No. AB. 90/X 2155/69

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### இரசாயன வல்லுனர் பதவி

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இரசாயன வல்லுனர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்திணைக்களத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. எண். 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்குமுன் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 9.1.1970.

(ஆ) வெளி நாட்டு விண்ணப்பங்கள் 16.1.1970.

**குறிப்பு**

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்வோர், 9″ × 4″ அளவிற்குக் குறை யாததும் முத்திரையிடப்படாததுமான ஓர் கடிதவுறையில் தமது சொந்த முகவரியை எழுதி கடிதத்துடன் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பத்தாரர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத்தாமே பொறுப் புடையவராவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள விண்ணப்பத்தாரர் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதி நிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அவ்விண்ணப் பத்தாரர் விரும்பினால் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்குச் சமீப மாயுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பி வைக்கலாம்.

(vi) **மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங் கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதி யான உடல்நலமுடையவர்களா என்பதை உறுதிப்படுத்தும் கருத் துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத் தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவையின் நிபந்தனைகளும் ;—**

பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். விதவையர் அனுதையர் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்துதல் வேண்டும்.

3. **சம்பளமும் வாழ்க்கைப்படியும்.**—இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் பின்வருமாறு—

ஆண்டொன்றுக்கு ரூபா 4,080 முதல் ரூபா 13,200 வரை ரூபா 360 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 12 உம், ரூபா 480 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 10 உம், ரூபா 11,280 இல் ஈராண்டுத் தரிப்பும், ரூபா 8,880 க்கு முன்னும் ரூபா 11,760 க்கு முன்னும் வினைத்திறமைகாண் தடையுமுண்டு.

**குறிப்பு.**—மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா 8,400 ஐக் கடப்பதற்கு, இரசாயன வல்லுனர்கள் உயர் பட்டதாரிப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் நிலத்தக நீர் இரசாயனத்துறையில் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைமையை உடைய விண்ணப்பத்தாரர் சேவையில் சேரும்பொழுது மேற்கூறிய சம்பள அளவுத்திட்டத்தில் ஆண்டொன்று ரூபா 5,160 என்ற தொடக்கச் சம்பளத்தில் கணிக்கப்படுவர்.

4. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சமர்ப் பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று, அவர்—

(அ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலம் வாய்ந்தவராயு மிருத்தல் வேண்டும்.

(ஆ) 9.1.1970 ம் திகதியில் 22 வயதிற்குட்படாதவராயிருத்தல் வேண்டும். ஆரம்பப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல் வயது எல்லை 50 ம், அங்கீகரிக்கப்பட்ட கலாசாலையில் தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது உயர் பட்டதாரிப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல் வயது எல்லை 35 ந்துமாகும். (அரசாங்க சேவையிலோ அல்லது கூட்டுத் தாபனங்களிலோ நிரந்தரமான உத்தியோகமுடையவர்களுக்கு இம் மேல் வயது எல்லை கணிக்கப்படமாட்டாது).

(இ) இரசாயனத்தில் முதலாம் அல்லது இரண்டாம் விசேட தரப் பட்டம் அல்லது இதற்குச் சமமான கல்வித் திறனுடையவராயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பத்தாரர் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவை களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்தரக் கல்விச் சான்றிதழ்.

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை அல்லது உயர் தொழில் தகைமையும் தொழி நுட்பத் தகைமையும் பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளை யாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பத்தாரர் களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களை தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பும் திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்ட னுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத் தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிட்டுள்ளது) அதன் பிரகாரம் அறி வுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பக் காரர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியி லிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தங்கள் விண்ணப்பங்களைக் கவனிக்கும் படி கேட்கும் உரிமையெதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகம்,
த. பெ. எண. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 4 ந் உ.

12-466/3—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

---

No. AA 92/X2156/69

## உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதி

### பொறியியலாளர்கள் பதவிகள் (எந்திரவியல்)

உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் (எந்திரவியல்) பொறியியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 9.1.70.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16.1.70.

குறிப்பு :

(1) அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வோர் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரை இடப்படாததுமான ஓர் கடித உறையில் தமது சொந்த முகவரியை எழுதிக் கடிதத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் அபேட்சகர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசி திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவார்.

(3) வெளிநாட்டில் உள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதி நிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அபேட்சகர் கள் விரும்பினால் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டிற்குக் கிட்ட வுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(4) **மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அலுவலாளர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாவென்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லு மாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ்செய்வதற்குரிய செலவை யும் சம்பந்தப்பட்ட அலுவலாளரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(அ) பதவி நிரந்தரமானதும் உபகாரச்சம்பளம் உடையதுமாகும். விதவையர், அனாதையர் உபகாரச்சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்தல் வேண்டும்.

(ஆ) நியமனம் மூன்று வருடகாலத் திறமைகாண் நிலையுடையது.

(இ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்க உத்தியோகத்தராக இருந்தால், ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு அவருடைய நியமனம் பதிற்தகைமையுடையதாயிருக்கும்.

(ஈ) உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரச் செயலாளரினால் நிர்ணயிக்கப் படும் தொகையாகிய பிணைப்பணத்தை, தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் கட்டுமாறு கோரப்படுவர்.

3. **சம்பளமும் வாழ்க்கைப்படியும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

(அ) ஆண்டொன்றுக்கு ரூபா 5,160 முதல் ரூபா 6,240 வரை, ரூபா 360 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 3 உம், ரூபா 6,960 முதல் ரூபா 13,200 வரை ரூபா 360 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 4 உம், ரூபா 480 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 10 உம், ரூபா 11,280 இல் ஈராண்டுத் தரிப்பும், ரூபா 6,960 க்கு முன்னும் ரூபா 11,280 க்கு முன்னும் வினைத்திறமை காண் தடையும் கணிக்கப்படும்.

இலண்டன் எந்திரவியல் பொறியியலாளர் நிறுவகத்தின் கூட்டு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் பொழுது, அவர் ஆண்டு ரூபா 7,320 என்ற சம்பள நிலையிற் கணிக்கப்படுவர்.

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் இலண்டன் எந்திவியல் பொறியிய லாளர் நிறுவகத்தின் கூட்டு உறுப்பினராக (ஏ. எம். ஐ. மெக்.ஈ.) இருந்தால், அவர் ஆண்டு ரூபா 7,320 என்ற தொடக்கச் சம்பள நிலையில் கணிக்கப்படுவர்.

(இ) (1) தெரிவுசெய்யப்பட்ட பொறியியலாளர் (எந்திரவியல்) முழு உயர்தொழிற்தகைமை இல்லாமல் (ஏ. எம். ஐ. மெக்.ஈ.) ஆண்டு ரூபா 10,800 க்கு மேல் கணிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராவர்.

(2) ஆண்டு ரூபா 6,960 என்ற சம்பள விகிதத்திற்கு முன், வினைத்திறமைகாண்தடையைக் கடப்பதற்கு, அவர் திணைக்கள நடைமுறை, கணக்கு முதலியவற்றில் விதித்த பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். சித்தியெய்தத் தவறியவர்களின் சம்பள ஏற்றம் பின்போடப்படும்.

**குறிப்பு.**—முழு உயர்தொழிற் தகைமையுடன் சேவையிற் சேரும் பொறியியலாளர்கள் நியமன நாளிலிருந்து இருவருட காலத் திற்குள் இப்பரீட்சையிற் சித்தியெய்தல் வேண்டும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சமர்ப் பிக்கவேண்டிய திருப்திகரமான சான்று : அவர்,

(அ) சிறந்த நற்குணம் உடையவராகவும் உடல்நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 9.1.1970 ஆம் திகதியில் 21 வயதிற்குட்படாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேல் வயதெல்லைகணிக்கப்படமாட்டாது)

(இ) (1) இலங்கைப் பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் பொறியியலாளர் பாடங்களில் பொறியியலாளர் பட்டம் அல்லது அதற்குச் சமமான மதிப்புள்ள பட்டம் உடையவராகவும் ; அல்லது

(2) (இலண்டன் அல்லது அதற்குச் சமமான) பொறியியலாளர் நிறுவனத்தின் பட்டதாரிக் கூட்டு உறுப்பினராகவும், அல்லது

(3) 1 ஆம் தர முகாரி அலுவலாளர்களின் பதவி உயர்விற்காகப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கனிட்ட தொழில் நுட்ப அலுவலாளர்கள் (பொறியியல்) பரீட்சையில் சித்தி அடைந்திருப்பதுடன் முகாரி சேவையில் எந்திரவியல் தரத்தில் குறைந்தது 10 வருட அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—1961 ஆம் ஆண்டு கட்டாய அரசாங்க சேவை அதிகாரச் சட்ட இலக்கம் 70 இன் கீழ் பொறியியலாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பொறியியலாளர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும் பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமைபற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் ;

**குறிப்பு**—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளை ஆயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக்கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலாளருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன் பிரகாரம் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைசகு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியில் இருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
அ. பெ. இல. 500,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 4 ந உ.

12-466/4—12.12.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,884

---

இல. : AA 44/X 2158/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : குடிசார் எந்திரவியல் விரிவுரையாளர்—II ந் தரம்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் குடிசார் எந்திரவியல் விரிவுரையாளர், II ந் தரப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 9.1.70.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16.1.70

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 4,080—360—ரூபா 8,400 வருடாந்தம்.

**குறிப்பு.**—(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமாணி அல்லது

கலாநிதி போன்ற பட்டப் பின் தகைமைகள் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூபா 5,160 பெறுதற்கு உரித்துடையவராவர்.

(ii) ஓர் ஆசிரியர் கலாசாலை அல்லது சிரேட்ட தொழில் நுட்ப நிலையம் அல்லது சிரேட்ட தொழில் நுட்ப நிலையம் இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி அல்லது சமனான அல்லது உயர்ந்த தரத்தைய அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளும் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூபா 5,160 வழங்கப்படுதற்குச் சீர்தூக்கப்படுவார்கள்.

(iii) இலண்டன் குடிசார் எந்திரவியல் அல்லது மின்சார எந்திரவியல் அல்லது பொறிமுறை எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத் தகைமை போன்ற பூரண தொழிற் தகைமை பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூபா 7,320 பெறுதற்கு உரித்துடையவராவர்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்து எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ந் தர விரிவுரையாளர்கள், அவர்களுடைய சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப் படியை—அதாவது வருடாந்தச் சம்பளம் ரூபா 8,400 ஐ அடைந்து அச்சம்பளப்படியில் ஒரு வருடம் கடமை புரிந்த பின், வருடாந்தம் ரூபா 480 சம்பள உயர்ச்சிப் பணமாகப் பெற்று ரூபா 10,800 வரை சம்பளம் பெறலாம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 9.1.70 ஆந் திகதியன்று 21 வயதுக்குட்படாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் குடிசார், எந்திரவியல் பாடங்களுடன் எந்திரவியல் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) இலண்டன் குடிசார் எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவன தகைமைப் பரீட்சையின் I ம், II ஆம் பகுதிகளில் தேறியிருக்க வேண்டும்.

அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெற வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மு. கு.**—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ௵ டிசெம்பர் ௴ 4 ந் வ.

12—466/5—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

**No. AB 95/X 2160/69**

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களம்

### தகுதிகாண் நிலைக்குரிய களஞ்சிய அத்தியட்சர் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களத்தில் தகுதிகாண் நிலைக்குரிய களஞ்சிய அத்தியட்சர் பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தில் இருந்து கிடைக்கப்பெறும் அச்சிடப்பட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, " செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1, " என்ற முகவரியில் பின்வரும் திகதிகளில் அல்லது அத்திகதிகளுக்கு முன்னர் வந்து சேரும்படியாக அவை அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 9.1.70

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16.1.70

**குறிப்பு :**

(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அனுப்புமாறு அஞ்சல் மூலம் வேண்டுகோள் விடுப்பவர், தமது முகவரி இடப்பட்ட முத்திரை ஒட்டப்படாத, 9" × 4" அளவுக்குக் குறையாத கடித உறையையும் சேர்த்து அனுப்புவதோடு, அபேட்சகராக வர விருப்பவர் அரசாங்க சேவையில் ஒரு உத்தியோகத்தரா, இல்லையா என்பதையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும் ;

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அப்படிவம் தொடர்பான ஒரு கடிதம், அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதம் ஆகிவிட்டது என்ற குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. கடைசி நாள் வரை தங்கள் விண்ணப்பங்களைத் தாமதம் செய்யும் அபேட்சகர்கள் அத்தாமதத்திற்குத் தாமே பொறுப்பாக இருப்பார்கள் ;

(3) வெளிநாட்டு அபேட்சகர்கள் அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாட்டிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைப்பதற்கென விண்ணப்பப் படிவங்களை அவர்கள், விரும்பினால் தாங்கள் வசிக்கும் நாட்டுக்குரிய, அல்லது அந்நாட்டுக்கு மிகச் சமீபமாகவுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அனுப்பலாம் ;

(4) **மருத்துவச் சோதனையும், பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுபவரிடம் பரீட்சைக்கெனச் செல்லுதல் வேண்டும். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான செலவையும் அவ்வுத்தியோகத்தர்களே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன விதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—(அ) பதவி தற்காலிகமானது. ஆயினும் இப்பதவியில் நியமனம் பெற்ற விண்ணப்பதாரர், கீழே (ஆ) விலும், (இ) யிலும் குறிப்பிடப்பட்ட பயிற்சிக் காலத்தைத் திருப்திகரமாக முடித்து, அதில் குறிப்பிடப்பட்ட பரீட்சையிலும் சித்தி பெற்ற பின்னர், நிரந்தர இளைப்பாறு சம்பள நிலையில் ஏற்படுத்தப்படும் களஞ்சிய அத்தியட்சர் பதவியில் நியமனம் செய்யப்படுதற்குத் தகுதியுடையவராவார்.

(ஆ) கப்பற்றுறை ஆணையாளரால் விதிக்கப்பட்ட பயிற்சி நெறியொன்றை தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி பயிலுதல் வேண்டும். இப் பயிற்சிக் காலத்தில் களஞ்சியப் பொருட்களைத் தருவித்தல், அவற்றைக் கொண்டு வருதல், கணக்கிடுதல், களஞ்சியம் ஒன்றைக் கொண்டு நடத்துதல், சூதம், பிரதான களஞ்சியம் சம்பந்தமான நடைமுறை என்பவை பற்றி அவர் சிறந்த அறிவைப் பெறுதல் வேண்டும்.

(இ) திணைக்களக் கட்டளைகள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரமாணங்கள், நடைமுறைக் கைநூலின் ஒழுங்கு விதிகள், கப்பற்றுறை ஆணைக்குழுவின் களஞ்சியப் பொருட்களைத் தருவித்தல், முகாமை செய்தல் என்பவற்றிற்குப் பொருந்தும் பகுதிகளுக்குரிய நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றில் அவருக்கிருக்கும் அறிவைப் பரீட்சித்துப் பார்க்கும் பொருட்டு நடாத்தப்படும் ஒரு எழுத்துப் பரீட்சையில் அவர் இந்த மூன்று வருடப் பயிற்சிக் காலத்தில் திறமையுடன் சித்தி பெறுதல் வேண்டும்.

(ஈ) இத்திணைக்கள வேலையில் அனுபவத்தையும், பரந்த அறிவையும் பெறுவதற்கு உதவும் எவ் வேலையையும் அவர் செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

(உ) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி குறுகிய கால அறிவித்தலில் பதவியைப் பொறுப்பேற்க வேண்டும்.

3. **சம்பளமும், படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

வருடமொன்றுக்கு ரூபா 6,720—360 × 12—11,040

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த பண்பும், உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) 9.1.1970 ல் வயது 21 வருடங்களுக்குக் குறையாமலும் 30 வருடங்களுக்கு அதிகமில்லாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் ஏற்கனவே இருப்பவர்களுக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.

(இ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—வருடமொன்றுக்கு ரூபா 3,900—180 × 8, 240 × 4—6,300 க்குக் குறையாத சம்பள அளவுத் திட்டத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர், 4 (இ) என்னும் பந்தியில் குறிக்கப்பட்ட தகைமை இல்லாதவராயிருப்பினும், பின்வரும் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பின் இப்பதவிக்கென விண்ணப்பிக்கலாம் :—

(1) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை, அல்லது ;

(2) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை. இப்பரீட்சைக்கு இரு தடவைகளுக்கு மேற்படாமல் தோன்றி சிங்கள/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது ;

(3) இவற்றிற்குச் சமமான, அல்லது மேலான பரீட்சை.

5. அபேட்சகர் வேண்டப்படும்பொழுது பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு :** ஞானஸ்நானச் சான்றிதழ்கள், அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்கு விதிக் கோவையின் நோக்கத்திற்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.)

(ஆ) பட்டப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கான சான்றிதழ், அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) பண்பு பற்றிய இரு சான்றிதழ்கள். இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமைச் சான்றிதழ், அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ், அல்லது இவ்விரு சான்றிதழ்களும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

**குறிப்பு :** (1) இவ்விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்கள், அல்லது சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்படக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவ்விதஞ் செய்யாமல் இருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். எனினும் தங்கள் விண்ணப்பங்கள் தங்களினால் அனுப்பப்பட்ட திகதியை அவர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி நேராக அனுப்புதல் வேண்டும். இத் தேவைக்கென, விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட ("ஆ" எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறேதும் கடிதத் தொடர்புகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் முகவரிக்கே அனுப்பப்படுதல் வேண்டும். அவைகளை இத்திணைக்கள உத்தியோகத்தர் எவருக்காவது அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்புதல் கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி II ஆம் தொகுதி ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. விண்ணப்பப் படிவத்துடன் அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்ட ("அ" எனக் குறியிடப்பட்ட) அச்சிட்ட அஞ்சல் அட்டையை அதில் கூறப்பட்டிருப்பதுபோல அவர்களே நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்விதம் அவர்கள் செய்தால், இந்த அலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பப் படிவங்களின் கிடைத்தது பற்றி அவர்கள் அறிவிக்கப்படுவார்கள். இத் தேவையின் பிரகாரம் நடந்து கொள்ளத் தவறிய அபேட்சகர்களுக்கு, அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது. இத்தேவையின் பிரகாரம் நடந்து கொண்டவர்களுக்கு முடிவுத் திகதியில் இருந்து மூன்று கிழமைகளுக்குள் அவர்களின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் கிடையாமல் இருந்தால் அவர்கள் அது பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி நடக்கத் தவறும் விண்ணப்பதாரர், தன் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கோரும் எந்த உரிமையையும் இழந்தவராவார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
4.12.1969.

**12—466/6—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884**

இல. AB 67/X2161/69

## சட்டவரைநர் திணைக்களம்

### உதவி சட்டவரைநர் (சிங்கள மொழிபெயர்ப்புப் பதவி)

சட்டவரைநர் திணைக்களத்திலுள்ள உதவிச் சட்டவரைநர் (சிங்கள மொழிபெயர்ப்புப்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 9.1.1970 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16.1.1970.

**குறிப்பு.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக்காட்டுதல் வேண்டும்,

(ii) விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்,

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு; இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்,

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்று வோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(அ) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் கைம்பெண், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு உதவுதொகைகள் செலுத்துதல் வேண்டும் ;

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் மூன்றாண்டு காலத்துக்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

**3. சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய ஒன்றுதிரண்ட சம்பள அளவுத் திட்டம் வருமாறு.—ஆண்டொன்றுக்கு ரூபா 11,520/- — 480 & 600—17,640 ரூபாவரை (ஆண்டொன்றுக்கு 14,400 ரூபாவின் முன் திறமைத் தடையொன்றுண்டு).

**4. தேவையான தகைமைகள்:**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும் ;

(ஆ) 9.1.1970 ம் தேதி அன்று 45 வயதுக்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும் ; (இவ்வயதெல்லை ஏற்கெனவே பகிரங்கசேவையிலுள்ளோர்க்கு ஏற்புடையதாகாது) ;

(இ) ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத சேவையுள்ள உயர்நீதிமன்ற வழக்குரைஞராகவிருத்தல் வேண்டும் ;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின், சிங்களத்தை ஒரு பாடமாக எடுத்த பட்டதாரியாகவிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**— ஐந்தாண்டுச் சேவையடைய சட்டவரைநர் திணைக்களத்திலுள்ள அலுவலர்கள், (இ), (ஈ) என்னும் உட்பந்திகளிற் குறிப்பிடப்பட்ட ஏனைய தகைமையுடையவர்களாயிருப்பின், வழக்குரைஞராக ஐந்தாண்டுச் சேவையில்லாவிடினும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும், காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப்பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடைக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
அ. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 4 ந உ.

**12—466/7—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.**

இல. A 79/X2162/69

## பதிப்பாசிரியர் பதவிகள்—கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் பதிப்பாசிரியர் பதவிகளுக்கு (ஆண்/பெண்) இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக எனக்கு அனுப்பப்புடுதல் வேண்டும் :

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 9.1.1970

(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16.1.1970

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான உரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லாவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்,

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்,

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்,

(iv) **மருத்துவர் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

(i) ரூ. 6,720—12 × 360—ரூ. 11,040/- வருடாந்தம் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரிய வேண்டும். தற்போது காலியிடங்கள் தெகிவலை, கேகாலை, பலாலி, பொல்கொல்ல, குளியாப்பிட்டியா, காலி கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உண்டு ; தெரிவு செய்யப்படுபவர்கள் இக்கல்லூரிகளில் ஒன்றுக்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும் ;

(ii) நியமனங்கள், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :

(அ) 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 9 ந் திகதியன்று 24 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்த நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ஆ) (i) சிங்களத்தை/தமிழை ஒரு பாடமாகக் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பட்டம் பெற்றிருப்பதுடன் ;

(ii) கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பத்திரப் பரீட்சையில் அல்லது யாதேனும் உயர்ந்த பரீட்சையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்து அதில் சித்தியடைந்திருக்க வேண்டும்,

அல்லது

பட்டப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் சித்தியடைந்திருக்க வேண்டும்,

(iii) மொழிபெயர்ப்பு வேலையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

(இ) தெகிவலை, காலி, கேகாலை பொல்கொல்ல அல்லது குளியாப்பிட்டி கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவும் பலாலியிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியிலுள்ள பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய தமிழ் அறிவும் பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் (காரியத்திற்கேற்ப) மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம் ;

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செய்ற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பக்காரர்கள் இராணுவ பயிற்சி செய்யப்பட்டுப் பின் சட்டமுறை தொழிலில் ஏதாவது ஒரு படைக்கு அமர்த்தப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பக்காரர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யுமாறு வேண்டப்படுவர்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பக்காரர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4 விகிதமானதை தமது உதவுதொகையாக படைக்கலந் தாங்கு சேவைகளின் விதைவை அநாதை உபகாரச்சம்பள நிதிக்கு வழங்குவதற்கு எழுத்துமூலம் தமது சம்மதத்தை கொடுத்தல் வேண்டும்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
இராணுவத் தளபதிக்காக.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 4 ந உ.

**இலங்கை இராணுவத்தில் சட்டமுறை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ————.

2. தேசிய இனம் (பரம்பரையான இலங்கைப் பிரஜையா அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரஜையா என்பதைக் குறிப்பிடவும். பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) : ————.

3. முகவரி :
வீட்டுவிலாசம் : ————.
அலுவலக விலாசம் : ————.

4. பிறந்த திகதி : ————. 31.12.69 ஆம் திகதிக்கு
வருடம் : ————.
மாதம் : ————.
நாள் : ————.

5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய விலாசமும் : ———— .

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :————.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகளில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் : ————.

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் : ————.

9. படைதாங்கு சேவைகளில், இலங்கை தொண்டர் படை, இலங்கை மாணுக்கர் படை அல்லது சாரணர் படை ஆகிய நிறுவகங்களில் இருந்திருப்பின் அவற்றின் விபரம் : ————.

10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்கு வேறு விசேட தகைமைகள் இருப்பின் : ————.

11. இதற்குமுன் படைக்கலம் தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு : ————.

12. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக : ————.

| பாடசாலை அல்லது சர்வகலாசாலையின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | பொது/உயர்தொழில்களில் சித்தியடைந்த பயிற்சிகள் |
|---|---|---|---|
| | | | |

13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களை கீழே தருக : ————.

| வேலை கொள்வோரின் பெயர் | செய்த தொழில் | சேவைசெய்த காலம் தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| | | | |

14. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரியும் : ————.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகைமைகளும் சரியானவை என்றும் உண்மை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
திகதி : ————. விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

12–465—12.12.69 ந திகதிய வர்த்தமனி இல. 14,884.

---

## சௌக்கியத் திணைக்களம்

**பொதுச் சௌக்கியப் பொறியியற் பிரிவு**

**வேலைகள் உப பரிசோதகர் பதவிகள், தரம் I ம், தரம் II ம்**

சௌக்கியத் திணைக்களத்தின் பொதுச் சௌக்கியப் பொறியியற் பிரிவில் வேலைகள் உப பரிசோதகர் பதவிகள், தரம் I, தரம் II என்பவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற மாதிரியான விதித்த படிவத்தில் விண்ணப்பத்தை நிரப்பி, அதனை 31.12.1969 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் சௌக்கிய சேவை அதிபதி, தபாற் பெட்டி 500, கொழும்பு 1 என்ற விலாசத்துக்குச் சேரும்படி அனுப்புதல் வேண்டும்.

2. **சம்பளமும், படிகளும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டங்கள் பின்வருமாறு :—

தரம் I ஆண்டொன்றுக்கு ரூபா 4,152—16 × 144—ரூபா 6,456 ஆண்டுச் சம்பளமாக ரூபா 5,304 ஐப் பெறுமுன் வினைத் திறமைகாண் தடை உண்டு.

தரம் II ஆண்டொன்றுக்கு ரூபா 3,540—18 × 90—ரூபா 5,160.

3. **நியமன நியதிகள்.**—(i) பதவிகள் நிரந்தரமானவையும், இளைப்பாறிச் சம்பளம் உள்ளவையுமாகும்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் மிகக்குறுகிய முன்னறிவித்தலில் நியமனங்களை ஏற்குமாறு கேட்கப்படுவர்.

4. **தேவையான தகைமைகள்.**—(i) ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்—

(அ) 31.12.1969 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவரென்றும், 30 வயதுக்கு மேற்படாதவரென்றும் (திணைக்கள ஊழியர்களுக்கு வயதெல்லை நிபந்தனை இல்லை) ;

(ஆ) நற்குணமும், நல்லாரோக்கியமும் உள்ளவரென்றும்;

(ii) நுண்தொழிற் கல்லூரியொன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத காலம் நீடித்த பொறியியல் (சிவில் இஞ்சினியரிங்) பயிற்சிநெறியொன்றைச் சித்தியுடன் பூர்த்தி செய்துள்ளவரென்றும், அல்லது

(iii) உப பரிசோதகர் தரத்துக்கு நியமிக்கப்படுதற்கான பொதுச் சௌக்கியப் பொறியியற் (பப்ளிக் ஹெல்த் இஞ்சினியரிங்) திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளதுடன் தண்ணீர் வழங்கற் திட்டங்கள் அல்லது வடிகாலமைப்புத் திட்டங்கள் அல்லது சாக்கடைத் திட்டங்களில் 2 வருட அனுபவம் உள்ளவரென்றும், அல்லது

(iv) இலங்கை நுண்தொழிற் கல்லூரியில் கனிட்ட நுண்தொழில் உத்தியோகத்தர் (ஜே. ரீ. ஓ.) பயிற்சிநெறியொன்றில், அன்றேல் அளத்தல் I ம், II ம், கட்டடம் அமைத்தல் I ம், II ம் அல்லது சுகாதாரப் பொறியியல் I ம், II ம் என்னும் பாடங்கள் உட்பட்ட உயர் பயிற்சிநெறியொன்றில் பூரண சித்தியுடன் பொறியியல் வேலைகளிலும், கட்டு வேலைகளிலும் 2 வருட அனுபவம் உள்ளவரென்றும், அல்லது

(v) அளத்தலிலும், மட்டம் பார்த்தலிலும் நில அளவையாளர் தலைமை அதிபதியின் உத்தரவுச்சீட்டுப் பெற்றிருப்பதுடன் நீர் வழங்கல், அமைப்பு வேலைகள் போன்ற கட்டு வேலைகளில் ஈடுபட்ட 2 வருட அனுபவம் உள்ளவரென்றும், அல்லது

(vi) குறைந்தது கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன், வடிகாலமைப்பு அல்லது சாக்கடை அமைப்பு வேலைகள் அல்லது கட்டட வேலைகள் அல்லது நீர் வழங்கல்கள் என்பவற்றில் குறைந்தது 7 வருடச் செயல்முறை அனுபவமும், அளத்தலிலும், மட்டம் பார்த்தலிலும் நல்ல அறிவும் உள்ளவரென்றும், அல்லது

(vii) 5 வருடகாலம் நீடித்த சிவில் இஞ்சினியர்க்கலை (சிவில் இஞ்சினியரிங்) அல்லது இயந்திரத் தொழில் இஞ்சினியர்க்கலை (மெக்கானிகல் இஞ்சினியரிங்) தொழிற் பயிற்சியை அன்றேல் மொத்தமாக 5 வருடங்களுக்குக் குறையாத காலத் தொழிற்பயிற்சி, செயல்முறை அனுபவம் என்பவற்றைப் பூர்த்தி செய்துள்ளவரென்றும் (இந்த இரு வகையிலும் அடங்குவோர் கட்டடம் அமைப்பு அல்லது பாரிய கட்டு வேலைகளிலும், அளத்தல், மட்டம் பார்த்தல் என்பவற்றிலும் நல்ல போதனமுறை அறிவும், செய்முறை அனுபவமும் உள்ளவர்களாயிருத்தல் வேண்டும்) திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**கவனிக்க.**—(vi) ஆம், (vii) ஆம் பந்திகளில் அடங்கும் அபேட்சகர்கள் நியமனத்துக்கு முன் ஒரு சோதனைக்குச் சமுகமளிக்கும்படி கேட்கப்படக்கூடும். அத்துடன் அவர்கள் நியமிக்கப்பட்டு 2 வருடங்களுள் உப பரிசோதகர் தரத்துக்குப் பதவி உயர்ச்சியளிக்கப்படுதற்கு இத்திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டுமெனவும் கேட்கப்படுவர்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளை அல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்ப வேண்டும்.—

(i) பிறப்புச் சான்றிதழ்,

(ii) உயர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்,

(iii) நுண்தொழிற் தகைமைகள், பொறியியல் (இஞ்சினியரிங்) வேலைகளில் அனுபவம் எவையேனுமிருப்பின் அவற்றுக்கான சான்றிதழ்கள்.

(iv) அண்மையிற் பெற்ற மூன்று நற்குணச் சான்றிதழ்கள் (ஏற்கெனவே சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை).

6. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I, தொகுதி II ன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. பி. ஏ. பெரேரா,
பிரதி அதிபதி (நிருவாகம்),
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

சௌக்கிய சேவை அதிபதி அலுவலகம்,
தபாற் பெட்டி 500,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு நவெம்பர் மீ 30 ந் வ.

## குறிப்பிட்ட மாதிரிப் படிவம்

**வேலைகள் உப பரிசோதகர் பதவி, தரம் I, தரம் II**

1. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.
2. தற்போதைய விலாசம் : ————.
3. பிறந்த திகதியும், இடமும் : ————.
4. தேசீய இனம் (எந்நாட்டவர்) : ————.
5. தற்போது வகிக்கும் பதவி, ஏதாவதிருப்பின் : ————.
6. தற்போது தொழில் இல்லையெனில், கடைசியாகப் பார்த்த தொழிலும், பெற்ற சம்பளமும் : ————.
7. கல்வித் தகைமைகள் : ————.
(சித்தியெய்திய பரீட்சைகளைக் குறிப்பிடுக)
8. நுண்தொழிற் தகைமைகள் : ————.
(சித்தியெய்திய பரீட்சைகளைக் குறிப்பிடுக)
9. ஈடுபட்ட தொழிற்பயிற்சி முதலியவற்றின் விவரங்கள், ஆற்றிய கடமைகளுடன் : ————.
10. கட்டட அமைப்பு, வடிகாலமைப்பு, தண்ணீர் வழங்கற் திட்டங்கள், பிற பொறியியல் (இஞ்சினியரிங்) வேலைகள் என்பவற்றில் அனுபவம் : ————.
11. எந்தப் பந்தியின் கீழ் தகைமை கோருகிறீர் ? : ————.
12. யுத்தப்படைச் சேவைக்காலம், ஏதாவதிருப்பின் : ————.
13. சிங்கள/தமிழ் அறிவு : ————.
14. வேறேதாவது தகைமைகள் : ————.
15. நற்சான்றிதழ்கள் கொடுத்துள்ளவர்களின் பெயர்கள் : ————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

12–362—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

---

## இலங்கை அரச விமானப்படை

### மருத்துவ தாதிகள் பதவி (பெண்)

இலங்கை அரச விமானப்படைக்கு பயிற்சி பெற்ற மருத்துவ தாதிகள் (பெண்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையிற் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எமக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பளம் ரூபா 4080—90—ரூபா 5430 வருடாந்தமும், ரூபா 4800 க்கு முன் வினைத்திறமை காண் தடையும் கவனிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குக் கிடைக்கும் நலங்கள்—

(i) சலவைச் சகாயப்படி வருடத்திற்கு ரூபா 60.

(ii) சப்பாத்து சகாயப்படி வருடத்திற்கு ரூபா 30 உடன்,

(iii) சௌக்கியப் பகுதித் தாதிமார்களுக்குச் கொடுக்கப்படும் உடைகளுக்குச் சமமான இலவச உடைகள் கொடுக்கப்படும்.

3. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான்—

(i) 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2 ம் திகதியன்று 25 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை நிபந்தனை கிடையாது.)

(ii) 1949 ஆம் ஆண்டின் திருத்தப்பட்டபடியான மருத்துவச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வைத்திய சபையில் பயிற்றப்பட்ட தாதியாகப் பதிவு செய்யப்பட்டவராக அல்லது தாதித் தேர்வுப் பரீட்சையில் தேர்வு பெற்றவரென சௌக்கியப் பகுதியினரின் சான்றிதழ் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். தாதிப் பரீட்சை தேர்வுச் சான்றிதழுடன் மருத்துவிச்சி பரீட்சைச் சான்றிதழுடைய விண்ணப்பதாரிகளுக்கு முதன்மையளிக்கப்படும்.

(iii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—மருத்துவ சட்டத்தின் 105 அத்தியாயத்தின் VII ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவிச்சிகளாகவும், பயிற்றப்பட்ட தாதியாகக் கடமையாற்றி 2 வருட கால அனுபவமுள்ளவர்களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

4. **நியமன விதிகள்.**—பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பளம் உரித்துடையதுமாகும். உபகாரச் சம்பளத் தகுதி 29.4.57 இன் 372 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக்கு அமையப்பட்டுள்ளது.

5. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழ்க் குறிப்பிடப்படும் பத்திரங்களின் பிரதிகளை மாத்திரம் இணைத்து அனுப்ப வேண்டும். (மூலங்கள் அல்ல)

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானத்திற்கு அல்லது கல்விக் கட்டளையிற் கொடுக்கப்பட்ட பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(ஆ) அண்மையிற் பெற்றுள்ள மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இது அவசியமில்லை)

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழும், தொழிற்றுறைச் சான்றிதழும்.

6. விண்ணப்பங்கள் சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளரும், இலங்கை அரச விமானப்படைத் தலைமைக் காரியாலயம், தபாற் பெட்டி இல. 594, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 2 என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும், தவிர நேர்முகமாக இப்பகுதியில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களிடம் கொடுக்கக் கூடாது.

7. ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் அப்பகுதி உயர்தர அதிகாரிகளினூடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

8. அரசாங்க சேவைக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளுக்கு வர்த்தமானித் தொடக்கத்தின் பகுதி (I) தொகுதி (II) ஐக் கவனிக்கும்படி கோரப்படுகின்றீர்கள்.

**குறிப்பு.**—விண்ணப்பப் பத்திரங்களுடன் இணைத்து அனுப்பப்படும் பத்திரங்கள் யாவும் திருப்பித் தரப்படமாட்டா. மேற்குறிப்பிடப்பட்ட தராதரங்களுக்கு அமையாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

ஏ. சி. அரசரத்தினம்,
சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளரும்,
இலங்கை அரச விமானப்படை
விமானப்படைத் தலைவருக்காக.

தலைமைக் காரியாலயம்,
இலங்கை அரச விமானப்படை,
த. பெ. இல. 594,
கொழும்பு 2,
1969 ம் ஆு நவெம்பர் மீ 7 ந வ.

**மாதிரிப் படிவம்**
**மருத்துவ தாதிகள் பதவிக்கான விண்ணப்பம்**
**இலங்கை அரச விமானப்படை**

1. முழுப் பெயர் :————.
(தடித்த எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.

3. பிறந்த தேதியும் வயதும் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்று இணைக்கப்பட வேண்டும்)

4. தேசிய இனம் :————.
(வம்சாவழியாகவா, பதிவு காரணமாகவா என்பதைத் தெரிவிக்கவும்)

5. விவாகமானவரா அல்லவா :————.
விவாகமானவரானால்,
(அ) கன்னிப் பெயர் :————.
(ஆ) கணவன் இருக்கின்றாரா :————.
(இ) (1) கணவனுடன் இருக்கின்றீரா ? :————.
(2) சட்டப்படி பிரிந்து வாழ்தல் :————.
(3) மற்றும்படி :————.
(4) கணவனின் தொழில் :————.
(5) அவர் தொழில் புரியும் இடம் :————.
(6) குழந்தைகளின் எண்ணிக்கை :————.
(அ) மூத்த குழந்தையின் வயது :————.
(ஆ) இளைய குழந்தையின் வயது :————.

6. ஏற்கனவே தொழில் புரிவதானால், கூறுக :————.
(அ) தற்போதைய இடம் :————.
(ஆ) தொழில் புரியும் காலம் :————.

7. படித்த பாடசாலையும், சித்தியெய்திய பரீட்சைகளும் :————.

8. தாதிப் பயிற்சி பெற்ற இடம் :————.

9. மருத்துவிச்சியாகப் பயிற்சி பெற்ற இடம் :————.
(தராதரப் பத்திரப் பிரதி இணைக்கவும்)

10. நற்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும் விலாசமும் :————.
(அண்மையிற்பெற்ற மூன்று நற்சான்றுப் பிரதிகள் இணைக்கவும்)

11. தகப்பனார் அல்லது பாதுகாவலர் பெயரும் விலாசமும் :————.

12. தராதரங்கள் :

| | பேசுதல் | எழுதுதல் | வாசித்தல் |
|---|---|---|---|
| சிங்களம் | ............ | ............ | ............ |
| தமிழ் | ............ | ............ | ............ |
| ஆங்கிலம் | ............ | ............ | ............ |

13. இதற்கு முந்திய ஏதாவது அரசாங்க சேவைகளும், விபரங்களும் : ————.

14. தாதி சேவை புரிவதற்கான பதிவிலக்கம் :————.
(தராதரப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

அரசாங்க சேவையிலிருந்து அல்லது பிற ஸ்தாபனத்திலிருந்து வேலைத் திறமையின்மைக்காக ஓய்வு பெறவில்லையெனவும், வேலை நீக்கம் செய்யப்படவில்லையெனவும் இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் உடனடியாக அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

————————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

12–455—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## இலங்கை தரைப்படை—படையினர் நியமனம்

1. இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையில் நேரடியான போர்வீரராகச் சேர காலிஸ்தானங்கள் இருக்கின்றன —
(அ) கீழ்க்காணப்படும் வரிசைப்பதவிகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தகைமைகளை உடைய விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| நியமனம் | பிரிவு | வேண்டிய விசேட தகைமைகள் |
|---|---|---|
| (i) படையினர் (நுண் தொழில் எழுது வினைஞர்கள்) .. .. | சி. ஏ. ஓ. சி. .. .. | விண்ணப்பகாரர்கள் 18 — 30 வயதுக்குட்பட்டவர்களாயும் சிங்களம்/தமிழ் க. பா. த. பரீட்சை அல்லது 8 ம் வகுப்பு சித்தியடைந்தவர்களாகவும் ஆங்கிலத்தில் நிமிடத்துக்கு 35 சொற்களும் சிங்களத்தில் நிமிடத்துக்கு 20 சொற்களும் தட்டெழுத்துத் தட்டக் கூடியவர்களாயிருத்தல் வேண்டும்.<br>சிங்களம்/ஆங்கிலம் ஆகியவற்றில் சுருக்கெழுத்து எழுதக் கூடியவர்களுக்கும், அலுவலக அனுபவம், பதிவு செய்தல், கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் அனுபவம் உடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். |
| (ii) படையினர் களஞ்சிய பொறுப்பாளர்) | சி. ஏ. ஓ. சி. .. .. | விண்ணப்பகாரர்கள் 18 — 30 வயதுக்குட்பட்டவர்களாயும் 7 ம் வகுப்பு சிங்களம்/தமிழ் சித்தியடைந்தவர்களாயும் இருத்தல் வேண்டும். வாகனப் பொருட்களை கண்டு கூறும் அனுபவமும் பிரத்தியேக பொருட்கள், பொது பொருட்கள் சம்பந்தமாக அனுபவம் இருத்தல் வேண்டும்.<br>இயந்திர வாகனப் பொருட்கள் பற்றி அனுபவம் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

| நியமனம் | பிரிவு | வேண்டிய விடே தகைமைகள் |
|---|---|---|
| (iii) படையினர் (சப்பாத்து பழுதுபார்ப் போர்) | சி. ஏ. ஓ. சி. .. | .. விண்ணப்பகாரர்கள் 18 — 30 வயதுக்குட்பட்டவர்களாயும் 7 ம் வகுப்பு சிங்களம்/தமிழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தோல் பொருட்களை தெரிந்தெடுக்கக் கூடிய அனுபவமும் எல்லாவிதமான சப்பாத்துக்களையும் திருத்தக் கூடிய தகைமையுமிருத்தல் வேண்டும், |
| | | முன்கால் சப்பாத்து ஆணிகளைக் களற்றவும், பளம் குதிக்கால் ஆணிகளையும் புதுப்பித்தலும் திருத்துதலும், |
| | | குதிக்கால் சமப்படுத்துதலும், திருப்பித் தோல் போட்டு திருத்துதலும், |
| | | குதித்தால் பொத்தான்களை அகற்றி புதுப்படுத்துதலும் பொத்தான்கள் பூட்டுதலும், நூல் கொண்டு சப்பாத்தின் மேல் பாகத்தைத் தைத்துப் புதுப்படுத்துதல், |
| | | சப்பாத்து தைக்கும் இயந்திரங்களை இயற்றுதல் அனுபவம் இருத்தல் கூடுதற் தகைமையாகும். |
| (iv) படையினர் (தச்சர்கள்) .. | சி. ஏ. ஓ. சி. .. | .. விண்ணப்பகாரர்கள் 18 — 40 வயதுக்குட்பட்டவர்களாயும் 7 ம் வகுப்பு சிங்களம்/தமிழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும், தச்சு வேலையனுபவம் இருத்தல் வேண்டும். |
| (v) சாரதிகள் (வாகனப் போக்குவரத்து) | சி. ஏ. ஓ. சி. .. | .. விண்ணப்பகாரர்கள் 18 — 40 வயதுக்குட்பட்டவர்களாயும் 7 ம் வகுப்பு சிங்களம்/தமிழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வாகனம் ஓட்டுதல் உத்தரவுப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும், வாகனம் ஓட்டுதலுக்கும் பழுதுபார்த்தலுக்கும் அனுபவம் இருத்தல் வேண்டும், |
| | | பாராமான வாகனங்களை ஓட்டுதலுக்கு உத்தரவுச்சீட்டு உடையோருக்கும் பழுது பார்த்தல் அனுபவம் உடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும், |
| (vi) படையினர் (தையற்காரர்கள்) .. | சி. ஏ. ஓ. சி. .. | .. விண்ணப்பகாரர்கள் 18 — 30 வயதுக்குட்பட்டவர்களாயும் 7 ம் வகுப்பு சிங்களம்/தமிழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும். உடுப்புகள் அளவையெடுத்தல், திருப்பித் தைத்தல், திருத்துதல் ஆகியவற்றில் அனுபவம் இருத்தல் வேண்டும். போர் வீரர்களின் உடுப்புகளைத் தைத்தலிலும் தையல் மெசின்களைப் பாவிப்பதிலும், அனுபவம் இருத்தல் வேண்டும். |
| (vii) கோப்ரல் (குளிர்ப்பெட்டி பொறியியலாளர்கள்) | சி. ஈ. எம். ஈ. .. | .. விண்ணப்பகாரர்கள் 18 — 30 வயதுக்குட்பட்டவர்களாயும் க. பா. த. பரீட்சை அல்லது 8 ம் வகுப்பு சிங்களம்/தமிழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பிரசித்தி பெற்ற ஸ்தாபனங்களில் ஒன்றில் 5 வருட குளிர்ப்பெட்டி பழுதுபார்த்தல் சம்பந்தமாக அனுபவம் இருத்தல் வேண்டும். |
| (viii) படையினர் (காய்ச்சியொட்டுவோர்)—பிரிவு வகுப்பு | 1 வது வெளிக்கள பொறியியலாளர்கள், சி. ஈ. | .. விண்ணப்பகாரர்கள் 18 — 30 வயதுக்குட்பட்டவர்களாயும் 7 ம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும் அத்துடன் கீழ் குறிப்பிட்டுள்ளவைகளில் ஏதேனும் ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும், |
| | | தொழிற்பகுதியால் நடாத்தப்பட்ட அல்லது நுண் தொழிற் கல்லூரியால் நடாத்தப்பட்ட நுண் தொழில் பயிற்சியை சித்திகரமாய் முடித்தது எனக் காட்டும் சான்றுப்பத்திரம், அல்லது |
| | | பிரசித்திபெற்ற ஏதேனும் ஸ்தாபனம் ஒன்றில் 3 வருடத்துக்குக் குறையாமல் சேவை செய்தது எனக் காட்டும் சான்றுப்பத்திரம். |

(ஆ) விண்ணப்பகாரர்களின் தகுதியை பரிசோதிக்குமுகமாக தேர்தலுக்கு முன் அவர்கள் ஒரு தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்,

(இ) 1 ஆம் பந்தி (அ) பிரிவில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. **பொது நிபந்தனைகள்**—இராணுவத்தில் நேரடியான போர்வீரர்களாகச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு முதலாம் பந்தி (அ) பிரிவில் கேட்கப்பட்டுள்ள விசேட தகைமைகளையும் மேலதிகமாக பின்வரும் பொது நிபந்தனைகளையும் விண்ணப்பகாரர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும் :—

ஒரு விண்ணப்பகாரர் :—

(அ) பரம்பரையான அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப்பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) 1970.1.3 திகதியன்று 18 வயதுக்குக் குறையாத வராயும் 40 வயதுக்குக் கூடாதவராயுமிருத்தல் வேண்டும் ;
(இ) அரசகரும மொழியில் தேர்ச்சி உண்டு என்பதைத் தெளிவு படுத்துதல் வேண்டும் ;
(ஈ) 5 ம் வகுப்பு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;
(உ) தரைப்படைத் தளபதியின் திருப்திற்கேற்ப வைத்தியப்பரிசோதனை ஒன்றில் சித்தியடைதல் வேண்டும் ;
(ஊ) உயரத்தில் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாதவராயிருத்தல் வேண்டும்.

எனினும் தரைப்படைத் தளபதியின் தீர்மானத்திற்கேற்ப தகுதியுடையவரெனக் காணப்படும் வேறு தகுதிகள் உடையவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டவராயினும் அல்லது உயரத்தில் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைந்தவராயினும் அல்லது இரு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவராயினும் இருப்பின் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

3. இக்காலிஸ்தானங்களைப் பூர்த்தி செய்யக் கோரும் இராணுவத்தில் இருந்து திரும்பியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள், மேற் குறிப்பிட்ட பொது நிபந்தனைகட்கு மேலதிகமாகப் பின்வரும் நிபந்தனைகளை நிரூபித்தல் வேண்டும் :—

(அ) இலங்கைப் பாதுகாப்புப் படையுடன்கூடிய பிரித்தானிய சாம்ராச்சிய இராணுவ படையில் ஒரு வருடத்திற்குக் குறையாத சேவையுடையவர்களாயும் ;

(ஆ) சேவையில் இருந்து விலகிய போது சேவைத்தரம் குறைந்தபட்சம் " மிக நன்று " என்றுதல் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

4. **சேவைக்காலம்.**—ஒரு போர்வீரர் சாதாரணமாக 5 வருடங்கள் கட்டாய சேவையிலும் 7 வருடங்கள் மேற்படையிலும் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர். இக்கால வரையறை முடிவில் சேவையில இருந்து விடுவிக்கப்படலாம். எனினும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் ஓர் போர்வீரர் தனது சேவையை மேலும் 12 வருடங்கள் வரை சேவைக்காகச் சேர்த்துக் கொள்ளவும் எல்லாமாக 32 வருடங்கள் வரை சேவை செய்ய அனுமதிக்கப்படலாம்.

5. **சம்பளமும் சகாயப்பணமும்.**—தரைப்படையின் நிரந்தரப் படையில் சேவையில் இருக்கும் ஏனைய தரத்தினரைப் போன்று 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் திகதிய 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் இராணுவ வேதனச் சட்டக் கோவையின் முதலாம் பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி. சம்பளமும் சகாயப் பணமும் பெறுவதற்கு இவர்கள் உரிமையுடையவர்களாகக் கருதப்படுவர் :

(அ) **தொழில் நுணுக்கமற்ற போர்வீரர்களுக்கான சம்பள விகிதம்**—1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனக் கட்டளைச் சட்டத்தின்படி தனித்துவ அல்லது படையினர் தரத்தில் இருந்து வரண்ட் உத்தியோகத்தர் I ம் தரம் வரையில் உள்ள சமமான தரத்தினையுடைய தொழில் நுணுக்கமற்ற போர் வீரர்களுக்கான மாதாந்தச் சம்பள விகிதம் கீழ் வருமாறு :—

| தரம் | மாதாந்தச் சம்பள விகிதம் ரூ. ச. |
|---|---|
| படையினர் அல்லது சமமான .. .. .. .. | 70 0 |
| லான்ஸ் கோப்ரல் அல்லது சமமான .. .. .. .. | 85 0 |
| கோப்ரல் அல்லது சமமான .. .. .. .. | 115 0 |
| ஸார்ஜன்ட் .. .. .. .. .. | 180 0 |
| ஸ்டாப் ஸார்ஜன்ட் .. .. .. .. .. | 202 0 |
| வரண்ட் உத்தியோகத்தர் II வகுப்பு .. .. .. .. | 220 0 |
| றெஜிமென்டல் குவாட்டமாஸ்டர் ஸார்ஜன்ட் .. .. .. | 235 0 |
| வரண்ட் உத்தியோகத்தர் I வகுப்பு .. .. .. .. | 250 0 |

(ஆ) **தொழில் நுணுக்கப் போர் வீரர்களுக்கான சம்பள விகிதம்.**—தொழில் நுணுக்கமுள்ளவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கோப்ரல் தரத்தில் அல்லது அதற்குச் சமமான அல்லது குறைந்த தரத்தில் உள்ள போர்வீரர்களுக்கு, அவரவர் தொழில் குழு நிலைக்கு ஏற்பவும், தரத்தின் படியும் பொருந்தும் வகையிலான வருடாந்தச் சம்பள விகிதம் பின்வருமாறு :—

| தரம் | "X" தொழிற்றுறைக்குழு | | | "A" தொழிற்றுறைக்குழு | | | "B" தொழிற்றுறைக்குழு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா |
| படையினர் அல்லது சமமான .. | 1,470 .. | 1,170 .. | 1,020 .. | 1,350 .. | 1,110 .. | 960 .. | 1,260 .. | 1,050 .. | 930 |
| லான்ஸ் கோப்ரல் அல்லது சமமான .. .. | 1,620 .. | 1,320 .. | 1,170 .. | 1,500, .. | 1,260 .. | 1,110 .. | 1,410 .. | 1,200 .. | 1,050 |
| கோப்ரல் அல்லது சமமான .. | 1,980 .. | 1,680 .. | 1,530 .. | 1,860 .. | 1,620 .. | 1,470 .. | 1,770 .. | 1,560 .. | 1,410 |

ஸார்ஜன்ட் தரத்தில் உள்ள அல்லது அதற்குச் சமமான அல்லது உயர் தரத்தில் உள்ள தொழில் நுணுக்கமுள்ளவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட போர்வீரர்கட்கு அவரவர் தராதரத்திற்குப் பொருந்தும் வகையிலான வருடாந்த சம்பள விகிதம் வருமாறு :—

| தரம் | உயர்தர தொழில் நுணுக்கம் உடையோர் | | ஏனைய தொழில் நுணுக்கம் உடையோர் |
|---|---|---|---|
| | பிரிவு "X" வகுப்பு I ரூபா | பிரிவு "A" வகுப்பு I ரூபா | பிரிவு "B" வகுப்பு I ரூபா |
| ஸார்ஜன் அல்லது சமமான .. .. | 2,520 .. | 2,430 .. | 2,280 |
| ஸ்டாப் ஸார்ஜன்ட் அல்லது சமமான .. .. | 2,880 .. | 2,790 .. | 2,550 |
| வரண்ட் உத்தியோகத்தர் வகுப்பு II .. .. | 3,180 .. | 3,000 .. | 2,760 |
| றெஜிமென்டல குவாட்டர் மாஸ்டர் ஸார்ஜன்ட் .. | 3,360 .. | 3,180 .. | 2,940 |
| வரண்ட் உத்தியோகத்தர் வகுப்பு I .. .. | 3,540 .. | 3,360 .. | 3,120 |

(இ) **ஜீவிய சகாயப் பணமும் விசேட சகாயப் பணமும்.**—பின்வரும் பிரிவுகளைச் சார்ந்த போர்வீரர்கட்கு அரசாங்க விகிதப்படி ஜீவிய சகாயப் பணமும் விசேட சகாயப் பணமும் வழங்கப்படும் :

(1) இராணுவச் செலவில உணவு கொடுக்கப்படாத விவாகமான போர்வீரர் ;
(2) பாசறைக்கு வெளியே வசித்தற்கு அனுமதி பெற்ற விவாகமாகாத போர்வீரர் ;
(3) பாசறையில உணவு கொள்ளாது விடுதலையிலிருக்கும் விவாகமாகாத போர்வீரர் .

இராணுவச் செலவில் உணவு கொடுக்கப்படும் விவாகமான அல்லது விவாகமாகாத போர் வீரர்கள :—

(1) அரசாங்க விகிதப்படியுள்ள ஜீ. ச. பணத்தினதும் விசேட ச. பணத்தினதும் கூட்டு மொத்தத் தொகைக்கும் ;
(2) தகுதிக்கேற்ப இராணுவத் தளபதியால் உணவுச் செலவாக நிர்ணயிக்கப்படும் மொத்தத் தொகைக்குமுள்ள வித்தியாசத்திற்கே உரித்துடையவராவர்.

(ஈ) **வீட்டு வாடகை.**—இராணுவ அல்லது அரசாங்க வீடுகள் வழங்கப்படாத விவாகமான போர்வீரர்கட்கும் அரசாங்க ஊழியருக்கு அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப, தனது நியமனத்திற்குத் தக்கதாக விசேட வீட்டு வசதிகள் அல்லது பாசறையில் தங்கும் வசதியளிக்கப்படாத விவாகமாகாத போர்வீரர்கட்கும் வீட்டு வாடகை வழங்கப்படும். இராணுவ அல்லது அரசாங்க வீடுகளில் வசிக்கும் போர் வீரர்கள் வீட்டு வாடகைக்கு உரித்துடையராகார்.

(உ) **சலவைச் செலவு :**

(1) பாசறையில் தங்கியிருக்கும் ஒரு போர்வீரர் தனது இராணுவ உடைகளை இராணுவச் செலவில் சலவை செய்து கொள்ளுவதற்கு அருகதையுடையவராவர் ;
(2) வெளியே வசிக்கும் ஒரு போர்வீரர் இராணுவத் தளபதியின் நிர்ணயத்திற்கேற்ப தனது இராணுவ உடைகளைச் சலவை செய்வதற்காக ஒரு சலவைச் செலவுப்படியைப் பெற அருகதையுடையவராவர்.

(ஊ) **சேவைக்கால சம்பள உயர்வு.**—இராணுவத்தில் திருப்திகரமாகச் சேவை செய்யும் ஒவ்வொரு ஐந்து வருடகாலத்திற்கும் மாதாந்தம் ரூபா 4.50 வீதமான சம்பள உயர்வு நிரந்தரப் போர்வீரர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

(எ) **தகுதிச்சம்பள உயர்வு.**—கோப்ரல் முதல் வரண்ட் உத்தியோகத்தர் II வரையுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நான்கு வருடகால சேவைக்கும் மாதாந்தம் ரூபா 7.50 விகிதத்திலான தகுதிச் சம்பள உயர்வுக்கும், வரண்ட் உத்தியோகத்தர் I தகுதியிலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு நான்கு வருடகால சேவைக்கு மாதாந்தம் ரூபா 15/- விகிதத்திலான சம்பள உயர்வுக்கும் உரித்துடையவராவர். கோப்ரல் அல்லது சமமான தரத்தையுடைய போர்வீரர் நான்கு தகுதிச்சம்பள உயர்வுக்கு மாத்திரமே உரித்துடையவராவர்.

(ஏ) **கைம்பெண் அநாதைப்பிள்ளைகளின் உபகாரச் சம்பள நிதி.**—இராணுவவீரர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவரும் தன் சம்பளத்தின் 4 % மானதைக் கழித்துத் தனது உதவு தொகையாக படைக்கலந்தாங்கு சேவைகளின கைம்பெண் அநாதைப் பிள்ளைகளின் உபகாரச் சம்பள நிதிக்குச் சேர்ப்பதற்கு எழுத்து மூலம் தன் சம்மதத்தைக் கொடுத்தல் வேண்டும்.

6. இவ்வறிவித்தலின் 1 ம் பந்தி (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நேரடியான சேவைக்கு உரிய காலி ஸ்தானங்களுக்கான விண்ணப்பங்கள் யாவும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தனவாக இருத்தல் வேண்டும் :—

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்றதாகவும், விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் விண்ணப்பதாரிகளின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு நிரப்பப்பட்டனவாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் யாவும். இராணுவ ஆள்திரட்டும் அதிகாரி, இராணுவ தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்று விலாசம் இடப்பட்டனவாக இருத்தல் வேண்டும. விண்ணப்பப் பத்திரத்திலும் அவை அனுப்பப்படும் உறையிலும் " நிரந்தரப் படையில் சேர்வதற்கான விண்ணப்பம் " என்று குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1970 வருடம் தை மாதம் 3 ம் திகதி பி.ப. 4.30 மணிக்கு முன் இராணுவத் தலைமைக் காரியாலயத்தில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பதவி, தரம் (கூறு, நியமனம்) ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும் ;

(ஈ) பின்வரும் சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் மாத்திரமே விண்ணப்பப் பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும் :—

(1) பிறப்புச் சாட்சிப் பத்திரம் அல்லது, (அல்லது பிறப்பு பதிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகளைப் பொறுத்த வரை) பிரதம பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட விசேட வயதுச் சான்றுப் பத்திரம். ஞானஸ்னனப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்கட்கமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றுப் பத்திரம் அல்லது ஜாதகம் அல்லது இதுபோன்ற வேறும் பிறப்புக் குறிப்புகள் எதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது ;

(2) பெற்றுக்கொண்ட ஆகக் கூடிய கல்வித் தராதரப் பத்திரம் ;

(3) அண்மையில் பெற்றுக்கொள்ளப் பட்டனவும் விண்ணப்பதாரியின் கல்வித் தராதரம், நடத்தை, விண்ணப்பிக்கும் பதவிக்கான தகுதி என்பன பற்றிக் குறிப்பிடும் மூன்று நற்சான்றுப் பத்திரங்கள். ஒரு விண்ணப்பதாரி ஏற்கனவே தொழில் செய்பவரானல் இதில் ஒன்று அவரது தற்போதைய மேலதிகாரியால் கொடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

குறிப்பு.—(i) விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மாத்திரமே இச்சான்றுப் பத்திரங்களின் **உண்மைப் பிரதிகள் சமர்ப்பிக்கப் படல் வேண்டும் ;**

(ii) விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்பியதன் மூலம் தவறி அல்லது காணமல் போகும் எவ்விதமான தஸ்தாவேஜுகளின் உண்மை பிரதிகள் சம்பந்தமாக இராணுவத் தலைமை நிலையம் எநத வகையான பொறுப்பும் ஏற்றுக் கொள்ள மாட்டாது ;

(உ) தபாலில் அனுப்பியதால் தவறும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாகச் செய்யப்படும் எவ்விதமான முறையீடுகளும் கவனிக்கப்பட மாட்டாது ;

(ஊ) இலங்கை தொண்டர் படையின் அங்கத்தவர்கள் தம் விண்ணப்பங்களைத் தம் சேனைத் தலை நிலையத்திற்கூடாகச் சமர்பித்தல் வேண்டும் ;

(எ) ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவருக்கூடாகவே அனுப்பப்படல் வேண்டும் ;

(ஏ) அரசாங்கத் திணைக்களத் தலைவர்கட்கூடாக அனுப்பப்பட்ட, ஆனல் உரிய காலத்திற்குப் பின் இக்காரியாலயத்திற்குக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வரையில், தாமதத்திற்குப் போதிய காரணத்தைக் காட்டி, விண்ணப்பங்கள் உரிய காலத்தில் கிடைத்ததென்றும் அது ஏற்றுக் கொள்ளப்படலாம் என்றும் திணைக்களத் தலைவரால் சிபாரிசு செய்யப் பட்டிராத விடத்து இந்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது ;

(ஐ) இராணுவ தெரிவுக் குழுவால் தகுதியுள்ளவரெனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் தமது சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேடகப்படுவர். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய இடம், நேரம், காலம் என்பன பற்றி இவர்கட்குத் தனித்தனி அறிவிக்கப்படும் ;

(ஒ) நேர்முகப் பரீட்சைக்குப் பின் சேர்த்துக் கொள்ளுவதற்குத் தகுதியுடையவர் எனத் தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகளில் வைத்தியப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அழைக்கப்படுவர் ;

(ஓ) தேவையான பரிசோதனைகளும், நேர்முகப் பரீட்சையும் நடைபெற்ற பின் இராணுவத் தெரிவுக் குழுவால் இராணுவ நிரந்தரப் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள், இராணுவ பயிற்சி நிலையத்தில் அல்லது குறிப்பிட்ட வேறோரிடத்தில் பயிற்சிக்காக அனுப்பப்படுவர் ;

(ஔ) தமது பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதத்தை எழுத்து மூலம் சமர்பித்தால் அன்றி 21 வயதுக்குக் குறைந்த எவரும் இராணுவ நிரந்தரப் படையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் ;

(க்) தெரிவு செய்யப்பட்டு இராணுவ நிரந்தரப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் அனைவரும் 1956 ம் வருட 33 ம் இலக்க அரசகரும மொழிச் செயல் முறைக் கட்டளைச் சட்டத்தை அமுல் நடத்தும் வகையில் உள்ள எல்லாக் கட்டளைச் சட்டங்கட்கும் இது சம்பந்தமாக இனிமேல் நடைமுறைக்கு வரும் கட்டளைச் சட்டங்கட்கும் அடங்கி நடக்கவேண்டும் எனக் கட்டாயப் படுத்தப் படுகின்றனர் ;

(கா) எவரேனும் ஒருவர் ஒரு விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பினல் அவருக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பதன் மூலம் அவரைச் சிபாரிசு செய்யலாம். அன்றி விண்ணப்பதாரி தெரிவு பெறுவான் வேண்டி வேறெந்த வகையிலேனும் அவருக்காகப் பிரசாரம் செய்தல் அல்லது சலுகை பெற முயற்சித்தல் போன்ற வேறும் எத்தனங்கள், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை நிராகரித்தற்கு ஏற்ற ஏதுக்களாகும் ;

(கி) விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் எவையேனும் பிழையானவை என்று விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட முன்பு கண்டு பிடிக்கப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் எப்போதாவது கண்டுபிடிக்கப்பட்டால், சம்பந்தப்பட்டவர் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இராணுவத்தில் இருந்தும் விலக்கப்படுவர்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
பிரதான அதிகாரி,
தரைப்படைத் தளபதிக்காக.

இராணுவத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,
1969 ம் ஆடு டிசம்பர் மீ 4 ந் உ.

## இலங்கை இராணுவ நிரந்தரப் படையில் சேருவதற்கான மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. பிறந்த திகதி : ———— வயது : ————.
4. சித்தியடைந்துள்ள கூடுதலான கல்வித் தராதரம் : ————.
   (பாடங்களும் திகதிகளும் தருக)
5. சேர விரும்பும் பிரிவு : ————.
   (1 ம் பந்தியின் பிரமாணம், நியமனம், கூறு ஆகியவை குறிப்பிடப்படல் வேண்டும்)
6. 1 ம் பந்தியின் பிரமாரம் (அ) பிரிவின் கீழ் நீர் கூடுதலான தகுதி உடையவரா ? அப்படியாயின் பூரண விபரம் தருக : ————.
7. பாடசாலை அல்லது கல்லூரியை விட்டு விலகியபின் செய்த தொழில் : ————.
8. உயரம் : — அடி : ————. அங்குலம் : ————.
9. தேசிய இனம் : ————.
10. அருகாமையில் உள்ள பொலீஸ் நிலையம் : ————.
11. இதற்கு முதல் செய்த தொழிலில் அனுபவம் இருந்தால், அதன் பிரிவும் தகுதிகளும் : ————.
12. இராணுவ (யுத்தகால சேவையுட்பட) கடற் படை, ஆகாயப் படை, தொண்டர் படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருந்தால், பிரிவு, தகுதிகள் ஆகியவறுடன் பூரண விபரம் தருக : ————.
13. இராணுவத்தில் இருந்து விலகிய பொழுது உமது நடத்தை : ————.
14. வேறு தகுதிகள் இருப்பின் (விளையாட்டு சம்பந்தப்பட்டவையுட்பட) : ————.
15. 6 ம் பந்தியில் (ஈ) 3 ம் பிரிவின் பிரகாரம் நற்சான்றுப்பத்திரம் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் தகுதிகளும் :—
    (1) ————.
    (2) ————.
    (3) ————.
16. விண்ணப்பக்காரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டிய உறுதி :

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

12-419—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

---

## கடற்படைத் தொண்டர் சேவையில் மாலுமிகள் பதவிகளுக்கான வெற்றிடங்கள்

கடற்படைத் தொண்டர் சேவையில் மாலுமிகள் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள.

2. விண்ணப்பகாரர் கீழ்க்காணும் தகைமைகளை உடையவராக இருத்தல் வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் திகதி பதினெட்டு (18 வயதிற்கு) வயதிற்குக் குறையாதவராயும் முப்பது (30 வயதிற்கு) வயதிற்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(இ) கடற்படைத் தளபதியினால் விதிக்கப்பட்ட வைத்தியப் பரிசோதனையில் திருப்தி அளிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) எட்டாம் (8ஆம் வகுப்பு) வகுப்புச் சோதனையிலோ அதற்குச் சமமான சோதனையிலோ அல்லது அதைவிட உயர்ந்த சோதனையிலோ சித்திபெற்றவராக இருத்தல் வேண்டும் ;

(உ) மேற்படி 2 (ஆ) பந்தியில் குறிப்பிட்ட வயதெல்லைக் கட்டுப்பாட்டைக் கடற்படைத் தளபதி தன் தற்றுணிபின்படி சில வேளையில் மாற்றவோ அல்லது நீக்கவோ செய்யலாம்.

**குறிப்பு** : விண்ணப்பகாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கும், விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கும் இணங்கி நடக்கத் தயாராக இருத்தல் வேண்டும். விசேடம் பெற்றவருக்கு அல்லது தொழில் நுட்பத்துறையிலே ஈடுபட்டவருக்கு விசேட சலுகை அளிக்கப்படும்.

3. சாதாரண காலங்களில் கடற்படைத் தொண்டர் மாலுமி ஒருவர் சில அணிவகுப்புப் பயிற்சிக்கும் 14 நாட்கள் வருடாந்தப் பாசறைப் பயிற்சிக்கும் தோற்றும்படி வேண்டப்படுவர்.

4. கடற்படைத் தொண்டர் சேவைப் பிரமாணங்களுக்கு அமைய கடற்படைத் தொண்டர் சேவை மாலுமி ஒருவருக்கு கைச்செலவுக்கென முக்கியமான சில படிகள் வழங்கப்படும்.

5. பொதுச் சேவை நிபந்தனைகள் கடற்படைத் தொண்டர் படையின் பிரமாணங்களுக்கும், இலங்கை அரச கடற்படை அதிகாரச் சட்டத்திற்கும் உட்பட்டதாக இருக்கும். இலங்கைச் சட்டவாக்கத்தின் மீளவாய்ந்த பதிப்பின் 358 ஆம் அதிகாரக் கடற்படைச் சட்டத்தின் 7 ஆம் 16 ஆம் பிரிவுகளுக்கமைய ஒரு தொண்டர் முழு நேர சேவைக்குத் திரட்டப்படுவர், முழு நேர சேவைக்குத் திரட்டப்பட்ட தொண்டர் உறுப்பினர் ஒருவருக்கு இலங்கை அரச கடற்படை நிரந்தர சேவையிலிருக்கும் மாலுமிகளுக்கு உரித்தான படியும் செலவுப்படிகளும் வழங்கப்படும்.

6. இவ்வெற்றிடங்கள் கடற்படைத் தொண்டர் படையில் தான் இருப்பதென்பதையும் நிலையான கடற்படையில் அல்லவென்பதையும், தெரிவு நிரந்தர ஊழியம் அளிக்கும் பதவி அல்லவெனபதையும் இத்தால் வலியுறுத்தப்படுகிறது.

7. விண்ணப்பகாரரை நன்குகத் தெரிந்த பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து கடந்த இரு வருடங்களுக்குள் பெறப்பட்ட ஆகக் குறைந்தது இரு நற்சான்றிதழ்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

8. மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமையப் பெறப்படும் விண்ணப்பங்களின் தொகை கூடுதலாக இருக்கும் பட்சத்தில் ஓர் பூர்வாங்கமான தேர்வு நடைபெறும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்குப் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினால் இறுதித் தெரிவு நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகருக்கு அப்பரீட்சைக்குரிய இடம், நேரம், நாள் ஆகியவைகள் அறிவிக்கப்படும். பிரயாணச் செலவோ வேறு எச்செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் கொடுக்கப்படமாட்டா. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை அறிவிக்கப்படமாட்டா.

9. இவ்விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைப் போல் விண்ணப்பங்களைத் தயார் செய்து, " ஏவுநர் அலுவலர், கடற்படைத் தொண்டர் படை, கொச்சிக்கடை, கொழும்பு 13 " என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்திலும் விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேற்புறத்திலும் " கடற்படைத் தொண்டர் படை மாலுமிகள் பதவிக்கு விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும். 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் திகதி பகல் 12 மணிக்கு முன் கடற்படைத் தொண்டர் படைக்குக் கிடைக்கும் வண்ணம் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

ஆர். கதிர்காமர்,
றியர் அட்மிறல்,
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
கொழும்பு,
1969, நொவெம்பர் 29 ஆம் திகதி.

**கடற்படைத் தொண்டர் சேவையில் சேர்தலுக்கான விண்ணப்பப் படிவம்**

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) : ————.
2. தபால் முகவரி : ————.
3. அண்மையிலுள்ள தபாற் தந்திக் கந்தோர் : ————.
4. அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் : ————.
5. பிறந்த திகதி : ————. வயது : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரப் பிரதி ஒன்று இணைத்தல் வேண்டும்)
6. நாட்டு இனம் : ————.
7. இராணுவ, கடற்படை, ஆகாயப்படை, தொண்டர் படை (யுத்தகால சேவை உட்பட) ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருந்தால், அப்பிரிவு, திகதிகள் ஆகியவற்றுடன் பூரண விபரம் தருக : ————.
8. மேற்படி 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சேவையிலிருந்து விலகும்போது இருந்த நடத்தை : ————.
(விலகல் சான்றிதழின் பிரதி ஒன்று இணைத்தல் வேண்டும்)
9. சித்தியடைந்த பரீட்சைப் பாடங்களும் திகதிகளும் : ————.
(கல்வித் தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்தல் வேண்டும்)
10. தொடர்புடைய வேறு விபரங்கள் : ————.
(விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியன)
11. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டபின் ஈடுபட்ட தொழில் : ————.
12. தற்பொழுது வேலை கொடுத்திருப்பவரின் பெயரும் முகவரியும் : ————
(கடற்படைத் தொண்டர் சேவையில் சேருவதற்கு ஆட்சேபனை இல்லை என்று கூறும் கடிதம் ஒன்று வேலை கொடுத்தவரிடமிருந்து பெற்று இணைத்தல் வேண்டும்)
13. உயரம் : ————. அடி : ————. அங்குலம் : ————.
14. நற்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்களும் முகவரிகளும் : ————.
15. விவாகமானவரா ? தனியாளா ? : ————.
16. விண்ணப்பகாரர் அளிக்க வேண்டிய உறுதியுரை :

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவுக்கு எட்டியவரை சரியானவை என்று உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

(**குறிப்பு**.—விண்ணப்பங்கள் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.)

12–330—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## சந்தைப்படுத்தும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்

### கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம்

கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழிற்றிணைக்களத்தில் சந்தைப்படுத்தும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. விண்ணப்பங்கள், கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பித்து, அதிபர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம், ரொறிங்டன் சதுக்கம், கொழும்பு 7, என்று விலாசமிட்டு, தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில், " சந்தைப்படுத்தும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி " என்று குறிப்பிட்டு, அதிபருக்கு 1970 ம் ஆண்டு சன்வரி மாதம் 13 ம் தேதியன்றோ அல்லது, அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. **சம்பள விகிதம் :** வருடமொன்றிற்கு ரூபா 5,736 ஆக, ஆரம்பித்து வருடமொன்றிற்கு ரூ. 9,480 வரை ரூபா 144 கொண்ட 6 வருடாந்த சம்பள உயர்வும், ரூபா 180 கொண்ட 8 வருடாந்த சம்பள உயர்வும், ரூபா 240 கொண்ட 6 சம்பள உயர்வுமாக உயர்ச்சி பெறுகையில், வினைத்திறமைகாண் தடைகள், ரூ. 6,780 ரூ. 7,320 ரூ. 8,280 நிரல்களைப் பெறுமுன் அடைந்திருத்தல் வேண்டும்.

3. **சேவை நிபந்தனைகள் :**

(அ) இப்பதவி தற்காலிகமானதும் இளைப்பாற்றுச் சம்பளமற்றதுமாகும். தேர்ந்தெடுக்கப்பட்டவர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு நிதியளித்தல் வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையிலுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் நியமனமாக நியமிக்கப்படுவார்.

4. **வயதெல்லை :** விண்ணப்பதாரர் 21 வயதிற்குக் குறையாதவராயும், 40 வயதிற்குக் கூடுதலாகவுமில்லாதவராயிருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவராயின், மேற்கூறிய வயதெல்லைக் கட்டுப்பாடு இருக்க மாட்டாது).

5. **கல்வியும் ஏனைய தராதரங்களும் :**
ஒவ்வொரு விண்ணப்பதாரரும் திருப்திகரமான சான்றுகள் பின் வருவனவற்றிற்கு அளித்தல் வேண்டும் :—

(அ) (1) தாம் சிறந்த உடல் வலியும் நற்குணம் படைத்தவரென்றும்,

(2) தாம், பொருளாதாரத்திலும், புள்ளிவிபரங்களிலும் பட்டதாரியென்றுமோ, அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையால், வர்த்தகத்திற்கென வழங்கப்பட்ட தகுதித் தேர்வுப் பத்திரமோவுடையரென்றும், சான்றளித்தல் வேண்டும்.

(ஆ) இத்திணைக்களத்தால் நடாத்தப்பட்டு வரும் குடிசைக் கைத்தொழில் விற்பனை நிலையத்திலோ அல்லது "லக்சல" நிலையத்திலோ, தொடர்ச்சியாக 5 வருடகாலம் நிர்வாகியாகத் திருப்திகரமாய்க் கடமையாற்றி, அப்பதவியில் நிரந்தரமாக்கி உறுதிப்படுத்தப்பட்டவரும், கீழ்த்தரப்பட்ட ஏதாவது ஒன்று பற்றிய தகைமையுடையவராயிருந்தால், இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

(1) இலங்கைக் கைத்தொழில் நுட்பக் கல்லூரியால், வர்த்தகத்திற்கென, தகுதித் தேர்வுப் பரீட்சைக்குரிய, இரண்டாம் வருடப்பரீட்சைப் பத்திரம் வழங்கப்பட்டவராயோ, அல்லது

(2) "சாட்டேட்" செயலாளர்கள் ஸ்தாபனத்தாரால் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சைச் சான்றிதழுடையவராயிருத்தல் வேண்டும்.

குறிப்பு :—விற்பனை மேம்பாடுகளிலும், வர்த்தக சம்பந்தமான பிரச்சனைகளிலும், சந்தைப்படுத்தும் வேலைகளிலும், அறிவு அனுபவங்கள் கொண்டவருக்கு விசேஷ கவனஞ் செலுத்தப்படும்.

6. விண்ணப்பதாரர் பின்வரும் பத்திரங்களின் (மூலங்களல்ல) பிரதிகள் இணைத்தனுப்பல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (பாசாலைப் பிரவேசங்களுக்கென வழங்கப்பட்ட சான்றிதழ்களோ, ஞானஸ்நானப் பத்திரங்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)

(ஆ) ஆகக் கூடுதலான கல்வித் தராதரத்தினதும், அனுபவங்களினதும் சான்றிதழ்கள்.

(இ) இப்பதவிக்குத் தகைமையுடையவரென்றும், நற்குணம் படைத்தவரென்றும். அண்மையிற் பெறப்பெற்ற இரண்டு சான்றிதழ்கள். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இது தேவைப்படாது)

**ஆட்சேர்க்கும் முறை :**

நேர்முகப் பரீட்சை முடிவடைந்ததும் தகுதியான ஒருவரை இதற்கென விசேஷமாக அமைக்கப்பட்ட சபையொன்று தேர்ந்தெடுக்கும்.

**குறிப்பு :—**

தகவுத் திறன் பெற்ற விண்ணப்பதாரர், கொழும்பில் ஒரு குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றல் வேண்டும். இப்பரீட்சையால் ஏற்படும் பிரயாணச் செலவுகளுக்கோ ஏனைய செலவுகளுக்கோ எதுவித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டா. குறித்த இப்பரீட்சைக்கு வரும்பொழுது, கல்வித் தராதரம், பிறப்புச் சான்றிதழ் ஏனைய பிற பத்திரங்கள் ஆதியனவின் மூலப் பிரதிகளைத் தமக்காதாரமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட இலாகாத் தலைவர்களுக்கூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட தேதிக்குப்பின் பெறப்படும் விண்ணப்பங்களும் சம்பந்தப்பட்ட இலாகாத் தலைவர் குறித்த விண்ணப்பம் குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாகத் தம்மால் பெறப்பட்டதென்றும், அதன் தாமதத்துக்குத் தகுந்த காரணங்கள் காட்டி ஏற்றுக்கொள்ளுமாறு விதந்துரை செய்தனுப்பாவிடில், அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. குறித்த இவ்வரசாங்க வர்த்தமானியின் ஆரம்ப பகுதி I ன் பிரிவு II ன் அரசாங்க சேவை நிபந்தனைகள் பற்றிய விளம்பரத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு கோரப்படுகிறது.

10. விண்ணப்பங்களும் அது சம்பந்தமான வேறு எது விதமான கடிதத் தொடர்புகளும், எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில விலாசமிட்டனுப்பலாகாது.

11. எதுமுறைகேடான செல்வாக்குகள் உபயோகிக்கப்படின், அது தகைமை நீக்கம் செய்யப்படும்.

12. **விண்ணப்பங்கள் :** விண்ணப்பதாரர் 13″ தர 8″ அளவையான காகிதத்தில் கீழ்த்தரப்பட்ட மாதிரி படிவமுடையதாக தட்டெழுத்தாலாக்கப்பட்டோ, அல்லது சிகப்பு மையாலோ தயாரித்து நிரப்பியனுப்பல் வேண்டும். (இதற்கு வேறுவித அளவுத் தாள்கள் உபயோகிக்கப்படாது). விண்ணப்பப் படிவங்கள், இரு பக்கங்களையும் உபயோகிக்காமல்,

பந்திகள் 1 தொடங்கி 6 வரை முதலாம் பக்கத்திலும், ஏனையன இரண்டாம் பக்கத்திலும் அமையக்கூடியவாறு விண்ணப்பப் படிவங்கள் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பதாரர், விண்ணப்பப் படிவங்களைத் தங்கள் கையாலேயே எழுதியனுப்பல் வேண்டும்.

பி. எச். பி. டி. சில்வா,
அதிபர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம்,
ரொறிங்டன் சதுக்கம், கொழும்பு 7,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 12 ந் உ.

**மாதிரிப் படிவம்**

அலுவலக உபயோகத்திற்கு

**சந்தைப்படுத்தும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்**
**கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம்**

1. முழுப்பெயர் திரு/திருமதி/செல்வி :————.
முதலெழுத்துடன் கூடிய பெயர் :————.
2. தற்போதைய விலாசம் :————.
3. (அ) பிறந்த திகதி :————.
(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
(ஆ) 1970 ம் ஆண்டு சனவரி மாதம் 13 ம் தேதியன்று :
வருஷம் :————மாதம் :————நாள் :
4. பிரஜாதத்துவம் :—
(அ)
(ஆ) பதிவுப் பிரஜையா அல்லது வம்சாவளிப் பிரசையா ? :————.
(இ) பிறப்பிடம் :
விண்ணப்பதாரர் :————.
விண்ணப்பதாரரின் பிதா :————.
5. கல்வித் தராதரங்கள் :————.
(சித்தியடைந்த ஆகக் கூடிய பரீட்சை பாடங்களுடனும் தேதியுடனும்)
(ஆ) சிறப்புத் தராதரங்கள் .————.
அனுபவங்களுக்காதாரமான சிறப்புச் சான்றிதழ்கள் அல்லது இப்பதவிக்குரிய பயிற்சிகள் பற்றிய சான்றிதழ்கள் :————
6. மொழித் தேர்ச்சிகள் :
சிங்களம் :————.
தமிழ் :————.
ஆங்கிலம் :————.
7. பாடசாலைகள், கல்லூரிகள் ; எங்கே கல்வி பயின்றது. அவைகளிற் சேர்ந்த விலகிய தேதிகள் :—

| | பாடசாலை அல்லது கல்லூரியின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி |
|---|---|---|---|
| (1) | ———— | ———— | ———— |
| (2) | ———— | ———— | ———— |
| (3) | ———— | ———— | ———— |
| (4) | ———— | ———— | ———— |

8. பாடசாலை விட்டு வெளியேறியபின் செய்த தொழில்கள் :————.
(தொழில், தொழிலிற் சேர்ந்த திகதி, அதை விட்டு விலகிய தேதி, சம்பளம் முதலியன)
9. தற்போதைய தொழிலும் அதில் பெறும் சம்பளமும் :————.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற இருவரின் அந்தஸ்து, விலாசம் முதலியன :————.

இவ்விண்ணப்பத்திற் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென நான் சான்றளிக்கிறேன். கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதாவது சரியல்லவென்றோ அல்லது தவறுள்ளதென்றோ தேர்வுக்கு முன்கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கத்திற்காளாவேனென்றும், நியமனம் பெற்ற பின் கண்டு பிடிக்கப்பட்டால், எதுவித நஷ்டஈடுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேனென்பதையும் நான் அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரர் கையொப்பம்

தேதி :————.

12–363—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## அரசாணை அமர்வுக்கு ஆளின்மை—இலங்கை தொண்டர் படை

இலங்கை தொண்டர் படையின் 4 வது அபிவிருத்தியும் கட்டடவேலையும் பேரணி, இலங்கை பொறியியலாளர்கள் (தொண்டர்) பிரிவில் அரசாணை அமர்வுக்குக் காலி ஸ்தானங்கள் இருக்கின்றன.

2. கீழே குறிக்கப்பட்டுள்ள வரிசைப் பதவிகளுக்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளை உடைய விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| வரிசைப்பதவி | வயது | விசேட தகைமைகள் |
|---|---|---|
| (அ) லெப்டினன்டும் குவாட்டர்மாஸ்டரும் (நுண்தொழில் உத்தியோகத்தர்) | 1970.1.5 ம் திகதி 21 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராயிருத்தல் வேண்டும் | குறைந்த பட்சம் க. பொ. த. அல்லது அதற்குச் சமமான கல்வித் தகைமையுடையவராயிருத்தல் வேண்டும். அத்துடன் கீழ் குறிக்கப்பட்டுள்ள நுண்தொழில் பகுதிகளில் தாம் சித்தியடைந்துள்ளதையும் தமக்குள்ள அனுபவத்தையும் குறித்தல் வேண்டும் :—<br>(அ) கட்டட நிர்மாண வேலை<br>(ஆ) தண்ணீர் விநியோகமும் கழிவுப் பொருள் அகற்றுதலும்<br>(இ) பாதையும் பாலமும் நிர்மாணித்தல்<br>(ஈ) மதிப்பிடுதலும் அளவையிடுதலும்<br>(உ) இயந்திரங்கள் பூட்டுதலும் அவற்றை பராமரித்தலும்<br>(ஊ) மின்சாரப் பொருட்கள் பராமரித்தலும் சுவிச்சு கியர் பராமரித்தலும் பழுதுபார்த்தலும்<br>(எ) நில அளவையிடுதலும் மட்டமாக்குதலும்<br>(ஏ) வரைதலும் கீறுதலும்<br>(ஐ) தொழிலாளர் மேற்பார்வையிடுதல் |
| (ஆ) லெப்டினன்டும் குவாட்டர்மாஸ்டரும் (நுண்தொழில் உத்தியோகத்தர்) (கணக்கீட்டு உத்தியோகத்தரும்) | 1970.1.5 ம் திகதி 21 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராயிருத்தல் வேண்டும் | (அ) அரசாங்க சேவையில் அல்லது பிரத்தியேகத் துறையில் 5 வருட கணக்கிடுதல் அனுபவமும் தொழில் செலவு கணக்கிடுதல் அனுபவமும் இருத்தல் வேண்டும் |

**குறிப்பு.**—விண்ணப்பகாரர்கள் தமது அனுபவம் தகைமைகளைக் குறிக்கும்போது கூடியவரை பகுதிகளால் அல்லது நன்கு மதிக்கப்பட்ட ஸ்தாபனங்களால் கொடுக்கப்பட்ட சான்றுப் பத்திரங்களை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

3. **பொது நிபந்தனைகள்.**—இலங்கை தொண்டர் படையில் அரசாணை அமர்வு பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பக்காரர்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் :

(அ) இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) தரைப்படைத் தளபதியினால் விதிக்கப்பட்ட வைத்தியப் பரிசோதனையில் சித்தியடைய சரீர சௌக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தை அமுல் நடத்தும் பொருட்டு அதற்கு இணங்கி நடக்குமாறு வேண்டப்படுவர்,

4. இயல்பான நேரங்களில் இலங்கை தொண்டர் படையின் ஒரு உத்தியோகத்தர் குறிக்கப்பட்ட பயிற்சிப் படை அணிவகுப்புகளுக்கும் வருடத்தில் 14 நாட்கள் கொண்ட பயிற்சி மடகுக்கும் தோற்றுமாறு வேண்டப்படுவர்.

5. இலங்கை தொண்டர் படையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தொண்டர் படையின் ஒரு உத்தியோகத்தர் குறிக்கப்பட்ட ஊதியத்துக்காகத் தம்மால் செலவிடப்பட்ட செலவுகள் கொடுக்கப்படும்.

6. பொதுச் சேவை நியதிகள் தரைப்படை அதிகாரச் சட்டத்தின் பிரகாரமும் இலங்கை தொண்டர் படையின் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கி அமைந்ததாகும். ஒரு தொண்டர் திரட்டப்பட்ட நேரங்களில் அவரின் கடமை தரைப்படை அதிகாரச்சட்டத்தின் (357 ம் அத்தியாயம்) 7 ம், 19 ம் பிரிவுகளின் நியதிகளின்படியாகும். சேவைக்காக திரட்டப்பட்ட நேரங்களில் இலங்கை தொண்டர் படையின் அங்கத்தவர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் சம்பளமும் சகாயப்பணமும் நிரந்தரப் படையின் உத்தியோகத்தருக்குப் போன்றதாகும்.

**7. இக்காலி ஸ்தானங்கள் இலங்கை தொண்டர் படைக்கேயாகும். அன்றி நிரந்தரப் படைக்கல்ல என்றும் தெரிந்தெடுக்கப்படுவது நிரந்தர தொழில் அமைப்புக்கு அல்ல என்பதையும் வற்புறுத்தப்படுகிறது.**

8. விண்ணப்பங்கள் குறைந்தபட்சம் இரு நற்சான்றுப் பத்திரங்களுடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும். அவை கடந்த இரண்டு வருடங்களுக்குள் தகுதி வாய்ந்தவர்களால் கொடுக்கப்பட்டனவாகவும் விண்ணப்பகாரருக்கு நன்கு அறிமுகமடைந்தவர்களிடமிருந்து பெற்றனவாகவும் இருத்தல் வேண்டும்.

9. கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் இருந்து மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களை தொடர்வுத் தேர்தல் ஒன்றினுல் தெரிந்தெடுக்கப்படும். இதன் பின் நேர்முகப் பரீட்சையினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் பாதுகாப்பு அமைச்சினுல் ஆக்கப்பட்ட தேர்தல் சபையொன்றினுல் நேர்முகப் பரீட்சை மூலம் இறுதித் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரருக்கு அவ்வாறுனவை பற்றி திகதி, இடம், நேரம் என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். இத்தொடர்பில் ஏற்படும் எவ்விதமான பிரயாணச் செலவுகளோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினுல் கொடுக்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்குத்தேர்ந்தெடுக்கப்படாத விண்ணப்பகாரருக்கு அவ்வாறுனவை பற்றியும் அறிவிக்கப்படும்.

10. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்பவும் விண்ணப்பங்களினும் அவற்றை அனுப்பும் உறையின் மேல் இடப் பகுதியினும் " விண்ணப்பங்கள்—இதொப—அரசாணை அமர்வு " என எழுதப்பட்டு 1970 ஆம் ஆண்டு சனவாரி மாதம் 5 ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு முன்னதாய் இராணுவத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரியில் சேர அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு : (1) விண்ணப்பப்படிவங்கள் இத்தலைமை நிலையத்தில் வழங்கப்படமாட்டாது.

(2) இவ்விளம்பரத்தில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் யாவும் தள்ளுபடி செய்யப்படும்.

(3) ஏற்கனவே சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்கள் தம் விண்ணப்பங்களைத் தமது திணைக்களத்திற்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வேலை கொள்வோர் குறித்த விண்ணப்பகாரர் இலங்கை தொண்டர் படையில் சேருவதற்குத் தமது விருப்பத்தைத் தெரிவிக்கும் சான்றுப்பத்திரமும் இணைத்தல் வேண்டும்.

தரைப்படைத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,
1969.11.30.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
மேஜர்—ஜனரால்,
தரைப்படைத் தளபதிக்காக.

**இலங்கை தொண்டர் படையில் அரசாணை அமர்வுக்கு விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துகளில்) : ————.

2. தபால் முகவரி : ————.

3. அருகாமையில் உள்ள தபால்/தந்தி நிலையம் : ————.

4. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் : ————.

5. பிறந்த திகதி : ————. வயது : ————.
(பிறப்புச் சான்றுப்பத்திரத்தின் பிரதி இணை த்தல் வேண்டும்)

6. தேசிய இனம் : ————.

7. இராணுவ, கடற்படை, ஆகாயப்படை, தொண்டர் படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருப்பின், பிரிவு, தகுதிகள் ஆகியவற்றை முழு விபரங்களுடன் தருக : ————.

8. இராணுவத்தில் இருந்து விலகிய அல்லது விலக்கப்பட்டபொழுது உமது நடத்தை : ————.
(விலகிய அல்லது விலக்கப்பட்டபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியொன்று இணைத்தல் வேண்டும்)

9. எந்தப் பிரிவுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது : ————.

10. சித்தியடைந்துள்ள பரீட்சைகளும் பாடங்களும் : ————.
(கல்வித் தகைமைகளைக் குறிக்கும் சான்றுப்பத்திரங்களின் பிரதி இணைத்தல் வேண்டும்)

11. சித்தியடைந்துள்ள நுண்தொழில் பரீட்சைகளும், 2 ம் பிரிவு அ. ஆ பிரிவுகளில் கேட்கப்பட்டுள்ளவைகளில் எவற்றில் உமக்கு அனுபவம் உண்டு என்பதையும் தருக : ————.

12. உயரம் : ————அடி. ————அங்குலம்.

13. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? : ————.

14. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற விளையாட்டுகள் சம்பந்தப்பட்ட தனிச்சிறப்புகள் : ————.

15. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் : ————.

16. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக :

பாடசாலையின் அல்லது சர்வகலாசாலையின் பெயர் : ————.

சேர்ந்த திகதி : ————.

விலகிய திகதி : ————.

சித்தியடைந்துள்ள பொது பரீட்சைகள் : ————.

17. பாடசாலை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களைக் கீழே தருக :

| தற்போது வேலை கொள்வோரின் பெயர் | செய்த தொழில் | சேவை செய்த காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

(தொண்டர் படையில் சேருவதற்கு தாம் தொழில் செய்யும் இடத்தின் வேலை கொள்வோரின் சம்மதத்தைத் தெரிவிக்கும் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்)

18. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரியும் : —.
(சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

..............................................................................................................................................

..............................................................................................................................................

19. விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தவேண்டிய உறுதி : ————.

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்டுள்ள விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்றும் உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

12–344—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

### பிரதான பொறியியலாளர் (பாதையும் வேலையும்) பகுதியில் வரைவாளர் தொழில் பயில்வோர் (குடியியல்) பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்—1969

இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியில் வரைவாளர் தொழில் பயில்வோர் (குடியியல்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பளமும் படிகளும்.**—

(i) ஒரு தொழில் பயில்வோரின் தொடக்கச் சம்பளம் வருடத்திற்கு ரூபா 3,090. பயிற்சிக்காலங்கள் இரண்டு வருடங்கள் அல்லது தேவைப்பட்டால் அதற்கு மேலும்.

(ii) தொழிற் பயிற்சியை சித்தியுடன் முடித்தவுடனும், விதித்த பரீட்சைகளில் சித்தியடைந்தவுடனும், பயிற்சியாளர்களை (II) ம் தர வரைவாளர்களாக நியமிக்கப்படுவர். (II) ம் தர வரைவாளர் பதவிகளில் காலி இடங்கள் இல்லாவிட்டால் மேலதிக வரைவாளராக (II) ம் தர வரைவாளர் சம்பளத்தில் நியமிக்கப்படுவர்.

(iii) வரைவாளர்களின் சம்பளத்திட்டம் பின்வருமாறு :—
தரம் (II) : ரூபா 3,432—144—ரூபா 6,456 வருடம்.
தரம் (I) : ரூபா 6,600—180—ரூபா 8,040 வருடம்.
விசேட தரம் : ரூபா 8,280—240—ரூபா 9,240 வருடம்.

தரத்திலிருந்து தரத்திற்கு உயர்ச்சி, காலி இடங்களையும், முதுமுறையையும், தகுதியையும், அந்நேரத்திலுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தையும் பொறுத்து இருக்கும்.

3. **வயதெல்லை.**—அபேட்சகர்கள் நல்ல தேகநலமுடையவராயும், விவாகமாகாதவராயும், விண்ணப்பங்கள் ஏற்க நியமிக்கப்பட்ட கடைசித் திகதியன்று வயதில் 16 வருடங்களுக்கு குறையாதவராயும் 24 வருடங்களுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வி தொழிநுட்பத் தகைமைகள்.**—அபேட்சகர்கள் சித்தியடைந்திருக்க வேண்டியது—

(அ) தூயகணிதம் அல்லது பிரயோக கணிதமும், பௌதிகவியலும் உட்பட சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சை; அல்லது,

(ஆ) சிங்களம்/தமிழ் பாஷை, தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம், பௌதிகவியல் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் கல்விப் பொதுத் தராதர (சாதாரண)ப் பரீட்சையில், அல்லது,

(இ) தூயகணிதம் அல்லது பிரயோக கணிதம், பௌதிகவியல் உட்பட ஒரு உயர்தரப் பரீட்சை.

அத்துடன்,

இலங்கை தொழில் நுட்ப கல்லூரி கட்டுபெத்த பிரயோக தொழில் நுட்ப நிலையத்தில் ஒருவருட முழுநேர வரைவு பயிற்சி நெறியில் தேர்ச்சியடைந்து, தேர்ச்சிச் சான்றிதழ் பெற்று இருக்கவேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சில காலத்திற்கு தொழில் பயிற்சியில் ஈடுபட வேண்டும்.

(ஆ) தொழிற் பயிற்சிக்காலத்தில் அவர்கள் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகளுக்கு சமுகந்தந்து குறிப்பிட்ட பரீட்சையிலும் இன்னும் மற்றத் திணைக்களப் பரீட்சைகளிலும் சித்தி அடைதல் வேண்டும்.

(இ) பயிற்சிக்காலம் முடிந்தவுடன் (ii) ம் தர வரைவாளராய் நியமனம் பெற்ற பின்பு இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி பொதுமுகாமையாளருடன் ஒரு ஒப்பந்தத்திலும் முறியிலும் கையெழுத்திட வேண்டும்.

(ஈ) திருப்தியான குணமில்லாவிட்டாலும் அல்லது பயிற்சியில் திருப்தியான முன்னேற்றம் இல்லாவிட்டாலும் அல்லது திணைக்கள பரீட்சைகளிலும் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் பரீட்சைகளிலும் சித்தி அடையாவிட்டாலும் அத்துடன் பயிற்சியை தொடர்ந்து நடத்துவதில் புகையிரதப் பகுதிக்கு நலன் அளிக்காவிட்டாலும் ஒரு பயிற்சியாளரின் ஒப்பந்தத்தை முன்னறிவித்தல் இல்லாமல் முறித்துவிடக்கூடும்.

(உ) நியமனத்திற்கு முன் பயிற்சியாளர்கள் இலங்கையில் எந்தப் பகுதியிலும் சேவை செய்ய தகுதியுடையரென்பதற்கு அவர்கள் ஒரு மருத்துவச் சோதனையில் (கண்பரீட்சை உட்பட) சித்தி அடையவேண்டும்.

6. "பொது முகாமையாளர், இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி, மருதானை," என்னும் விலாசத்தில் ஒரு தெரிவுச் சபைக்கு முன்னால் சமுகந்தரவோ அல்லது எந்த நேர்முகப் பரீட்சைக்கும் சமுகந்தரவோ பயிற்சியாளர்கள் தங்கள் செலவில் நியமனத்திற்கு முன் வர தயாராய் இருக்கவேண்டும்.

7. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பம் போல் தங்கள் சொந்தக் கையெழுத்தில், பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமை சான்றிதழ், தொழில்நுட்பக் கல்விச் சான்றிதழ், குணச்சான்றிதழ்கள் முதலியவற்றின் பிரதிகளுடன், 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்குப் பிந்தாமல், பொது முகாமையாளர், இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி, மருதானை, கொழும்பு 10, என்னும் விலாசத்தில் கிடைக்கக்கூடியதாய் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தில் காட்டிய விபரங்கள் ஏதேனும் பொய்யென காணப்பட்டால் நியமனத்திற்கு பிறகு விலக்கப்படும்.

8. விண்ணப்பங்கள் அஞ்சலில் காணமற் போய்விட்டது அல்லது தாமதித்துவிட்டது என்னும் குற்றச்சாட்டு ஒன்றும் கருதப்படமாட்டாது. கடைசி நாட்கள் வரை விண்ணப்பங்களை தாமதம் செய்யும் அபேட்சகர்கள் அதனால் வரும் இடையூறுகளுக்குத் தாங்களே பொறுப்பாளிகளாவர்.

9. அரசாங்க சேவையில் இருக்கும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தங்கள் திணைக்கள அதிபர் மூலமாக அனுப்பினால்தான் அவை ஏற்றுக்கொள்ளப்படும்.

10. ஒரு அபேட்சகரின் தெரிவுக்காக ஆதரவு நாடப்படின் அல்லது வயப்படுத்தப்படின் அந்த அபேட்சகர் தகுதியற்றவராகக் கருதப்படுவர்.

11. அரசாங்க சேவையின் நியமனங்களுக்காகிய பொது நிபந்தனைகளை இந்த வர்த்தமானியின் முன்பகுதியில் பாகம் (I), பிரிவு (II) ல் பார்க்குக.

பீ. டீ. றம்பால,
பொது முகாமையாளர்.

பொதுமுகாமையாளர் அலுவலகம்,
இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி,
மருதானை, கொழும்பு—10,
1969 ம் ஆண்டு டிசம்பர் 3 ம் திகதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**வரைவாளர் பயிற்சியாளர் (குடியியல்) பதவி—1969**
**இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி**

1. முழுப் பெயர் : ————.
(பெரிய எழுத்தில்)

2. முழு அஞ்சல் விலாசம் : ————.
(பெரிய எழுத்தில்)

3. தேசிய இனம் : ————.
(அ) பரம்பரை இலங்கையரா அல்லது பதிவுபெற்றதனால் இலங்கையரா என்பதைக் குறிப்பிடுக : ————.
(ஆ) பரம்பரை இலங்கையராயின் கீழ்க்காணும் விபரங்கள் தருக :—
(i) அபேட்சகரின் பிறந்த இடம் : ————.
(ii) அபேட்சகரின் தந்தையின் பிறந்த இடம் : ————.
(iii) அபேட்சகரின் தந்தைவழிப் பாட்டனரின் பிறந்த இடம் ————.
(iv) அபேட்சகரின் தந்தை வழி முப்பாட்டானரின் பிறந்த இடம் : ————.
அபேட்சகர் இலங்கையில் பிறந்தவரென்றால் (i) உடன் (ii) ஐ உம், அல்லது (iii) ஐ உம் (iv) ஐ உம் நிரப்புதல் வேண்டும்.
அபேட்சகர் இலங்கையில் பிறக்கவில்லையென்றால், (i) உடன் (ii) ஐ உம் (iii) ஐ உம், அல்லது (iii) ஐ உம் (iv) ஐ உம் நிரப்புதல் வேண்டும்.

4. பிறந்த திகதி : ————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
1969 ம் ஆண்டு டிசம்பர் 21 ம் திகதியன்று வயது—
......வருடங்கள், ......மாதங்கள், ......நாட்கள்.

5. விவாகமானவரா ? அல்லது விவாகமாகாதவரா ? : ————.

6. தகைமைகள் : ————.
(விபரங்கள் கொடுத்த சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

7. கட்டுபெத்தவில் உள்ள இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் ஒரு வருட முழுநேர வரைவு பயிற்சி நெறியில் தேர்ச்சியடைந்து, தேர்ச்சிச் சான்றிதழை வைத்திருக்கின்றீரா ? என்பதைக் குறிப்பிடுக : ————.

8. புகையிரதப் பகுதி ஊழியரா அல்லது புகையிரதப் பகுதி ஊழியரின் மகனா என்பதையும் கூறவும் : ————.
புகையிரதப் பகுதி ஊழியரென்றால் பின்வரும் விபரங்கள் தருக—
(அ) தற்போதைய தரமும், பகுதி இலக்கமும் (இருந்தால்) : ————
(ஆ) தற்போதைய இடம் : ————.
(இ) முதலாக நியமிக்கப்பட்ட திகதி : ————.

9. முன்பு இராணுவத்தில் இருந்தவரா அல்லது இலங்கையிலிருந்த ஐக்கிய இராச்சிய ஸ்தாபனங்களின் கடல்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து விலகிய குடியியல் ஊழியரா என்பதைக் கூறவும் : ————.
(விபரங்கள் கொடுத்து அத்தாட்சி காட்டப்படுதல் வேண்டும்).

என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியளவில் இந்த விண்ணப்பத்தில் நான் கூறியுள்ள விபரங்கள் யாவும் உண்மையென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். ஆட்சேர்ப்பு விதிகளின்படி நான் தகுதியற்றவன் என கருதப்படின் என்னுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நான் நன்கு அறிவேன்.

————,
அபேட்சகரின் கையொப்பம்.

திகதி : ————.

12–484—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## ஆங்கில அமய சுருக்கெழுத்தாளர் பதவிகள்
### நீர்ப்பாசனத் திணைக்களம்

*1969.11.28 திகதியிட்ட இலங்கை அரசாங்க வர்ததமானியில் வெளியான அறிவித்தலைத் தொடர்ந்து, விண்ணப்பங்களின் கடைசித் திகதி நீடிக்கப்பட்டு இப்பொழுது விண்ணப்பங்கள் 1969.12.26 ஆம் திகதி பி.ப. 4.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை நீர்ப்பாசன அதிபர், த.பெ. எண். 1138, கொழும்பு 7 என்ற முகவரியிட்டனுப்ப வேண்டும்.*

*ரி. பத்மநாதன்*
*நீர்ப்பாசன அதிபருக்காக.*

*நீர்ப்பாசனத் திணைக்களம்,*
*த. பெ. எண். 1138,*
*பௌத்தலோக மாவத்த,*
*கொழும்பு 7.*
*13.12.69*

*12-593—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884*

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலிஸ்தானம்

சபையின் மருத்துவப் பகுதியில் V ஆம் தர உதவி மருத்துவத் தொழிலாளர் ('அசிஸ்டன்ட் மெடிக்கல் பிரக்டிஷனர்') பதவிக்கு கவனிக்கப்படுவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டம் :**

(எல்லாம் உட்பட) மாதாந்தம் ரூபா 600—10 × ரூபா 40—ரூபா 1,000 ரூபா 800 க்கும் ரூபா 920 க்கும் முன்பு வினைத் திறமைகாண் தடைகளுண்டு. (தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் அவரின் தகைமைகட்கும் அனுபவத்திற்குமேற்ப மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் தக்கதோர் சம்பள நிலையில் அமர்த்தப்படலாம்.)

3. **தகைமைகள்**

(i) **வயது.**—1969.12.1 ஆம் திகதியன்று 25 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

(ii) **உயர்தொழில் தகைமைகளும் அனுபவமும்**—இலங்கை மருத்துவ கல்லூரியின் மருந்தாளர் பரீட்சையில் ('அப்போதிக்கரீஸ் எக்ஸாமினேசன்') சித்தியெய்தி இருப்பதுடன் ஆகக் குறைந்தது 3 தொடக்கம் 4 ஆண்டுவரையான அனுபவமும் இருத்தல் வேண்டும்.

4. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களங்கள் மூலமாக அனுப்பிவைக்கவேண்டும். அவர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளிற்கு ஏற்பச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருத்தல் அல்லது அவர்கள், நிரந்தரச் செயலாளரின் அனுமதியுடன் அரசாங்க சேவையிலிருந்து அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருந்து இராஜினாமாச் செய்ய ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(ஆ) விளம்பர நியதிகட்கேற்ப கூட்டுத்தாபனங்களினுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப் படவேண்டும்.

5. **வேலை நிபந்தனைகள் :**

தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள்—

(1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.

(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும்.

(4) தங்களது சம்பளத்தில் 10 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்கு செலுத்தவேண்டும். சபை 15 சத விகிதத்தைச் செலுத்தும்.

(5) இலங்கையில் எப் பகுதியிலேனும், சபையின் எப் பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, கொழும்பு—5, நாராகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

200 கிருல வீதி,
நாராகேன்பிட்டி,
கொழும்பு 5,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 2 ந உ.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### மாதிரிப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி :————.
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் :————.
3. தபால் முகவரி :————.
4. பிறந்த திகதி :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்படவேண்டும்.)
5. 1969.12.1 ஆம் திகதியன்று சரியான வயது :————.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? :————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்).
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி :—— ————.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக).
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள் உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள்—(மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப் படவேண்டும்) :————.
10. தொழில் :————.
(பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது, பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக).
11. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம் :————.
(வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக).
12. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப்பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக) :————.
13. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் :————.
14. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? :————.
15. வேறேதேனும் விபரங்கள் :————.
16. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? :————.
அங்ஙனமாயின் விவரங்கள் தருக :————.
17. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும்.—
(1)
(2)

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

12–522—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலிஸ்தானம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் தியணைப்பு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

2. தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர், அவரின் தகைமைகளுக்கும் அநுபவத்திற்குமேற்ப, சபையின் சேவையில் IV ஆம் தரத்தில் அல்லது V ஆம் தரத்தில் அமர்த்தப்படுவார்.

3. சம்பள அளவுத்திட்டம்—IV ஆம் தரம்

ரூபா 700—5 × 40, 6 × 50—ரூபா 1,200 ரூபா. 900 க்கும் ரூபா 1,050 க்கும் முன்பு வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

சம்பள அளவுத்திட்டம்—V ஆம் தரம்

ரூபா 600—40—ரூபா 1,000. ரூபா 800க்கும் ரூபா 920 க்கும் முன்பு வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

4. 1.9.1969 ல் 35 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராகவிருக்க வேண்டும்.

5. சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதையொத்த அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

6. விண்ணப்பகாரர், படைக்கலந்தாங்கு சேவைகளில் அல்லது மாநகர சபைத் தியணைக்கும் படைப் பகுதியில் தியணைப்பு வேலையில் ஆகக் குறைந்தது ஐந்து (5) ஆண்டு அனுபவமுடையவராகவிருத்தல் வேண்டும். நிறைவேற்று தரத்தில் மேற்பார்வை, முகாமை அனுபவமுடைய விண்ணப்பகாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

7. விண்ணப்பகாரர், பெரும் தியணைப்பு வேலைகளிலும், தீ தடுப்பு வேலைகளிலும் அனுபவமுடையவராயிருப்பதுடன், தியணைப்புச் சாதனங்கள் பற்றி நல்ல அறிவுடையவராயிருத்தலும் இன்றியமையாததாகும்.

8. மேற்குறித்த கல்வி, வயது தகைமைகள் இல்லாதவிடத்தும், மேற்குறித்த 6 ஆம் 7 ம் பந்திகளில் குறித்த தகைமைகளுள்ள சபை ஊழியர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

9. மேற்குறித்த முழுத் தேவைகட்கும் அமைய போதியளவு தகுந்த விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து, கல்வி, வயது ஆகியதேவைகளைப் பூர்த்திசெய்யாத வெளி விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்களும் கவனிக்கப்படும்.

10. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ம் பிரிவின் நியதிகளிற்கு ஏற்பச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாகயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

11. **வேலை நிபந்தனைகள் :** தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் :—

(1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.

(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெற வேண்டும்.

(4) தங்களது சம்பளத்தில் 10 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். சபை 15 சத விகிதத்தைச் செலுத்தும்.

(5) இலங்கையில் எப் பகுதியிலேனும், சபையின் எப் பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

12. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன்னதாக கொழும்பு 5, நாராகேன்பிட்டி, கிருலவீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாராகேன்பிட்டி, கொழும்பு 5,
1969 ம் ஆண்டு நவம்பர் மீ 26 ந் உ.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### மாதிரிப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி :———.
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ———.
3. தபால் முகவரி : ———.
4. பிறந்த திகதி : ———.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்பட வேண்டும்).
5. 1.9.1969 ல் சரியான வயது : ———.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? ———.
7. விவாகமானவரா அல்லது விவாகமாதவரா ? ———.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்).
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி : ———.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக).
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள் சித்தியெய்திய பரீட்சைகள், உயர் தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள்—(மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்பட வேண்டும்).
10. தொழினுட்பத் தகைமைகள் :—.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள்—(மூலப் பிரதிகள் அல்ல)—இணைக்கப்படவேண்டும்.
11. தொழில்.—
(பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலைகளின் விபரம் அதாவது, பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.)———.
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம். (வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக)———.
13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப் பதயிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக).———.
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் : ———,
15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை?———.
16. வேறேதேனும் விபரங்கள் : ———.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? ———.
அங்ஙனமாயின் விவரங்கள் தருக : ———.
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும் : ———.
(1) ———.
(2) ———.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ———.

12-542—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சௌக்கியத் திணைக்களம்

### பொதுச் சௌக்கியம் பயில்வோர் (பப்ளிக் ஹெல்த் லேணர்ஸ்)பயிற்சி வகுப்புக்கு அனுமதிப்பதற்காக அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்தல்

பொதுச் சௌக்கியம் பயில்வோருக்கான பயிற்சி வகுப்புக்கு அனுமதிப்பதற்காக 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆந் திகதியன்று பின்வரும் நிலையங்களில் நடைபெறவிருக்கும் ஒரு போட்டிப் பரீட்சைக்கு இலங்கையரான (ஆண்) பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்—

(அ) 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆந் திகதியன்று 19 வயதுக்குக் குறையாதவரென்றும், 24 வயதுக்கு மேற்படாதவரென்றும் (சௌக்கிய சேவைத் திணைக்களத்தில் தற்போது சேவை செய்துவரும் நிரந்தர, தற்காலிக ஊழியர்களின் விடயத்தில் ஆகக்கூடிய வயது 35 க்கு மேற்படாதிருத்தல் வேண்டும்).

(ஆ) கல்வித் திணைக்களத்தின் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதனிலும் மேலான பரீட்சையில் சித்தியெய்தியவரென்றும், அல்லது க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில்—

(i) சிங்களம்/தமிழ்ப்பாஷை.

(ii) எண்கணிதம்/கணிதம் (மதமற்றிக்ஸ்) உட்பட ஆறுபாடங்களில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளுள் சித்தியெய்தியவரென்றும் ;

திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

3. **விண்ணப்பிக்கும் முறை.**—(அ) விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படுவதில்லை. இதன் கீழ் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவம் போன்று ஒரு படிவத்தைத் தயாரித்து விண்ணப்பத்தை நிரப்பி அதனை ஒவ்வொரு அபேட்சகரும் தான் வசிக்கும் பிரதேசத்துக்குப் பொறுப்பான சௌக்கிய சேவை அத்தியட்சருக்கு (சுப்பிரண்டன், ஹெல்த் சேர்விஸ்) 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகப் பதிவுத் தபால்மூலம் அனுப்பவேண்டும். விண்ணப்பத்தை வைத்தனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " பொதுச் சௌக்கியம் பயில்வோரைத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பம் " என்று எழுதி அனுப்பவேண்டும். அபேட்சகர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு சௌக்கிய சேவை அத்தியட்சர்களின் அட்டவணையொன்று இதன்கீழ் தரப்படுகிறது.

| நிலையம் | | சௌக்கிய சேவை அத்தியட்சர் விலாசம் |
|---|---|---|
| 1. அநுராதபுரம் | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், அநுராதபுரம் |
| 2. மட்டக்களப்பு | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், மட்டக்களப்பு |
| 3. பதுளை | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், பதுளை |
| 4. கொழும்பு | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், கொழும்பு |
| 5. காலி | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், காலி |
| 6. யாழ்ப்பாணம் | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், யாழ்ப்பாணம் |
| 7. கண்டி | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், கண்டி |
| 8. கேகாலை | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், கேகாலை |
| 9. குருநாகல் | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், குருநாகல் |
| 10. களுத்துறை | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், களுத்துறை |
| 11. மாத்தறை | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், மாத்தறை |
| 12. மாத்தளை | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், மாத்தளை |
| 13. புத்தளம் | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், புத்தளம் |
| 14. இரத்தினபுரி | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், இரத்தினபுரி |
| 15. வவுனியா | .. | சௌக்கியசேவை அத்தியட்சர், வவுனியா |

1970 ஜனவரி 12 ஆந் திகதிக்குப் பின்னர் வந்துசேரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சௌக்கியசேவை அதிபதி, கொழும்பு என்ற விலாசத்துக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படக்கூடாது.

(ஆ) இதன்கீழ் கையொப்பமிட்டிருப்பவரின் பெயருக்கோ, இந்தத் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தரின் பெயருக்கோ விண்ணப்பத்தை அனுப்பக்கூடாது. மேலும், இந்த அலுவலகத்தில் சேவைசெய்யும் எந்த உத்தியோகத்தர் கையிலும் விண்ணப்பத்தைக் கொடுக்கவுங்கூடாது.

(இ) ரூபா 25 (இருபத்தைந்து) பெறுமதியான தபால் முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அவற்றின்மீது விண்ணப்பகாரர் கையொப்பமிட்டுச் செல்லாதனவாக்கவேண்டும். இந்தக் கட்டணம் எச்சூழ்நிலையிலும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(ஈ) அபேட்சகர் ஏற்கெனவே ஒரு உத்தியோகத்தில் இருந்தால், அவர் தனது முதலாளியிடம் " அபேட்சகர் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இப்பயிற்சி தொடங்கும்போது அவரை விடுவதற்குத் தான் சம்மதிப்பதாக " ஒரு கடிதம் வாங்கி விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

4. **பரீட்சைத் திட்டம்.**—இப்பரீட்சை இரண்டு பாகங்களாக நடைபெறும். முதலில் நடைபெறும் எழுத்துப் பரீட்சையின் முடிவைக்கொண்டு அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கொழும்பில் நடாத்தப்படவுள்ள நேர்முகப் பரீட்சைத் திகதி அபேட்சகர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

அபேட்சகர் எம்மொழியில் பாஷையும் வியாசமும் என்ற (1) ஆம் பாடத்தை எடுக்கிறாரோ அம்மொழியிலேயே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

பரீட்சைப் பாடங்களும், நேரசூசியும் பின்வருமாறு—

| | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|
| (1) பாஷையும் வியாசமும் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) | மு.ப. 9.00— மு.ப. 10.30 | 150 |
| (2) பொது அறிவும் இலங்கைபற்றிய அறிவும் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) | மு.ப. 10.45— மு.ப. 11.45 | 100 |
| (3) பொது விவேகம் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) | பி.ப. 1.00— பி.ப. 1.45 | 100 |
| (4) நேர்முகப் பரீட்சை (திகதி பின்னர் தெரிவிக்கப்படும்) | .. | 100 |

அபேட்சகர்களுக்கு நேரசூசிகள் வழங்கப்படமாட்டா மேலே கொடுக்கப்பட்டுள்ள நேர சூசியை அபேட்சகர்கள் குறித்துக்கொள்ள வேண்டும்.

**குறிப்பு.**—இரண்டாம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகைமைப் பரீட்சையை அபேட்சகர்கள் எந்த மொழியில் எடுத்துச் சித்தியெய்தினர்களோ அதே மொழியில் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) இப்பரீட்சையயும் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். எனினும்—

(அ) தகைமைப் பரீட்சையைத் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எடுத்துச் சித்தியெய்திய அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்வி புகட்டப்பட்ட ஒரு அபேட்சகர் விரும்பினால் சிங்கள மொழியில் இப்பரீட்சையை எடுங்கலாம்.

5. தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மண்டபத்துள், மேற்பார்வையாளர் திருப்திப்படும்படி தமது அடையாளத்தை நிரூபிக்கவேண்டுமென அபேட்சகர்கள் கோரப்படுவர். இதன்பொருட்டு பின்வரும் சாதனங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்—

(i) தபாற் கந்தோர் தலைமை அதிபதி (போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்) வழங்கிய அடையாளச்சீட்டு.

(ii) பரீட்சைத் திகதிக்கு முந்திய மூன்று வருடங்களுள் வழங்கப்பட்ட ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்).

(iii) அரசாங்கத் திணைக்களமொன்றின் அதிகாரத்துடன் பரீட்சைத் திகதிக்கு முந்திய மூன்று வருடங்களுள் வழங்கப்பட்டதும், அபேட்சகரின் புகைப்படத்தைக் கொண்டதுமான சான்றிதழ் அனுமதிச்சீட்டு (லைசென்ஸ்) அல்லது வேறு சாதனங்கள்.

பிரவேசச்சீட்டுடன் மேற்கூறிய சாதனங்களில் ஒன்றையேனும் எடுத்துச் செல்லாத எந்த அபேட்சகரும் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

6. (அ) நேர்முகப் பரீட்சை அதற்கென நியமிக்கப்படும் ஒரு சபையால் நடாத்தப்படும். அப்பரீட்சைக்கான திகதியும் இடமும் அபேட்சகர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகர்களுக்கு இத்திணைக்களத்தால் பயணச் செலவுகள் கொடுக்கப்படமாட்டா. அபேட்சகரின் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) இப்பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தின் மேற்பார்வையின்கீழ் நடைபெறும். நிலையத்தின் பெயர் அபேட்சகர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

(இ) வாய்மொழிப் பரீட்சை, போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் சிறப்புத் திறமை வரிசைப்படியும், பயிற்சி வகுப்பிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையையும் பொறுத்து பயிற்சி வகுப்புக்குத் அனுமதித்தற்கான அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுவர். பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களின் பெயர்கள் காலக்கிரமத்தில் பத்திரிகைச் செய்திமூலம் பிரசுரிக்கப்படும்.

7. **வைத்தியப் பரிசோதனை.**—தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் இலங்கையின் எப்பாகத்திலேனும் சேவை செய்வதற்கு உடற்றகுதி வாய்ந்தவர்களெனக் காட்டுவதற்கு ஒரு வைத்தியப் பரிசோதனைக் குள்ளாக வேண்டும்.

8. **களுத்துறைப் பயிற்சி வகுப்பின் பயிற்சித்திட்டம்.**—(அ) பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் றேயல் சௌக்கிய

சங்கத்தின் பரீட்சைச் சபைக்குரிய கட்டணமாக ரூபா 200 செலுத்துவதோடு பின்வருவனவற்றையும் வைத்திருக்கவேண்டும்.

(க) ஒரு துவிச்சக்கரவண்டி (சைக்கிள்) ;

(கா) வரையும் உபகரணங்கள் ;

(கி) அளவை நாடாவும் (ரேப்), அளவுகோலும் ;

(கீ) அபேட்சகர்கள் பயிற்சி வகுப்புக்கு அனுமதிக்கப்படுமுன் அவர்களைப் பயிற்சி வகுப்புக்கு அழைக்கும்போது தெரிவிக்கப்படும் ஏனைய தேவைப்பப் பொருட்கள்.

பிணைப்பணமாக ரூபா 200 செலுத்தியபின்னர் தேகநலக்குறைவு காரணமாகப் பயிற்சி வகுப்பில் சேரமுடியாத ஒரு அபேட்சகர், பதிவு செய்தவரும், தகைமைபெற்றவருமான வைத்தியத்தொழில் செய்பவரொருவரிடமிருந்து ஒரு வைத்தியச்சான்றிதழைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவர் செலுத்திய பிணைப்பணத்தின் 80% சதவீதமான தொகை திருப்பிக் கொடுக்கப்படும். வேறெந்தச் சூழ்நிலைகளிலும் இந்தக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

(ஆ) ஒவ்வொரு அபேட்சகரும்—

(i) பயிற்சி வகுப்புக்கு நியமனத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் பயிற்சியை முற்றாக முடிக்குமுன் சொந்த விருப்பத்திற்கிணங்கத் தன் நியமனத்திலிருந்து இராஜினாமாச் செய்தால் பயிற்சிக் காலத்தில் பெற்ற முழுப் படிகளையும் (அலவன்ஸ்) சௌக்கியத் திணைக்களத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாக ஒரு உடன்படிக்கையில் (அதற்கெனவுள்ள படிவத்தில்) கையொப்பமிடவேண்டுமென்றும் ;

(ii) திருப்திகரமாக பயிற்சியை முடித்த மூன்று மாதங்களுக்குள் அவருக்கு நியமனம் கொடுக்கப்பட்டால் அதை அவர் ஏற்பதாகவும், அவர் பதவியேற்று 36 மாதங்களுக்குள் பதவியிலிருந்து விலக அல்லது விலக்கிவிடும்படி கேட்கமாட்டாரென்றும் (அதற்கெனவுள்ள படிவத்தில்) ரூபா 1,000 பெறுமதியான ஒரு முறியில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்றும் கேட்கப்படுவர்.

(இ) களத்துறையில் பயிற்சி வகுப்பு ஏறத்தாழ பன்னிரண்டு மாதங்கள்வரை நீடிக்கும்.

(ஈ) பயிற்சிபெறும் காலத்தில் ஒவ்வொரு அபேட்சகரும் மூன்று வகையான புத்தகங்களை வைத்திருக்க வேண்டும். விரிவுரைக்கு ஒன்றும், சாதனமுறை வேலைகளுக்கு ஒன்றும், வெளியிடச் செயல்முறை வேலைக்கு ஒன்றுமாக மூன்று பிரிவுகளாகப் புத்தகங்களை வைத்துப் பேண வேண்டும். இப்புத்தகங்கள் பரிசோதனைக்குக் கோரப்படும்போது சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(உ) பயிற்சிக் காலத்தில் மாதாந்த பரீட்சைகள் நடைபெறும். இப் பரீட்சைகளின் முடிவுகள் கடைசிப் பரீட்சையில் சலுகைக் கணிப்புக்குப் பயன்படுத்தப்படும்.

(ஊ) **சௌக்கியக்கூறு விடுதி.**—பயிற்சிக்காலத்தின்போது அபேட்சகர்களுக்கு ஒரு விடுதியில் இலவசக் சாப்பாட்டு வசதிகள் அளிக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தின்போது அபேட்சகர்களுக்கு வருடமொன்றுக்கு ரூபா 3,000 படியாகக் கொடுக்கப்படும்.

(எ) **உடனடி நீக்கத்துக்குரிய காரணங்கள்.**—பயிற்சிபெறும் எந்த அபேட்சகரும் அவரது வரவு, படிப்பு, பழக்கவழக்கங்கள் முதலிய வற்றில் சௌக்கியசேவை அதிபதிக்குத் திருப்தியளிக்கத்தவறும் பட்சத்தில் அவர் பயிற்சிக் காலத்தில் எச்சமயத்திலும் பயிற்சி வகுப்பிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

அங்ஙனம் பயிற்சியிலிருந்து விலக்கப்பட்டவருக்கு அவர் கட்டிய பணமெதுவும் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது. அத்துடன் அவர் பிந்திய பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் தகுதியற்றவராவர். பயிற்சி வகுப்பிலிருந்து தானாக விலகும் ஒருவருக்கு அவர் கட்டிய பணமெதுவும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. ஆனால், அவர் பயிற்சி வகுப்பிலிருந்துபோது சௌக்கியத் திணைக்களத்திலிருந்து பெற்ற படிகளை இத்திணைக்களத்துக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டியதவசியம்.

(ஏ) **தகைமைப் பரீட்சை.**—பயிற்சி வகுப்புகள் தொடங்கிய 10 மாதங்கள் முடிவடையும் போது லண்டன் ரேயல் சௌக்கிய சங்கத்தின் உள்ளூர் பரீட்சைச் சபையால் ஓர் போதனமுறைப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதைத் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு களத்துறையில் வெளிக்கள வேலையில் பயிற்சியளிக்கப்படும். அந்த இரண்டு மாதங்களும் முடிவடையும் நேரத்தில் சாதனமுறைப் பரீட்சையும், வாய்மொழிப் பரீட்சையும் நடைபெறும்.

(ஐ) **நியமனம்.**—லண்டன், ரேயல் சௌக்கிய சங்கத்தின் உள்ளூர்ப் பரீட்சைச் சபையைத் திருப்தி செய்யும் அபேட்சகர்கள் சௌக்கியத் திணைக்களத்தில் வெற்றிடங்கள் ஏற்படும்போது பொதுச்சௌக்கியப் பரிசோதகர்களாக நியமனம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

9. **சம்பள அளவுத்திட்டமும், சேவை நிபந்தனைகளும்.**—சகல நியமனங்களும் பொதுச் சௌக்கியப் பரிசோதகர்கள் வகுப்பு ii என்ற சேவையில் செய்யப்படும்.

சம்பள அளவுத்திட்டம் (திரட்டிய தொகை)

வகுப்பு ii—வருடமொன்றுக்கு ரூபா 3,288—13 × 144—5,160/-

வகுப்பு i—வருடமொன்றுக்கு ரூபா 5,304—9 × 144 ; 1 × 180—6,780/-
(வினைத்திறமைகாண் தடைகள் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்படும்)
விசேட வகுப்பு—வருடமொன்றுக்கு ரூபா 6,960—6 × 180 ; 1 × 240—8,280/-

அந்த நேரத்தில் நடைமுறையிலுள்ள திணைக்களப் பிரமாணங்களுக்கு அமைவாக மாற்றிய பயணப்படி, அலுவலகப்படி, உத்தியோக உடைகள், தொப்பிகள், மழை அங்கிகள் ஆகியன வழங்கப்படும்.

10. (i) இந்நியமனம், அரசாங்கசேவை அதிகாரசபைப் பிரமாணங்கள், நிதிப்பிரமாணங்கள், நடைமுறைக் கைநூல் பிரமாணங்கள் சௌக்கியசேவைத்திணைக்கள விதிகள், உத்தரவுகள், மற்றும் அரசாங்கத்தால் காலத்துக்குக்காலம் பிறப்பிக்கப்படும் வேறேதாவது உத்தரவுகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்குக் கட்டுப்படுவதாக இருக்கும். ஒவ்வொரு உத்தியோகத்தரும் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் சேவைசெய்ய வேண்டும்.

(ii) இப்பரீட்சை முழுவதையும் சிங்கள மொழிமூலம் எடுக்காதவர்களில் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களான அபேட்சகர்கள் தமது தகுதி காண் காலத்தில் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும். இந்த அபேட்சகர்களை அவர்களது தகுதிகாண் காலமுடிவில் உறுதிப்படுத்துதல், ஏனைய தேவைகளுடன் சிங்களத்தில் விதிக்கப்படும் தேர்ச்சிப்பரீட்சைகளிற் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும்.

(iii) தகுதிகாண் காலத்தில், விதிக்கப்பட்ட தேர்ச்சித் தரத்தைச் சிங்களத்தில் எய்தத்தவறுவோர், வேலையினின்று நீக்கப்படலாம். ஆனால், அரசாங்க மொழியில் தேர்ச்சிபெறுவதற்கு உண்மையாகவே முயற்சி செய்யப்பட்டுள்ள தென நியமிக்கும் அதிகாரி திருப்திப்படுவாரானால், அவ்வாறு நீக்கப்படுவதுதள்ளி வைக்கப்படலாம்.

(iv) அரசாங்க சேவைக்கு நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" சகலரும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நிறைவேற்றுதற்கும், குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல் நடாத்துதற்கும், எற்கெனவே இயற்றப்பட்ட அல்லது இனிமேல் இயற்றப்படக்கூடிய எந்தப் பிரமாணங்களுக்கும் இணங்கி நடக்கவேண்டுமென்று கேட்கப்படுவர்.

(v) உத்தியோகத்தர்கள் ஒருவருடகால திருப்திகரமான சேவைக்குப் பின்னர் பால் கட்டுவதிலும், கொழுக்கிப்புழு நோய்க்குச் சிகிச்சை செய்வதிலும் திறமைச் சான்றிதழ்களைப் பெற்றிருப்பார்களாயின் அவர்களது முதலாவது சம்பள ஏற்றம் கொடுக்கப்படும். நியமனம்பெற்ற ஒருவருட காலத்துள் பால்கட்டுவதிலும், கொழுக்கிப்புழு நோய்ச் சிகிச்சையிலும் திறமைச் சான்றிதழ்களைப் பெறத்தவறுதல் முதலாவது சம்பள ஏற்றம் நிறுத்தப்படுவதற்குக் காரணமாகும். அதன்பிறகு இவற்றைப் பெறத் தவறும் படசத்தில் சம்பள ஏற்றம் பின்போடப்படும். எனினும், திறமைச் சான்றிதழைப் பெறத் தவறிய உத்தியோகத்தர்களைச் சேவையிலிருந்து நிறுத்தும் உரிமை சௌக்கிய சேவை அதிபதிக்கு உண்டு.

11. சௌக்கியத் திணைக்களத்தில் திருப்திகரமான வகையில் முதல் வருடச் சேவையை முடிக்கும் பொதுச் சௌக்கிய பரிசோதகர்களுக்கு மட்டும் லண்டன், ரேயல் சௌக்கிய சங்கத்தின் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும்.

12. மேற்கூறப்பட்ட தேவைகளுள் எதற்கும் இசைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வி. பி. ஏ. பெரேரா,
பிரதி அதிபதி (நிருவாகம்)
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

3.12.1969.

## விண்ணப்பப் படிவம்

### பொதுச் சௌக்கியம் பயில்வோர் பரீட்சை

1. பெயர் (முன் பெயர் முதலெழுத்துக்களுடன்).——————.
முன்பெயர் முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :——————.
(தனித்தனி எழுத்துக்களில்)

2. விலாசம் :——————.

3. வயதும் பிறந்த திகதியும் :——————.

4. இனம் :——————.

5. மணமானவரா ? தனித்தவரா ? :——————.

6. எந்நாட்டவர் :——————.

(அ) பரம்பரையான இலங்கையரா ? :——————.

(ஆ) அல்லது பதிவுசெய்யப்பட்ட இலங்கையரா ? :——————.

7. (அ) நீர் பெற்றுள்ள உயர்கல்வித் தகைமைகள் :————.

(ஆ) சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது க. பொ. த. ப. பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :

| 1 ஆந் தடவை (மொழி மூலம்) | 2 ஆந் தடவை (மொழி மூலம்) |
|---|---|
| 1.————. | 1.————. |
| 2.————. | 2.————. |
| 3.————. | 3.————. |
| 4.————. | 4.————. |
| 5.————. | 5.————. |
| 6.————. | 6.————. |

8. (பொதுச் சௌக்கியம் பயில்வோர்) பரீட்சையை எடுக்க விரும்பும் மொழி (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) :————.

9. உமது தற்போதைய தொழில் (ஏதாவது இருந்தால்) :————.

10. நீர் வேலையிலிருந்தால், பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்து, அவ்வகுப்பில் உரிய நேரத்தில் சேருவதற்காக, உம்மை விடுவிப்பதற்கு உமது தலைவர் (முதலாளி) விரும்புகிறாரா ?———.

11. இதற்கு முன் எப்போதாவது இப்பயிற்சி வகுப்பில் இருந்திருக்கிறீரா :————.

இந்தப் படிவத்தில் நான் கொடுத்துள்ள தகவல்கள் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கிறேன். அரசிறை முத்திரைகளை நானே ஒட்டியிருக்கிறேன். அவை உண்மையானவையும், முன்னர் உபயோகிக்கப்படாதனவும் ஆகும். இந்தப் பரீட்சைக்கான பிரமாணங்களுக்கும், அபேட்சகர்களுக்கெனப் பரீட்சை ஆணையாளரால் இயற்றப்பட்ட விதிகளுக்கும் கட்டுப்படுதற்கு நான் இத்தால் இணங்குகிறேன்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் முழுவதும் அன்றேல் அவற்றில் எதுவும் தவறானதென்று தேர்வுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமைநீக்கஞ் செய்வதென்றும், அத்தவறு நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்குவதென்றும் உள்ள தீர்மானத்துக்குக் கட்டுப்படவும் நான் சம்மதிக்கிறேன்.

| ரூபா 25 பெறுமதியான முத்திரைகள் |
|---|

திகதி :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

(அபேட்சகர் முத்திரைகளின்மீது தனது கையொப்பத்தை வைக்கவேண்டும்)

உ–485—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல 14,884

---

இல. 1/23/4/14 (ஜி)

## பொது எழுதுவினைஞர் சேவையில் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—1970 பெப்ரவரி

1957.11.15 இன் 1/36/2/1 (ஜி) திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தினாலும் 1967.11.26 இன் ஜி (162) இலக்கத் திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தினாலும் திருத்தப்பட்டவாறுள்ள 1955.10.1 இன் 10,844 இலக்கத்தையுடைய அரசாங்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொது எழுதுவினைஞர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு " இ " இல் விதித்த பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமைக்காண் தடைப் பரீட்சை 1970, பெப்ரவரி 20 ஆந் தேதியில் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும். இப் பரீட்சையை நடாத்துவதற்கென அவரினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர்.

3. இவ் அறிவித்தலின் சிங்கள, ஆங்கிலப் பகுதிகளின் கீழ் இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப் படிவம் வெளியிடப்பட்டுள்ளது. 67.11.26 இன் ஜி (162) இலக்கத் திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தின் இரண்டாம் பந்தியிலுள்ள பணிப்புரைகளுக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கும் அவை சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலே வீதி, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரியை 1970, ஜனவரி 9 ஆந் தேதிக்குப் பிந்தாமல் அடையத்தக்கதாக திணைக்களத் தலைவர்கள் வழியாகப் **பதிவு அஞ்சல்** மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பும் கடித உறையின் இடது பக்கம் மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு தேதிக்குப் பின் பெறப்படும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

4. விண்ணப்பம் ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் புக விடுதலட்டையும் நேர அட்டவணையும் பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்படும். பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்பு புகவிடுதலட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அப்பரீட்சார்த்தி கொழும்பு, அ. பெ. இல. 1503, கொம்பனித் தெரு, மலே வீதியிலுள்ள பரீட்சை ஆணையாளருடன் (தந்தி முகவரி : " எக்சாம்சு ", கொழும்பு) தாமதமின்றித் தொடர்பு கொள்ளல் வேண்டும். அவர் தமக்குப் புகவிடுதலட்டை கிடைக்கவில்லையென்பதைப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவிப்பதுடன் பின்வரும் தகவல்களையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சைப் பெயர் :—

(2) முழுப் பெயர் :—

(3) முழு அஞ்சல் முகவரி :—

(4) அஞ்சல் அலுவலகம், பதிவு எண், அனுப்பிய தேதி :—

பி. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச்செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 10 ந உ.

### பரீட்சைப் பகுதி அலக்கம்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(1) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படும்.

(2) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(3) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(4) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(5) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(6) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத் தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணு நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தம்து விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளேயோ வேறெவ்விதப் பொருளேயோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியன வற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டி விடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளேயோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களேயோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துக்குள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்லப் பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டு வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கவுங் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவும் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களின் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டுப் பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு—**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை, மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபித்தற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனல் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாக கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறுன இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானல், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலேயில் **(வலது பக்க மேல் மூலேயிலன்று)** உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்டவேண்டும்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

கே. ரி. டபிள்யூ. சுமனசூரியா,
பரீட்சாதிகாரி.

12–705—12.12.69 ந் திகதிய வர்த்தமனி இல. 14,884

## சுங்க இணைப்புச் சேவை

சுங்க இணைப்புச் சேவையின் II ம் வகுப்பிற் சேர விரும்பும் ஆண் பரீட்சார்த்திகளுக்கான போட்டிப் பரீட்சை ஒன்று பரீட்சைப் பகுதி ஆணையாளரால் 14.3.1970 இல் பின்வரும் இடங்களில் நடாத்தப்படும் :—

கொழும்பு, கண்டி, காலி, பதுளை, யாழ்ப்பாணம், அனுராதபுரம், திருகோணமலை, இரத்தினபுரி, குருநாகல், இவற்றுள் எந்த இடத்திலாவது போதிய தொகையாகப் பரீட்சார்த்திகள் சேராவிட்டால் அந்த இடம் தவிர்க்கப்படலாம்.

2. **பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதவேண்டிய மொழி.**—பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்குத் தோன்றுவதற்குத் தகுதியளிக்கும் பரீட்சையை எந்த மொழியில் எடுத்துச் சித்தியெய்தினார்களோ, அந்த மொழியிலேயே இப்பரீட்சையை எழுத வேண்டும் (அதாவது சிங்களத்தில் அல்லது தமிழில், அல்லது ஆங்கிலத்தில்) எனினும் ;

(அ) 6 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட கல்வித் தகைமையை உடைய பரீட்சார்த்தி ஒருவர் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையை எந்த மொழியில் எடுத்துச் சித்தி எய்தினாரோ, அந்த மொழியிலேயே இப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

(ஆ) தகுதியளிக்கும் பரீட்சையின் பல்வேறு பாடங்களையும் வெவ்வேறு மொழிகளில் எடுத்துச் சித்தியெய்திய பரீட்சார்த்தி ஒருவர் 14 ஆம் பந்தியில் உள்ள (1) ம் பாடத்தை (அதாவது மொழியும், வியாசமும்) செய்யும் மொழியிலேயே இப் பரீட்சையை எழுத வேண்டும் ;

(இ) தகுதியளிக்கும் பரீட்சையைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எடுத்துச் சித்தியெய்திய பரீட்சார்த்தி ஒருவர், அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில் கல்விகற்ற பரீட்சார்த்தி ஒருவர் தாம் விரும்பினால் இப் பரீட்சையைச் சிங்களத்தில் எழுதலாம்.

3. **சம்பளம்.**—சித்தியெய்திய பரீட்சார்த்திகள் சுங்க இணைப்புச் சேவையின் II ஆம் வகுப்பில் நியமிக்கப்படும்போது ஆண்டுக்கு ரூபா 1,980—16 × 120, 8 × 120—5,340 ஆகிய சம்பளத்தில் அமர்த்தப்படுவர். (இச் சம்பளத் திட்டத்தில் ஆண்டுச் சம்பளம் 2,340 ரூபா, 3,900 ரூபா, 4,800 ரூபா ஆவதற்கு முன் திறமைத் தடைப்பரீட்சை உண்டு.)

4. **சேவை நிபந்தனைகள்.**—

(அ) **பொது**—

(i) இவ் வர்த்தமானியின் I ஆம் பாகத்தின் II ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக ;

(ii) இப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் நியமிக்கப்படும் திகதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர். அவர்களின் பதவிகள் உபகாரச் சம்பளத்திற்குரியவை.

(iii) சித்தியெய்திய பரீட்சார்த்திகள் பகல் இரவு ஆகிய இரண்டு பொழுதும் கடமையாற்றவும், இலங்கையின் எப் பகுதியிலாயினும் பொருள் மதிப்பாளர் கிளை, பிரயாணப் பொதி அலுவலகம், தடுப்புக்கிளைகள், ஏற்றுமதி அலுவலகம், பண்டசாலைகள் ஆகிய இடங்களில் சேவை செய்யவும் வேண்டியவர்களாவதுடன் பிரதான சுங்க சேகரிப்பாளரால் தீர்மானிக்கப்படும் வேறெந்த வேலைகளிலும் அமர்த்தப்படலாம்.

(iv) சித்தியெய்திய பரீட்சார்த்திகள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அனுசரணையிற் கொண்டு வருவதற்கும், 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்குமாக ஏற்கனவே செய்யப்பட்டுள்ளனவும் இனிமேல் செய்யப் படக்கூடியனவுமான எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகவேண்டும்.

இப்பரீட்சையைச் சிங்கள மொழிமூலம் எடுக்காதவரும் நியமனத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான பரீட்சார்த்திகள் தமது தகுதிகாண் சோதனைகாலத்தில் சிங்களத்தில் தேர்ச்சி அடைய வேண்டும். கீழே குறிப்பிட்டுள்ள தேர்ச்சிப் பரீட்சைகளில் அவற்றுக்கெதிரே குறிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் அவர்கள் சித்தி எய்த வேண்டும்.

| பரீட்சைத் தரம் | பரீட்சைகளில் சித்தியெய்துவதற்கு அனுமதிக்கப்படும் காலம் |
|---|---|
| I ஆம் தரத் தேர்ச்சிப் பரீட்சை (3 ம் தரக் கட்டம்) | நியமன தேதியிலிருந்து 1 ஆண்டுக்குள் |
| II ஆம் தரத் தேர்ச்சிப் பரீட்சை (5 ம் தரக் கட்டம்) | நியமனத்தேதியிலிருந்து 2 ஆண்டுக்குள் |
| III ஆம் தரத் தேர்ச்சிப் பரீட்சை (க.பா.த.ப. கட்டம்) | நியமனத்தேதியிலிருந்து 3 ஆண்டுக்குள் |

இப் பரீட்சார்த்திகள் தங்கள் வேலையிலும், ஒழுக்கத்திலும் திருப்தியளிப்பதையும் மேலே குறிப்பிட்டுள்ள 3 ம் தரத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்துவதையும் பொறுத்தே தகுதிகாண் காலம் முடிவடையும்போது பதவிகளில் உறுதிப் படுத்தப்படுவர். விதிக்கப்பட்டுள்ள பரீட்சையில் விதிக்கப் பட்டுள்ள காலத்துக்குள் சித்தி எய்தத் தவறினால் ஆண்டு ஏற்றம் இடை நிறுத்தப்படும். குறிப்பிட்ட காலத்துக்கு அப்பால் மேலும் ஆறு மாதங்களுக்குள் பரீட்சையில் சித்தியெய்தாவிடின் இடைநிறுத்தம் முற்றான நிறுத்தமாக மாற்றப்படும். அவ்வாறு நிறுத்தப்பட்டமை சோதனையில் சித்தியடையும்வரை செயற்படும். தகுதிகாண் சோதனைக் காலம் முடிவடையும்போது III ஆம் தரத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தி எய்தாத பரீட்சார்த்தி வேலையில் இருந்தும் நிறுத்தப் படுவதற்கு ஆளாகலாம்.

5. **நியமனங்கள் செய்யப்படும் முறை.**—சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்கவர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டு, ஏற்ற காலி இடங்கள் வரும்போது அவர்கள் நியமனம் பெறுவார்கள்.

6. **பரீட்சை எடுப்பதற்குத் தகுதியளிக்கும் பொது நிபந்தனைகள்.**—

(i) பரீட்சார்த்திகள் நற்குணமுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(ii) பரீட்சார்த்திகள் *இலங்கையராய் இருத்தல் வேண்டும் ;

*அரசாங்க சேவையில் சேரும் சகல நோக்கங்களுக்கும் " இலங்கையர் " என்னும் பதம், பரம்பரையாலோ, பதிவினாலோ இலங்கைப் பிரசையாயுள்ள ஒருவர் எனப் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளது.

(iii) பரீட்சார்த்திகள் குறைந்தபட்சம் பின்வருவனவற்றில் தராதரப் பத்திரங்களை உடையவராயிருத்தல் வேண்டும் :—

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சையில் ஆங்கிலம், எண்கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியெய்தியகல்விப் பொதுத் தராதரப் பத்திரமும் ; அத்துடன்,

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் அல்லது அதனிலும் மேலான பரீட்சையில் ஒரேமுறையில் மூன்று பாடங்களில் சித்தியும் ;

(iv) பரீட்சார்த்திகள் 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் திகதி 17 வயதுக்குக் குறையாதவர்களாயும் 23 வயதுக்கு மேற்படாதவர்களாயும் இருப்பதாகத் திருப்திகரமான சான்று அளிக்க வேண்டும்.

7. **விண்ணப்பங்கள்.**—

(i) இவ்வறிவித்தலின் இறுதியில் விண்ணப்ப மாதிரிப் படிவம் கொடுக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை ஒரு முழுத்தாளின் அரைத்தாளில், குறிப்பிட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்கத் தாம் பரீட்சை எடுக்க உத்தேசித்துள்ள மொழியில் தாமே தயாரித்து, தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். இதன்பொருட்டு ஒரு தாள் மட்டும் உபயோகிக்கப்படல் வேண்டும். 1 ஆம் பக்கத்தில் 1 தொடக்கம் 6 வரையுள்ள கூடுகளும், 2 ஆம் பக்கத்தில் (பின்பக்கத்தில்) 7, 8, 9 ஆம் கூடுகளும் இருத்தல்வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் பதிவு அஞ்சலில் பிரதான சுங்க சேகரிப்பாளர், த.பெ. இல. 518, கொழும்பு 1 என்னும் விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் தேதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

அத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் நிராகரிக்கப்படும். பரீட்சார்த்தியின் பெயரும், நிலையமும் உறையின் இடதுபக்கமேல் மூலையில் தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் 25 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளைக் கொண்டு, அவை பரீட்சார்த்தியின் கையொப்பம், திகதி ஆகியவற்றால் பயனற்றதாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) ஏற்கனவே அரசாங்கப் பகுதிகளில் அலுவல் பார்க்கும் பரீட்சார்த்திகள், தாங்கள் கடமையாற்றும் அரசாங்கப் பகுதிகளின் தலைவர்களின் ஊடாகவே தங்கள் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆம் திகதியன்றோ, அதற்கு முன்பதாகவோ பிரதான சுங்க சேகரிப்பாளரிடம் சேரும் வண்ணம் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் செய்து, பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்களுக்கு நேரகாலத்தோடு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

விண்ணப்பங்கள் பிரதான சுங்க சேகரிப்பாளருக்கு அல்லது இத்திணைக்களத்தின் வேறு எந்த உத்தியோகத்தருக்கேனும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகாது.

8. **பரீட்சைக்கு அனுமதி.**—(i) பிரதான சுங்க சேகரிப்பாளர் தாம் பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கெல்லாம் அனுமதிப் பத்திங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப்பரீட்சை மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குத் தங்கள் அனுமதிப் பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய பத்திரத்தைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப் படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை மண்டபத்தில் சமுகமளிக்கும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைத் தினத்தன்று தமது அனுமதிப் பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல் வேண்டும்.

இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளுக்கான விதிகள் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ் விதிகளுக்குக் கட்டுப் பட்டவராவார்கள்.

பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தனது அனுமதிப் பத்திரத்தைப் பெறுவிடின், அவர் உடனடியாகப் பிரதான சுங்க சேகரிப்பாளருடன், மா.ம.சுங்கம், கொழும்பு 1 (தந்தி விலாசம் "சுங்கம்", கொழும்பு) என்னும் விலாசத்திற்குக் கடிதத் தொடர்பு கொண்டு அனுமதிப்பத்திரத்தைத் தான் பெறவில்லையென அறிவித்துப் பின்வரும் தகவல்களையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர்;

(2) முழுப் பெயர்;

(3) முழு அஞ்சல் விலாசம்;

(4) பரீட்சார்த்தி பரீட்சையை எடுப்பதற்கு விண்ணப்பம் செய்துகொண்ட பரீட்சைத் தானம்;

(5) அஞ்சல் அலுவலகமும், பதிவிலக்கமும், விண்ணப்பம் அனுப்பிய தேதியும்.

(ii) பரீட்சைக்கு அனுமதியளிக்கப்படுவது தகுதியுடைமையை ஒப்புக் கொண்டதாகாது.

9. **அடையாளச் சீட்டுக்கள்.**—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்தில், மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுவார்கள். இந்த நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமை அதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் 3 ஆண்டுகட்கு மேற்படாத காலத்தில் வழங்கப் பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச் சீட்டு (பாஸ்போட்) ;

(இ) இப் பரீட்சைத் தேதிக்கு முன் 3 ஆண்டுகட்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாங்கத் திணைக்களத்தின், பொதுக் கூட்டுத் தாபனத்தின், அல்லது மற்றும் நியதிச் சட்டமுறையான அமைப்பின் அதிகாரத்தோடு வழங்கப் பட்டதும், வைத்திருப்பவரின் புகைப்படம் ஒன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம், அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம் ;

(ஈ) கடவுச் சீட்டின் (பாஸ்போட்) அளவுள்ள புகைப்படம். அதன் பின்பக்கத்தில் கீழ்க்காட்டப்படும் அத்தாட்சி, கையொப்பப் படிவத்தில் அத்தாட்சிப்படுத்தக் கூடியவர் ஒருவரால் அத்தாட்சி செய்யப் பட்டிருக்க வேண்டும்:—

" பின்புறத்தில் உள்ள புகைப்படம்........................
(பரீட்சார்த்தியின்முழுப் பெயர்)

என்பவருடையது என்பதையும் அன்னாரின் கையொப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

........................
அத்தாட்சிப் படுத்துபவரின் கையொப்பம்.

........................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

........................
பெயரும், பதவியும்.

........................
தேதி.

மேலே குறிப்பிட்டுள்ள சாதனங்களில் ஒன்றைக் கொண்டுவராத பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சை உரிமை தற்காலிகமானதெனக் கருதப் படும். பிரதம சுங்க சேகரிப்பாளரின் உசிதாசாரப்படி இத்தகைய பரீட்சையுரிமை நிராகரிக்கப்படலாம்.

10. **தகுதிச் சாதனங்கள்.**—(i) விண்ணப்பத்தோடு எவ்வித சாதனங்களும் சேர்த்து அனுப்பப் படலாகாது. ஆனால், பத்திரத்திலேயே கேட்கப் பட்டவாறு தேவையான விபரங்கள் எல்லாம் கொடுக்கப் பட்டிருத்தல் வேண்டும். இந்த வகைகளிலெல்லாம் நிறைவு பெற்றிராத ஒரு விண்ணப்பம் அதன் தகுதிக்கேற்ப சீர்தூக்கி ஆராயப் பட்டு, நிராகரிக்கப்படினும் படலாம்.

(ii) தகைமை பெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து அவர்கள் தங்கள் தகுதி உடைமையை நிறுவுவதற்குச் சாதனச் சான்று வேண்டப்படும். அத்தகைய பரீட்சார்த்திகள் அவைகளைக் காட்டுமாறு பிரதான சுங்க சேகரிப்பாளரால் கேட்கப்படும்போது தாமதமின்றி அவற்றைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் தேவையாகும் :—

(அ) பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்டுள்ள ஒரு நற்சான்றுப் பத்திரம்.

**குறிப்பு.**—பரீட்சார்த்தி ஓர் அரசாங்கப் பாடசாலையில் அல்லது உதவிபெறும் பாடசாலையிற் கல்வி கற்பவராயிருந்தால், அல்லது அண்மையில் விட்டு விலகியவராயிருந்தால் அத்தகைய பாடசாலையின் அதிபரிடமிருந்து நற்சான்றுப் பத்திரம் பெறுதல் வேண்டும். அல்லாவிடின் அதை ஒரு சமாதான நீதவானிடமிருந்தோ, வழக்கறிஞரிடமிருந்தோ, நியாயதுரந்தரரிடமிருந்தோ, நொத்தாரிசிடமிருந்தோ, பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்தோ, 2,400 ரூபாவோ, அற்கு மேலாகவோ ஆண்டுச் சம்பளமாகப் பெறும் ஒரு நிரந்தரமான அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். அல்லது பொதுவாகக் கூறுமிடத்து, பிரசித்தி பெற்றவரும் சாதாரணமாக அறியப் பட்டவருமான ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு நற்சான்றுப் பத்திரம் வழங்குபவரின் பெயரும், பதவியும், விலாசமும் அதில் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் பரீட்சார்த்திகள் நற்சான்றுப் பத்திரங்கள் காட்டுமாறு வேண்டப்படமாட்டார்கள்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்புப் பதிவு செய்யப்படாத பரீட்சார்த்திகளின் பொருட்டு) பதிவாளர் நாயகத்தால் கொடுக்கப்பட்ட விசேட வயதுச் சாட்சிப் பத்திரம். பிறப்புச் சான்றற்ற ஒருவர் தமது நேர் தகவு வயதுச் சான்றிதழை மட்டும் தரும்பொழுது, அவர் அச்சான்றிதழிற் குறிப்பிடும் பிறப்பாண்டின் ஜூலை முதலாம் திகதி பிறந்தவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு.**—(i) பாடசாலைத் தேவைகளுக்கு அல்லது கல்வித் தேவைகளுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சாட்சிப் பத்திரமோ, பிறப்புப் பதிவினின்றும் எடுக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பகுதியோ ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

(ii) சத்தியக் கடுதாசியோ, ஞானஸ்நான அத்தாட்சிப்பத்திரங்களோ பிறப்புச் சாட்சிப் பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(iii) பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும்/உபயோகிப்பனவும் இப்பரீட்சை எடுப்பதற்குக் கொடுத்துள்ளதும்/கொடுத்துள்ளனவுமான பெயரினின்றும் வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, பிறப்பு இறப்புப்பதிவுச் சட்டத்தின் (அத். 110) 27 ஆம் அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின்படி உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் இருந்துகொண்டு 18.8.1957 இன் 394 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம் பெயர்களை மாற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவு இடாப்பில் உள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்கும்படி கேட்கப்படமாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவு அத்தாட்சிப்பத்திரம் அல்லது பரம்பரைப் பிரசையென்னும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் உத்தியோக பூர்வமான மூலக் கடிதம். (ஏற்புடையவிடத்து) ;

(ஈ) கல்வித் தகைமை பற்றிய மூல அத்தாட்சிப் பத்திரம், அல்லது அத்தாட்சிப் பத்திரம் வழங்கப் படாதிருக்குமிடத்து உத்தியோக பூர்வமான பிற சாதனங்கள். (உ-ம். இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் சாதாரண தரம்) தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட பெறுபேற்று அறிவிப்புத் துண்டு, அல்லது பரீட்சார்த்தியின் பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற மூலக் கடிதம்.

(iv) விண்ணப்பம் செய்யும்போது தேவையான சாதனங்கள் எல்லாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். பரீட்சை அதிகாரி கேட்கும்போது தேவையான சாதனங்களைக்காட்ட முடியாமல் இடர்ப்படும் அல்லது அவற்றை அனுப்பி வைக்கத் தாமதிக்கும் பரீட்சார்த்தியினது பரீட்சைக்கான பதிவு நிராகரிக்கப்படும்.

11. **பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்.**—இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் அவர் பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும்போதோ, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது, அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்யப் படுவதற்கு ஏதுவாகும்.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவுக்கு உட்பட பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அல்லது அவர் நியமனம் பெற்றுச் சேவைசெய்யும் காலத்தில் எப்போதாவது அவர் இப் பரீட்சை எடுப்பதற்குத் தகுதியற்றவர் என்று நிரூபிக்கப் பட்டால், அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

இந்தக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கிணங்க ஒழுகாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. **பணம் திருப்பிக் கொடுத்தல்.**—எச் சந்தர்ப்பத்திலாவது பணம் எதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகக் கொடுத்த கட்டணங்களை வேறெப் பரீட்சைக்கேனும் மாற்ற முடியாது.

13. **பரீட்சை எடுப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விடுதலை.**—பிரதான சுங்க சேகரிப்பாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, அவர்களுக்கு அவர்களுடைய திணைக்களத்தின் தலைவர்கள் விடுதலை (கடமை விடுதலையன்று) வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.

14. **பரீட்சைத் திட்டம்.**—பரீட்சைக்குரிய பாடங்களும் புள்ளிகளும் பின்வருமாறு :—

| | | | | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (1) | மொழியும் வியாசமும் | 2½ | மணித்தியாலம் .. | 200 |
| (2) | பொது விவேகம் | ¾ | ” .. | 100 |
| (3) | பொது அறிவு .. | 1 | ” .. .. | 100 |
| (4) | நேர்முகப் பரீட்சை | | .. .. | 100 |
| | | | | 500 |

**குறிப்பு.**—(i) எல்லா விடைத்தாள்களிலும் கூடாத கையெழுத்துக்கும் எழுத்துப்பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். பரீட்சார்த்திகளின் எழுத்து வாசிக்க முடியாத வகையில் இருப்பின் அவர்கள் தகுதியற்றவரென நீக்கிவிடப் படுவதற்கும் ஆளாவர்.

(ii) ஒவ்வொரு பாடத்திலும் நூற்றுக்கு 50 சதவிகிதமும் அதற்கு மேலும் புள்ளிகள் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளுடைய பிரயாணச் செலவு, பற்றும் செலவுகள் இவ்விலாகாவினால் ஏற்கப்பட மாட்டாது.

**பாடவிதானம்**—

(1) வியாசமும் சுருக்கி எழுதுதலும் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) இப்பத்திரம் பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை (உயர் நிலை) தரத்தை ஒத்ததாகும்.

(2) பொது அறிவு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) இலங்கையிலும் உலகிலும் நடைபெறும் இப்போதய விடயங்கள், விஞ்ஞானம், கலை, இலக்கியம், விளையாட்டு முதலியன பற்றிப்பரீட்சார்த்திகள் அறிந்திருத்தல் வேண்டும்.

இப்பரீட்சையின் நேரசூசிகை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| மு. ப. 9.00 முதல் மு. ப. 11.30 வரை | .. | வியாசமும் சுருக்கி எழுதுதலும் |
| பி. ப. 1.30 முதல் பி. ப. 2.15 வரை | .. | பொது விவேகம் |
| பி. ப. 2.30 முதல் பி. ப. 3.30 வரை | .. | பொது அறிவு |

பிரதான சுங்க சேகரிப்பாளர் நேரசூசிகையின் பிரதிகளை வழங்கமாட்டார். ஆகவே பரீட்சார்த்திகள் இந் நேரசூசிகையைக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

15. பரீட்சை நடக்கும் இடம் பற்றிப் பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களிற் செய்துள்ள தெரிவே முடிவானதாகக் கருதப்படும். மாற்றங்கள் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

16. **வைத்தியப் பரிசோதனை.**—சித்தியெய்திய பரீட்சார்த்திகள், இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு உடல் தகுதிவாய்ந்தவர்களெனக் காட்டுவதற்கு ஒரு வைத்தியப் பரிசோதனையில் தேறுமாறு வேண்டப்படுவர்.

17. இப் பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிராத எவ்விடயத்தையும் பிரதான சுங்க சேகரிப்பாளர் உசிதாசாரப்படி தீர்த்து வைப்பார்.

பிரதான சுங்க சேகரிப்பாளர்.

மா.ம. சுங்கம்,
கொழும்பு 1, 1969 ம் ௵ நவெம்பர் ௴ 29 ந உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**மா. ம. சுங்கம், கொழும்பு**

சுட்டிலக்கம் : .................. ,
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

சுங்க இணைப்புச் சேவை

1. குடும்பப் பெயர், முதலெழுத்துக்களுடன் : ————.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ————.
3. முழு அஞ்சல் முகவரி : ————.
   (அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்கள் அலுவலக முகவரிகளையே கொடுத்தல் வேண்டும்.)
4. (அ) (1) பரம்பரையினால் அல்லது : ————.
   (2) பதிவினால் : ————.
   நீர் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக :
   (ஆ) பிறந்த இடம்—
   (1) பரீட்சார்த்தி : ————.
   (2) பரீட்சார்த்தியின் தகப்பனார் : ————.
   (3) பரீட்சார்த்தியின் தகப்பன் வழிப் பாட்டனார் : ————.
   (4) பரீட்சார்த்தியின் தகப்பன் வழிப் பூட்டனார் : ————.
   **குறிப்பு.**—பரீட்சார்த்தியும் அவருடைய தகப்பனாரும் இலங்கையில் பிறந்திருப்பின் (1), (2) மட்டும் நிரப்பப் படல் வேண்டும். பரீட்சார்த்தி அல்லது அவருடைய தகப்பனார் இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின் (1), (2), (3), (4) யாவும் நிரப்பப் படல்வேண்டும்.
5. நீர் பரீட்சை எடுக்க விரும்பும் நிலையம் :
   முதல் தெரிவு : ————.
   இரண்டாம் தெரிவு : ————.
6. தகவுத் திறன் : ————.
   (அ) பிறந்த திகதி : ————.
   (ஆ) கல்வித் தகைமைகள் : ————.
   (1) கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)—
   சித்தியெய்திய பாடங்கள் : ————.
   சித்தியெய்திய பரீட்சைத் தேதி : ————.
7. (1) மேலே நான் கூறியுள்ள கூற்றுக்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையெனவும்,

நான் இங்கு ஒட்டும் முத்திரைகள் உண்மையானவையெனவும், அவை உபயோகிக்கப்படவில்லை எனவும் எனது நேர்மையின் பேரில் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

(2) இப் பரீட்சைப் பிரமாணங்களுக்கிணங்கி ஒழுக நான் சம்மதிக்கிறேன்.

8. முத்திரைக்கான கூடு :

**கவனிக்க.**—பரீட்சார்த்தி இங்கு 25/- ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளை ஒட்டி அதில் அவரின் கையொப்பத்தையும் தேதியையும் இடுவதன் மூலம் அழித்தல் வேண்டும். முத்திரைகள் ஒன்றுக்கு மேல் ஒன்று ஒட்டப்படல் ஆகாது.

| |
|---|
| முத்திரைக்கான கூடு. ரூபா 25/- |

.............................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ————.

9. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

*........................................ வதிபவரும்/ வேலை பார்ப்பவரும், நான் நன்கு அறிந்தவருமான.................. என்பவர் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் 1969.......... ..............ஆம் நாளில் வைத்தாரென நான் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

(அத்தாட்சிப் படுத்துபவரின் கையொப்பம்) : ————.

பெயர், பதவி, நிலை : ————.

விலாசம் : ————.

* அரசாங்க சேவையில் உள்ள ஒரு விண்ணப்பதாரரின் கையொப்பம் அவரின் திணைக்களத் தலைவரினால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் பெற்ற ஓர் உத்தியோகத்தரால் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும்.

மற்றும் விண்ணப்பதாரரின் கையொப்பம் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்டவர்கள் :— சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளர் அல்லது வழக்கறிஞர் அல்லது பிரசித்த நொத்தாரிசு அல்லது அரசாங்க வித்தியாதிபதியின் முகாமையிலான பாடசாலை அதிபர், அல்லது கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், அல்லது 2,400 ரூபாவோ அதற்கு மேலோ ஆண்டுச் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் அல்லது விகாராதிபதி அல்லது பௌத்த கோயிலின் உயர் குரு அல்லது வணக்கத்திற்குரிய தலமொன்றினது பொறுப்பாளராக இருக்கும் அன்றேல் முக்கியத்துவமான பதவியொன்றை வகித்துவரும் பிற சமய குரு.

**பரீட்சைப் பகுதி, இலங்கை**

## பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரசின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ எற்றவாறு பெறுவர்.

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

(1) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

(3) பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்ற பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

(5) பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

(6) பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சைமண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறுக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

(7) வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

(8) பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

(9) ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ் விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடயங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறுக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

(10) கணித சம்பந்தமான வினுக்களுக்கு பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினுேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

(11) பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக் கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றையோ கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது, இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

(12) பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக்கூடாது, மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வச முள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந் தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

(13) தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வை யாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்தி லிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

(14) பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந் தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப் படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிட மிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடை யெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

(15) பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றை யிட்டு பரீட்சார்த் திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

(16) பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு—**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தோடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற் பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உப யோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றை யும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழுவிடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கோடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப் பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலை களையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள். கோட்டுரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிபிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக் கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க **மேல் மூலையிலன்று**) உமக்குக் கொடுக்கப் பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர் களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத் தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில் லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

12-458—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

திறைசேரி இல. 1/23/21/8 (ஜி.)

## மொழிபெயர்ப்பாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை—சனவரி, 1970

திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொழி பெயர்ப்பாளர் சேவைக்கு இரு பாலாருமான பரீட்சார்த்திகளைச் சேர்ப்பதற் கான போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளரினால் 1970 சனவரி 29 ஆந் தேதி தொடங்கி கொழும்பில் நடாத்தப்படும்.

2. **சம்பளம்.**—சித்தியடையும் பரீட்சார்த்திகள் மொழிபெயர்ப்பாளர் சேவையில் ஆண்டுத்திரட்டிய சம்பளமாக 3,864 ரூபாவில் தொடங்கி 144 ரூபா, 180 ரூபா ஆண்டேற்றங்களுடன் 8,040 ரூபாவரையுள்ள சம்பளத்திட்டத்தில் நியமிக்கப்படுவர். இச்சம்பளத்திட்டம் இரு பிரிவாக அமையும் : (அ) 3,864—144—6,456, (ஆ) 5,736—144 இல் 6 ; 180 இல் 8—8,040.

**குறிப்பு.**—(அ) பிரிவிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் (ஆ) பிரிவிற்குப் பதவியேற்றம் பெற முன்னர் தகுதிகாண் பரீட்சையொன்றில் சித்தி

யடைதல் வேண்டும். (அ) பிரிவில் 10 ஆண்டுகள் சேவை செய்துள்ளோர் மாத்திரம் இப்பரீட்சையெடுப்பதற்குத் தகுதியுடையவராவர்.

**3. சேவை நிபந்தனைகள்.**—(i) இப்பரீட்சையில் சித்தியடையும் ஆண் பரீட்சார்த்திகள் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுத் தகுதிகாண் நிலையில் நியமனம் பெறுவர். அவர்களின் பதவிகள் உபகாரச் சம்பளத்துக்குரியன.

(ii) இப்பரீட்சையில் சித்தியடையும் பெண் பரீட்சார்த்திகள் முதலில் சகாய நிதி அடிப்படையில் நியமிக்கப்பட்டு, நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலத்துக்குச் சோதனை நிலையில் இருப்பர். அவர்கள் 10 ஆண்டுச் சேவை முடியுமுன்னர் எக்காலத்திலாவது உபகாரச் சம்பள நிலையைச் சேரும் விருப்புரிமையுடையவராவர். ஒருமுறை இவ் விருப்புரிமையைப் பிரயோகித்தால் அதனைப் பின்னர் மீட்க முடியாது. சோதனைக்காலத்தில் இவ்விருப்புரிமையைப் பிரயோகிக்கும் பெண் பரீட்சார்த்திகள் பின் தகுதிகாண் நிலையிலிடப்படுவர். அத்தகுதிகாண் நிலைக்காலம், அவர்களின் மூன்று ஆண்டுச் சோதனைக்காலத்தில் மேலும் எஞ்சியிருக்கும் காலத்துக்குச் சமமாகும்.

(iii) அவர்கள் இடமாற்றத்துக்குரியவர் ; இலங்கையில் எந்நிலையத்திற்காவது அவர்களை அனுப்பலாம்.

(iv) அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்துக்காகப் " புதிதாகச் சேர்ந்தோர் " எனக் கருதப்படும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்கு இப்போது நடைமுறையிலிருக்கும் அல்லது இனி மேல் புகுத்தப்படும் சட்டங்களுக்கும், விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோமென்னும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

(தமிழ்) மொழிப்பெயர்ப்பாளர்களாக நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள், அரசகரும மொழிக்கொள்கை நோக்கத்துக்குப் " புதிதாகச் சேர்ந்தோர் " ஆயின், தமது தகுதிகாண்/சோதனை நிலைக் காலத்தில் அரசகரும மொழியாகிய சிங்கள மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும். இப் பரீட்சார்த்திகளின் தகுதிகாண்/சோதனை நிலை முடிவடையும்போது அவர்களின் திருத்திகரமான சேவையையும் நடத்தையையும் பொறுத்தும், விதிக்கப்பட்டுள்ள சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடைவதைப் பொறுத்தும் அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர்.

(v) படிகளும் பிற சேவை நிபந்தனைகளும் சம்பந்தமாக, இச்செய்திமடலின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

**4. தகவுத்திறன்.**—இப்பரீட்சைக்கான பரீட்சார்த்திகள்—

(i) நற்பண்புள்ளவராயிருத்தல் வேண்டும் ;

(ii) *இலங்கையராயிருத்தல் வேண்டும் ;

(iii) குறைந்த பட்சம் பின்வரும் பிரதான தேவைகளிலொன்றையாவது உடையவராயிருத்தல் வேண்டும் :—

(1) சிங்களத்தில் அல்லது தமிழில் இலண்டன் பல்கலைக்கழகக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ;

(2) சிங்களத்தில் அல்லது தமிழில் இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்) ;

(3) சிங்களம் அல்லது தமிழ் (விசேட சிங்களம் அல்லது விசேட தமிழ் அல்ல) ஒரு பாடமாகக் கொண்ட உயர்தரப் பாடசாலைத் தராதரப்பத்திரம் ;

(4) சிங்களம் அல்லது தமிழ் ஒரு பாடமாகக் கொண்ட இலண்டன் பல்கலைக்கழக இடைக்கலைத் தராதரப்பத்திர/இலங்கைப் பல்கலைக் கழக பொதுக்கலைத் தகைமை (முதற்) பரீட்சைத் தராதரப்பத்திரம் ;

(5) பொதுத் திறைசேரியின் சிங்கள/தமிழ் தேர்ச்சிப் பரீட்சையில் உயர் தரத்தில் சிங்களத்தில் அல்லது தமிழில் சித்தி ;

அத்துடன், குறைந்த பட்சம் பின்வரும் துணைத் தேவைகளில் ஒன்றையும் பெற்றிருத்தல் வேண்டும் :—

(அ) 1957 யூலையில் அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்டதும் ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் கூடியதுமான சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் (ஆங்கில மூலம்) ; அல்லது

எப்போதாவது கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர)ப் பரீட்சையில் ஆங்கில மொழி " அ " பாடத்திட்டத்தில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தியுடன் கூடிய சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் ; அல்லது

ஆங்கிலத்தில் சமமான அல்லது உயர் தேர்ச்சியுடன் பரீட்சையொன்றில் சித்தி.

(ஆ) ஆங்கில மொழி " அ " பாடத்திட்டத்தில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தியுட்பட இருமுறைகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் பெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரண தரம்).

**குறிப்பு.**—மேலே கூறப்பட்ட பரீட்சைகளில் ஏதேனும் ஒன்றையெடுத்து, இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்களின் முடிவுத் தேதிக்கு முன்னர் அதன் பெறுபேறுகள் கிடைக்கப் பெருத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iv) 1970 சனவரி 1 ஆந் தேதியில் 19 வயதுக்குக் குறையாதவர்களாயும் 25 வயதுக்கு மேற்படாதவர்களாயுமிருத்தல் வேண்டும்.

*அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் சகல நோக்கங்களுக்குக்கும் " இலங்கையர் " என்னும் பதம் பரம்பரையினால் அல்லது பதிவினால் இலங்கைக் குடியென வரையறுக்கப்பட்டுள்ளது.

**5. தகவுத்திறன்.**—இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சிய சேவைகளிலிருந்து ஆட்குறைப்புச் செய்யப்பட்ட குடியியல் ஊழியர்களுக்கும், ஆயுதந்தாங்கிய படையின் முன்னாட் சேவையாளர்களுக்கும் விசேட சலுகைகள்.

(i) தளங்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்ததன் பயனாக 1956 யூலை 6 ஆந் தேதியில் அல்லது அதற்குப் பின்னர் இலங்கையிலுள்ள ஐக்கிய இராச்சியச் சேவைகளிலிருந்து விலக்கப்பட்ட இலங்கையரான குடியியல் ஊழியர்களும், நாரஹென்பிற்றவில் இருந்த வேத்தியற் கடற்படைக் கம்பியிலி நிலைய (அன்டேர்சன் நிலைய) த்தை திருகோணமலை மாவட்டத்திலுள்ள பெரிய கரைச்சிக்கு மாற்ற அரசாங்கம் தீர்மானித்ததன் விளைவாக 1954 செத்தெம்பர் 27 ஆந் தேதிக்குப் பின்னர் அந்நிலையத்திலிருந்து விலக்கப்பட்ட ஊழியர்களும், மற்றெல்லா வகைகளிலும் தகைமையுடையோராயின், பின்வரும் சலுகைகளுக்குத் தகுதியுடையவராவர் :—

4. (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பத்தில், ஐக்கிய இராச்சியச் சேவைகளில் அவர்களின் சேவை தொடர்ச்சியானதாகவும் திருத்திகரமானதாகவுமிருந்திருப்பின், அச்சேவைக் காலத்தைத் தங்கள் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

(ii) ஆயுதந்தாங்கிய படையின் முன்னாட் சேவையாளர் பின்வரும் சலுகைக்குத் தகவுடையராவர் :—

4 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், அவமானம் சூட்டிவிலக்கப்பட்ட அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது இழுக்குடன் பதவி நீக்கப்பட்ட அல்லது எவ்வொழுக்கவீனம் காரணமாகவேனும் சேவையிலிருந்து விலக்கப்பட்டவர்களைத் தவிர்ந்த நியமப் படையிற் சேவையாற்றிய பின்னர் ஒதுக்கப்படைக்கு மாற்றப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர்கள் அல்லது உத்தியோகத்தர்களும் சேவையாளர்களும் ஆகிய ஆயுதந்தாங்கிய படைகளின் முன்னாட் சேவையாளர்கள் நியமப் படையில் தாம் ஆற்றிய சேவைக்காலத்தைத் தங்கள் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

**6. ஆட்குறைப்பினால் வேலையிழந்த ஊழியர்களுக்கு விசேட சலுகை.**—நிரந்தரமுறையிலோ தற்காலிக முறையிலோ அரசாங்க சேவையிலிருந்து வேலையோ, ஒழுக்கமோ திருத்திகரமாகவில்லையென்ற காரணத்தினாலன்றி வேறு காரணங்களால் வேலையிழந்தவர்கள் பின்வரும் சலுகைக்குத் தகவுடையவராவர் :—

4 (iv) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டிருக்கும் வயதெல்லையின் பொருட்டு வயதைக் கணிப்பதில், பதவியிலிருந்து நீக்கப்பட்டது அல்லது திருத்தியற்ற வேலை அல்லது பதவியிலிருந்து தாமாக விலகிக் கொண்டது காரணமாக வேலையிழக்காதோர் அரசாங்கத்திற் சேவையாற்றிய காலத்தைத் தம் வயதிலிருந்து கழித்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுவர்

**7. தகவுத்திறன்.**—அரசாங்க ஊழியர்களுக்கு விசேட சலுகைகள்:

(i) நிரந்தர ஊழியர்கள் .—1969 திசம்பர் 4, ஆந் தேதியன்று அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிப்பவர்கள், பின்வரும் தகைமைகளைப் பெற்றிருப்பின், இப்பரீட்சைக்குத்தோற்ற அனுமதிக்கப்படுவர் :—

(அ) அவர்கள் 4 (iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஆ) அவர்கள் 1970 சனவரி 1 ஆம் தேதி 45 வயதுக்குக் கீழ்ப்பட்டவராயிருத்தல் வேண்டும்.;

(இ) அவர்களின் திணைக்களத்தலைவர்கள் அவர்களின் சேவை திருத்திகரமானதென உறுதிப்படுத்துவதோடு, அவர்கள் மொழிபெயர்ப்பாளர் சேவையில் நியமனம் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களைப் பதவியின்றும் விடுவிக்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—மேற்போந்த வகையிலுள்ள, 1956 செற்றம்பர் 24 ஆந் தேதிக்கு முன்னர் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையில் சித்தியடைவார்களாயின் அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்துக்காக "முன்னர்ச் சேர்ந்தோர்" எனக் கருதப்படுவர்.

(ii) தற்காலிக ஊழியர்கள்.—அரசாங்கத்தில் தற்காலிப்பதவி வகிப்பவர்கள், பின்வரும் தகைமைகளைப் பெற்றிருப்பின, இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர் :—

(அ) அவர்கள் 4 (iii) ஆம் பந்தியில் குறிப்பிட்டப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்;

(ஆ) அவர்கள் 1970 சனவரி 1 ஆந் தேதி 45 வயதுக்குக் கீழ்ப்பட்டவராயிருத்தல் வேண்டும் ;

(இ) அவர்கள் 1969 திசம்பர் 4 ஆந் தேதியன்று குறைந்த பட்சம் ஓராண்டாவது அரசாங்கத்தில் தொடர்ந்து சேவை செய்திருப்பதுடன், அவர்களின் திணைக்களத் தலைவர்கள் அவர்களின் சேவை திருத்திகாரமானதென உறுதிப்படுத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—1963 திசெம்பர் மாதம் 4 ஆந் தேதிய 629 ஆம் இலக்கத் திறைசேரிச சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள வகுதிகளிலுள்ள நிரந்தர, தற்காலிக அல்லது அமய ஊழியர்கள், ஆயுதந் தாங்கிய படைகளையும் பொலிசுப் படையையும், சேர்ந்தோர், உள்ளூராட்சிச் சேவை ஊழியர், மாணவ ஆசிரியர், சபைகள், கூட்டுத்தாபனங்கள், அவை போன்ற தன்னாட்சியுள்ள சபைகள் ஆகியவற்றின் ஊழியர் ஆகியோர் மேலே பந்திகள் 7 (i), 7 (ii) என்பவற்றில் தரப்பட்டுள்ள சலுகைகளுக்கு உரித்துடையராகார்.

8. **விண்ணப்பங்கள்.**—(i) இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விணணப்பப்பத்திரத்தில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேணடும்.

(ii) விண்ணப்பங்கள் பதிவுக் கடிதம் மூலம் பரீட்சை ஆணையாளர், கொழும்பு 2, என்னும் விலாசத்தில் 1969, திசம்பர் 29 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ பெறுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

குறித்த தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் 25 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவை பரீட்சார்த்தியின் கையொப்பத்தினுலும் தேதியினுலும் முறைப்படி அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) ஏற்கனவே அரசாங்கத் திணைக்களங்களில் அலுவல் பார்க்கும் பரீட்சார்த்திகள், தாஙகள் கடமையாற்றும் அரசாஙகத் திணைக்களத் தலைவர்களினூடாகவே தஙகள் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். 6 ஆம் பந்தியின் கீழ் தகவுகோரும் பரீட்சார்த்திகள், தாம் கடைசியாகச் சேவையாற்றிய திணைக்களத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சார்த்தி எவராவது அவ்வாறு செய்யத் தவறினுல் அவர் தகுதியிழந்தவராகக் கருதப்படுவர். 1969 திசம்பர் 29 ஆந் திகதியன்றோ, அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளரிடம் சேரும் வண்ணம் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் செய்து, பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவர்களுக்கு நேரகாலத்தோடேயே அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(v) விண்ணப்பப்பத்திரம் முழுத்தாளின் அரைத் தாளில் (வேறனவினதான தாளில் அல்ல) தயாரிக்கப்படுதல் வேண்டும். அப்பத்திரத்தின் 1 முதல் 8 வரையான கூண்டுகள் 1 ஆம் பக்கத்திலும், அத்தாட்சிப்படுத்தலும் திணைக்களத்தலைவரின் உறுதிப்படுத்தலும் 2 ஆம் பக்கத்திலும் அமைதல் வேண்டும்.

(vi) விண்ணப்பகாரரின் கையொப்பம் அதிகாரமளிக்கப்பட்டவரொருவரினுல் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்டவர்கள் : சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளர் அல்லது வழக்கறிஞர் அலலது பிரசித்த நொத்தாரிசு அல்லது அரசாங்க அல்லது கல்விப்பணிப்பாளரின் முகாமையிலான பாடசாலை அதிபர் அல்லது கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றின் ஆணை பெற்ற உத்தியோகத்தர் அல்லது 4,800 ரூபாவோ அதற்கு மேலோ ஆண்டுத் திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் அல்லது விகாராதிபதி அல்லது பௌத்த கோயிலின் உயர்குரு அல்லது வணக்கத்துக்குரிய தலமொனறினது பொறுப்பாளராகவிருக்கும் அன்றேல் முக்கியத்துவமான பதவியொன்றை வகித்து வரும் பிற சமயக்குரு.

9. **பரீட்சைக்கு அனுமதி.**—(i) பரீட்சை ஆணையாளர் தாம் ஏற்றுக்கொண்ட விணணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவர்க்கும் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப்பரீட்சையை மேற் பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்குத் தங்கள் அனுமதிப்பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய பத்திரத்தைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை மண்டபத்திற் சமுகமளிக்கும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சையெடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

நேரசூசிப் பிரதியொன்று அனுமதிப்பத்திரத்தோடு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோன்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைத் தினத்தன்று தமது அனுமதிப்பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல வேண்டும்.

இவவறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளுக்குரிய விதிகள் வேருக அசசிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவர்.

பரீட்சைக்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் அனுமதிப் பத்திரம் பெருத பரீட்சார்த்திகள் மலாய் வீதி, கொம்பனித் தெரு, த. பெ. இல. 1503, கொழும்பு 2 என்னும் விலாசத்திலுள்ள பரீட்சை ஆணையாளருடன் (தந்தி விலாசம் : " எக்சாம்ஸ் " கொழும்பு) உடனடியாகத் தொடர்பு கொணடு அனுமதிப்பத்திரத்தைத் தான் இதுகாறும் பெறவில்லையென அறிவித்துக் கீழ்வரும் தகவலையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் :

(2) முழுப்பெயர் :

(3) முழு அஞ்சல் முகவரி :

(4) அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், அனுப்பிய தேதி :

(ii) இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டமை தகவுத்திறனை ஏற்றுக கொண்டமையாக அமையாது.

எனினும், பரீட்சை ஆணையாளர் தமது தற்றுணிபுப்படி, பரீட்சார்த்தியொருவருக்கு இப்பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிகமாக அனுமதி வழஙகலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சையெடுத்தமை பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

10. **அடையாளச் சீட்டுக்கள்.**—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வோர் பாடத்துக்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்துக்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமை அதிபதி வழஙகிய அடையாளச் சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்);

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் 3 ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஓர் அரசாஙகத் திணைககளத்தின் அதிகாரத்தோடு வழஙகப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம்.

தமது அனுமதிப்பத்திரத்துடன், மேற்கூறப்பட்ட சாதனங்களிலொன்றில்லாத பரீட்சார்த்தி எவரும் இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

11. **தகுதிச்சாதனங்கள்.**—(i) விண்ணப்பத்தோடு எவ்வித சாதனங்களும் சேர்த்து அனுப்பப்படலாகாது. ஆனால், பத்திரத்திலேயே கேட்கப்பட்டவாறு தேவையான விபரங்களெல்லாம் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த வகைகளிலெல்லாம் நிறைவு பெற்றிராத ஒரு விண்ணப்பம் அதன் தகுதிக்கேற்பச் சீர்தூக்கி ஆராயப்பட்டு நிராகரிக்கப்படவுங் கூடும்.

(ii) தகைமை பெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து, அவர்கள் தங்கள் தகுதியுடைமையை நிரூபிப்பதற்கான சாதனச் சானறு வேண்டப்படும். அத்தகைய பரீட்சார்த்திகள், வாய்மொழிப்பரீட்சை வைக்கப்பட்டால், இச்சாதனங்களைக் காட்டுதல் வேண்டும். அல்லது பரீட்சை ஆணையாளர் கேட்கும் போது தாமதமின்றி அவற்றைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் தேவையாகும் :—

(அ) பொறுப்புள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட்டுள்ள ஒரு நற்சான்றுப் பத்திரம்.

**குறிப்பு**.—பரீட்சார்த்தி ஓர் அரசாங்க பாடசாலையில் அல்லது உதவிபெறும் பாடசாலையில் மாணவராகவிருப்பின் அல்லது அண்மையில் விலகியிருப்பின் அப்பாடசாலை அதிபரிடமிருந்தே நற்சான்றுப் பத்திரம் பெறுதல் வேண்டும். அல்லாவிடின் ஒரு சமாதான நீதவானிடமிருந்தோ, வழக்கறிஞரிடமிருந்தோ நியாய துரந்தரரிடமிருந்தோ, நொத்தாரிசிடமிருந்தோ, பெரும்பாக இறை வரி உத்தியோகத்தரிடமிருந்தோ, 4,800 ரூபாவோ அதற்கு மேலோ ஆண்டுத் திரட்டிய சம்பளமாகப் பெறும் ஒரு நிரந்தரமன அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். அல்லது பொதுவாகக் கூறுமிடத்து, பிரசித்தி பெற்றவரும் சாதாரணமாக அறியப்பட்டவருமான ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு நற்சான்றுப் பத்திரம் வழங்குபவரின் பெயரும், பதவியும், விலாசமும் அதில் தெளிவாகக் காட்டப்படல் வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் பரீட்சார்த்திகள் நற்சான்றுப்பத்திரங்கள் காட்டுமாறு வேண்டப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்புப்பதிவு செய்யப்படாத பரீட்சார்த்திகளின் விடயத்தில்) பதிவாளர் நாயகத்தினால் கொடுக்கப்பட்ட விசேட வயது சாட்சிப்பத்திரம்.

**குறிப்பு**.—(i) பாடசாலைத் தேவைகளுக்கு அல்லது கல்வித் தேவைகளுக்கு வழங்கப்பட்ட விசேட பிறப்புத்தாட்சிப் பத்திரமோ, பிறப்புப் பதிவினின்றும் எடுக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பகுதியோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ii) சத்தியக் கடதாசியோ, ஞானஸ்நான அத்தாட்சிப் பத்திரங்களோ பிறப்பத்தாட்சிப் பத்திரங்களுக்குப் பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(iii) பிறப்பத்தாட்சிப் பத்திரத்திலுள்ள பெயர்/பெயர்கள், பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும்/உபயோகிப்பனவும் இப் பரீட்சையெடுப்பதற்குக் கொடுத்துள்ளதும்/கொடுத்துள்ளனவுமான பெயரினின்றும் வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்புப் பதிவுச் சட்டத்தின் 27 அல்லது 28 ஆம் பிரிவின் நியதிகளின்படி உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1953 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிறப்பு இறப்பு பதிவு (திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 24 (6) ஆம் பிரிவின் கீழ், பிறந்த ஓராண்டின் பின்னர் செய்யப்பட்ட பிறப்புப் பதிவின் உறுதிப்படுத்தப்பட்ட, பிரதி பிறப்புத் தேதி நிலை நிறுத்தப்பட்டதற்கான சான்றைக் கருத்திற் கொண்ட பின்னர் மட்டுமே, நியமனங்கள் செய்யப்படும் நோக்கத் துக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

நிரந்தர அரசாங்க உத்தியோகத்தில் இருந்து கொண்டு 18.8.57 இன் 394 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம்பெயர்களை மாற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவு இடாப்பிலுள்ள தம் பெயர்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட மாட்டார்கள்.

(இ) இலங்கைப் பிரசையெனப் பதிவு செய்யப்பட்டதற்குரிய பதிவத் தாட்சிப் பத்திரம் அல்லது பரம்பரைப் பிரசையென்னும் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் உத்தியோக பூர்வமான மூலம் கடிதம் (ஏற்புடையவிடத்து) ;

(ஈ) கல்வித் தகைமைகள் பற்றிய மூல அத்தாட்சிப் பத்திரங்கள் ;

(உ) இலங்கையிலுள்ள ஐக்கியராச்சியச் சேவைகளில் ஒரு குடியியல் ஊழியராகச் சேவையாற்றியதற்கான மூலச் சான்றிதழ் அல்லது ஆயுதந்தாங்கிய படைகளில் சேவையாற்றியதற்காகச் சான்றிதழ் (5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் விடயத்தில்);

(ஊ) அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றியதற்கான மூலச் சான்றிதழ்கள் (6 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் விடயத்தில்)

(எ) அடையாளச் சீட்டு (வாய்மொழிப் பரீட்சை நடந்தால், அப்போது மாத்திரம்).

(iv) விண்ணப்பம் செய்யும்போது தேவையான சாதனங்கள் எல்லாவற்றையும் ஆயத்தமாக வைத்திருக்குமாறு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். வாய்மொழிப் பரீட்சை நடந்தால், அப்போது தேவையான சாதனங்களைக் காட்ட முடியாமல் இடர்ப்படும் அல்லது பரீட்சை ஆணையாளர் கேட்கும்போது அவற்றை அனுப்பி வைக்கத் தாமதிக்கும் எப்பரீட்சார்த்தியினதும் பரீட்சைக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

12. **பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்**.—இப் பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக்காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் போதோ, பரீட்சைக்குப் பின்போ எந்நிலையிலாவது, அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏது வாகும்.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்கு உட்படப் பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அல்லது அவர் நியமனம்பெற்றுச் சேவை செய்யும் காலத்தில் எப்போதாவது அவர் இப்பரீட்சை யெடுப்பதற்கு தகுதியற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டால், அவர் சேவையிலிருந்து உடனே விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

13. **பணம் திருப்பிக் கொடுத்தல்**.—எச்சந்தர்ப்பத்திலாவது பணம் எதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகக் கொடுத்த கட்டணங்களை வேறெப்பரீட்சைக்கேனும் மாற்ற முடியாது.

14. **பரீட்சை எடுப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விடுதலை**.—பரீட்சை ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோன்றுவதற்காக, அவர்களுக்கு விடுதலை—கடமை விடுதலையன்று—வழங்குமாறு அவர்களுடைய திணைக்களத் தலைவர்கள் வேண்டப்படுகின்றனர்.

15. **பரீட்சைத் திட்டம்**.—இப்பரீட்சை, பகுதி I (எழுத்து), பகுதி II (வாய்மொழி) என இரு பகுதிகளாக நடாத்தப்படும். பரீட்சைக்குரிய பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்குமெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. எல்லா விடைத்தாள்களிலும் கூடாத கையெழுத்துக்கும், எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். வாசிக்க முடியாத வகையில் எழுதும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவரென நீக்கிவிடப்படுவதற்கு ஆளாவர்.

**பகுதி I (எழுத்து)**

பரீட்சையின் இப்பகுதி, ஒவ்வொன்றும் 3 மணித்தியாலத்திற்கான இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| | புள்ளிகள் |
|---|---|
| வினாப்பத்திரம் I (i) ஓர் இலக்கியக் கட்டுரைப் பகுதி ; (ii) ஒரு பொது ஆர்வத்துக்குரிய கட்டுரைப்பகுதி ; (iii) (அ) ஓர் அரசகரும சாதனத்திலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து ; (ஆ) ஒரு புதினத்தாள் கட்டுரையிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் ஆகியனவற்றை சிங்களம்–தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் .. | 100 |
| வினாப்பத்திரம் II (i) ஓர் இலக்கியக் கட்டுரைப் பகுதி ; (ii) ஒரு பொது ஆர்வத்துக்குரிய கட்டுரைப்பகுதி ; (iii) (அ) ஓர் அரசகருமசாதனத்திலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து ; (ஆ) ஒரு புதினத்தாள் கட்டுரையிலிருந்து அல்லது அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றை ஆங்கிலத்திலிருந்து சிங்களம்/தமிழில் மொழி பெயர்த்தல் .. | 100 |
| **பகுதி II— வாய்மொழி** .. .. | 50 |

முதலில் எழுத்துப் பரீட்சை நடைபெறும். அதன் பெறுபேறுகளின்படி போட்டி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள், அவர்களுக்கு அறிவிக்கப்படும் தேதியொன்றில் கொழும்பில் நடைபெறும் வாய்மொழிப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய எண்ணிக்கையை திறைசேரி இணைப்பிரதிச் செயலாளர் பரீட்சை ஆணையாளரோடு உசாவி நிர்ணயிப்பார். எனினும், வெற்றிட எண்ணிக்கையிலும் தகுதிபெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைவாகவிருப்பின் இவ்வாய்மொழிப் பரீட்சை கைவிடப்படக்கூடும்.

16. **முடிவுகளை வெளியிடலும் நியமனங்கள் கொடுத்தலும்**.—சித்தியெய்தும் பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க செய்திமடலில் வெளியிடப்படும். தகுந்த வெற்றுப் பதவிகள் ஏற்படும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

17. **மருத்துவப் பரீட்சை**.—தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் இலங்கையில் எப்பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடனலமுடையவரெனக் காட்டுவதற்கு வைத்தியப் பரீட்சையொன்றில் தேறுமாறு வேண்டப்படுவர்.

18. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எந்த விடயத்தையும் திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர் தமது தற்றுணிபுப்படி தீர்த்து வைப்பர்.

பி. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1969 ம் ஆண்டு திசம்பர் மீ 4 ஆந் உ.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**பரீட்சைத் திணைக்களம், இலங்கை**

சுட்டிலக்கம் : ——————

**மொழிபெயர்ப்பாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை—சனவரி 1970**

1. குடும்பப் பெயர், முதலெழுத்துக்களுடன் :————.

பால்

2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்பட்ட பெயர்கள் :————.

3. முழு அஞ்சல் முகவரி :————.

(அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் அலுவலக முகவரியைக் கொடுத்தல் வேண்டும்).

4. மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்) அல்லது மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) பதவிகளுக்கான வெற்றிடங்களுக்குப் போட்டியிட விரும்புகின்றீராவெனக் கூறுக :————

5. தகவுத்திறன்—

(அ) பிறந்த திகதி :————.

(ஆ) கல்வித் தகைமை :————.

(இ) இலங்கைக் குடியாவென்பதுவும் ; அவ்வாறாயின் பரம்பரையினாலா, பதிவினாலா என்பதுவும் :————.

(ஈ) உமக்குப் பொருத்தமான தகவுத்திறன் சார்ந்த பிற விபரங்கள் : ————.

6. எலவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் பின்வரும் தகவல்களைத் தருதல் வேண்டும் :————.

(1) நீர் தற்போது வகிக்கும் பதவி :————.

(2) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதி :————.

(3) அப்பதவியில் நீர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா? :————.

(4) அப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரிமையுடையதுமானதா அல்லது தற்காலிகமானதா? :————.

(5) அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக நீர் " முன்னர்ச் சேர்ந்தவரா " அல்லது " புதிதாகச் சேர்ந்தவரா "? :————.

(6) உமது குடியியல் நிலை :————.

(7) நீர் திருமணமானவராயின், பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை :————.

7. (i) எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் நான் தந்துள்ள கூற்றுக்கள் யாவும் உண்மையானவையெனவும் நான் ஒட்டும் முத்திரைகள் உண்மையானவையெனவும் அவை முன்னர் உபயோகிக்கப்படவில்லையெனவும் எனது நேர்மையின் பேரில் நான் உறுதிப்படுத்துகின்றேன் :————.

(ii) இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களுக்கிணங்கி யொழுக நான் உடன்படுகின்றேன்.

8. முத்திரைகளுக்கான கூண்டு (முக்கியம்)—பரீட்சார்த்தி இங்கு 25 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி, அவைமீது தமது கையொப்பத்தையும் தேதியையும் இட்டு அவைகளை அழித்தல் வேண்டும். முத்திரைகளை ஒன்றன்மீதொன்றாக ஒட்டலாகாது.

ரூபா 25

தேதி :————. ————. பரீட்சார்த்தியின் கையொப்பம்.

9. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.

*————வசிப்பவரும்/வேலை பார்ப்பவரும், என்னால் நன்கு அறியப்பட்டவருமாகிய———— என்பவர் 1969 ஆம் ஆண்டு————மாதம்————ஆம் தேதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தையிட்டாரென நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
(அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்)

பெயர், பதவிப் பெயர், நிலை : ————.

முகவரி : ————.

*தற்பொழுது அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரரொருவரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரினால் செய்யப்படுதல் வேண்டும்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இப்பரீட்சார்த்தி 5 ஆம் 6 ஆம் கூடுகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரிபார்க்கப்பட்டுச் சரியெனக் காணப்பட்டுள்ளன வெனவும் எல்லாவகையிலும் அவரது வேலையும் நடத்தையும் திருத்தியாய் இருந்தன/இருக்கின்றன எனவும், பொருத்தமான செய்திமடல் அறிவித்தலின் பிரகாரம் அவர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவரெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

தெரிவு செய்யப்பட்டால், அவரது தற்போதைய பதவியிலிருந்து அவர் விடுவிக்கப்படுவார் .

————
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் :————

தேதி :————.

## பரீட்சைத் திணைக்களம், இலங்கை

**பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்**

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :————

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சாதிகாரிகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக் குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சாத்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ் விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ் விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாத்திகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறுக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப்பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்சப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய் மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வெறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வெறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எதற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடயங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறுக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செயகை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றிேனுடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சைாத்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகுசெய்செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குக் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினுல் நேர்மையற்ற முறைகளைத் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனுல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறெருரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறெருரு பரீட்சார்த்திகு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வெறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வெறெருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளை கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கும் முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேது மிருப்பின் அப்பாடம் தொடஙகு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குந் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வை யாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுது வதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாக கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப் பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத் தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டு விட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங் கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(v) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளி லும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண் டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோ டொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vi) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப் பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(vii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலை களையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறை யான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத் தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(viii) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்கு படுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் **(வலது பக்க மேல்மூலையிலன்று)** உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(ix) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்பட்டின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(x) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர் களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத் தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளி டமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xi) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கே. ரி. டபிள்யூ. சுமனசூரியா,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

12–422—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

திறைசேரி இல. 1/23/33/2(ஜி)

## தட்டெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திற்குப் பதவியேற்றுவதற்கான பரீட்சை—1969, திசம்பர்

1969 திசம்பர் மாதம் 7 ஆந் தேதி கொழும்பில் நடாத்தப்படவிருந்த மேற்கூறிய பரீட்சையானது—1969.10.24 இன் 14,877 ஆம் இல. அரசாங்கச் செய்திமடலில் தோன்றும் 1969.10.11 ஆந் தேதியிட்ட அறிவித்தலைப் பார்க்க—1970 பெப்ரவரி மாதம் 27 ஆந் தேதிக்குப் பிற் போடப்பட்டுள்ளதெனப் பரீட்சார்த்திகள் அறிவிக்கப்படுகின்றனர்.

2. இப்பரீட்சையைப் பின்வரும் மேலதிக நிலையங்களிலும் நடாத்துவ தெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது :—

கண்டி
காலி
குருநாகல்
அனுராதபுரம்.

பரீட்சாத்திகளுக்குக் குறித்தொதுக்கப்பட்ட நிலையங்கள் பற்றி அவர் களுக்குப் பரீட்சை ஆணையாளர் அறிவிப்பர்.

3. புதிய விண்ணப்பங்களெதுவுமனுப்ப வேண்டியதில்லை. இப்பரீட்சை சம்பந்தமான ஏனைய நிபந்தனைகள் மாற்றமெதுவுமின்றியிருக்கும்.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப்பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969, நவம்பர் மாதம் 30 ஆந் தேதி.

12–332—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## 1969 அக்டோபர் மாதம் நடைபெற்ற நொத்தாரிசு கடைசிப் பரீட்சை

இதன் கீழே காணப்படும் பெயருடைய அபேட்சகர், அவரின் பெயருக்கு முன்னே கொடுக்கப்பட்டிருக்கும் மொழியில் தொழில் நடத்த நொத்தா ரிசு கடைசிப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறார் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜீ. பி. குணதிலக்க சிங்களம்.

உள்நாட்டு விவகார அமைச்சின்
நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1969 நவம்பர் 27

12–396—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## தொகைமதிப்புப் புள்ளி விபரத்திணைக்களம்

### பாவிக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் கொள்வனவுக்கான கேள்விகள்

கொழும்பு 7, அல்பேட் கிறீசனற், எண். 16 இலுள்ள தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களக் கிளைக் காரியாலய வளவிலிருந்து பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான கேள்விகள் 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ந் தேதி பி. ப. 1 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கூறு எண் | விபரணம் | |
|---|---|---|
| 1—40 | கன்னுர்த் தகடுகள் | 6′ × 2½′ |
| 2—18 | கன்னுர்த் தகடுகள் | 8′ × 3½′ |
| 3—24 | கன்னுர்த் தகடுகள் | 7′ × 2½′ |
| 4—38 | கன்னுர்த் தகடுகள் | 5′ × 2′4″ |
| 5—60 | கன்னுர்த் தகடுகள் | 3′ × 2½′ |
| 6—26 | கன்னுர்த் முகட்டுத் தகடுகள் | |
| 7— 6 | பலகணிகள் (பூரணமானது) | 5½′ × 4′ |
| 8— 2 | பலகணிகள் (பூரணமானது) | 6′ × 5′ |
| 9— 1 | இரும்புக்குத்துக்கால் | 29′ |
| 10— 2 | இரும்புத் தீராந்திகள் | 14′ |
| 11—20 | வளைகள் | 6′ 9″ × 2″ × 4″ |
| 12 | ஒரு தொகையான நுணுமிதெலப் பலகைகள் | |

வழமையான காரியாலய அலுவல் நேரங்களில் கொழும்பு 7, அல்பேட் கிறீசன்ற், எண் 16 இலுள்ள தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களக் கிளைக் காரியாலயத்தில் இவைகளைப் பார்வையிடலாம்.

மீண்டுபெறத்தக்க வைப்புப்பணம் 5 ரூபா வைச் செலுத்துபவர்களுக்கு கொழும்புத் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள நிறுவன நிருவாக உதவியாளரால் கேள்விப்படிவங்கள் 29.12.1969 ந் திகதி மு. ப. 10.00 மணி வரையும் வழங்கப்படும்.

கொழும்பு 7, அல்பேட் கிறீசன்ற், எண் 16 இலுள்ள தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களக் கிளைக் காரியாலயத்திலிருந்து இக்கேள்விகள் சம்பந்தமான மேற்கண்ட எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எல். பி. இராசகருணு,
தொகைமதிப்புப் புள்ளிவிபர அதிபர்.

12–386—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

---

இல. இப./260 (69/70)

## காலிக்கச்சேரி—கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்திலே, கீழேகாட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்கு 1969 ஆம் வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதி பி ப. 2.30 மணிவரை காலி அரசாங்க அதிபரினுல் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் கேள்விக்காரர்கள் அக்காரியாலயத்தில் சமூகமாயிருக்கலாம். உதவி அரசாங்க அதிபரின் காரியாலய அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட படிவங்களிலேயே இணைப் பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமாயுள்ள மாதிரிப் படம் மேற்படி கச்சேரியில் பார்த்துக்கொள்ளக்கூடியதாய் உள்ளதுடன் அது சம்பந்தமான முழுவிபரங்களையும் அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுமுளது.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ்வேலைகட்கு முன்னே காட்டப் பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு ஒப்பந்த வேலைக்கு அரசாங்கத்தில் பதிவுபெற்றுள்ள தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், அரசாங்க வேலை, நீர்ப்பாசனம், கல்வி அல்லது வேறு திணைக்களங்களில் அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப் பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பதிவுசெய்யப்பட்டுள்ள, இவ்வேலைகளை நல்ல முறையில் செய்து முடிப்பதற்குரிய தகுதியுள்ள கூட்டுறவு; கிராமாபிவிருத்திச் சங்கங்களும் இவ்வேலைகளுக்கு விண்ணபிக்கலாம். ஆயினும் அவ்வாறு பதிவு செய்திருத்தலையும் கேள்விக்கான வைப்புப் பணம் ரூபா 100 ஐச் செலுத்திய பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1969 ஆம் வருடம் டிசெம்பர் மாதம் 28 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் வைப்புப் பணம் செலுத்தத் தேவையில்லை. ஆனுல் அச்சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகுதி சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்வி வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "...........................க்கான கேள்விப் பத்திரம்" எனக்குறிப்பிட்டு எல்லாக் கேள்விப் பத்திரங்களினும் கையெழுத்திட்டு முத்திரை (சீல்) வைத்துப் பாதுகாப்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

டப்லிவ். எல். ஆர். பி. த அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர்,
காலி மாவட்டம்.

கச்சேரி, காலி,
1969 ம் ஆண்டு நவெம்பர் மீ 28 ந் உ.

அட்டவணை

| வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| 1. உடவெலிவிட்டிய உயர்பூமிக்குடியேற்றப் பிரவேசப் பாதை (ஒரு பகுதி) | கங்கபொட பத்து | 15,000 |
| 2. உடவெலிவிட்டிய உயர்பூமிக்குடியேற்றக் குழாய் நீர் வினியோகத் திட்டம் | ஷெ | 10,000 |
| 3. ஓபாத்த–வீரபாண வீதி 2 ஆவது மைல் திருத்தவேலை | ஹினிதும் பத்து | 15,000 |

12–474—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## வங்காலையில் 12 வீடுகள் கட்டுவதற்காய கேள்விப்பத்திரங்கள் கோரல்

வங்காலையில் வீட்டுத்திட்டத்தின் பிரகாரம் 12 வீடுகளைக் கட்டுவதற்கான "சீல்" இடப்பட்ட கேள்விப்பத்திரங்களை மன்னுர் மாவட்ட அரசாங்க அதிபர் ஏற்றுக் கொள்வார். இவ்வீடுக்கான மாதிரிப் படங்களை மன்னுர்க் கச்சேரி, காணிக்கிளையில் பார்வையிடலாம்.

2. கேள்விப்பத்திரங்கள் மன்னுர்க் கச்சேரியிலாவது, அல்லது வேறெந்தக் கச்சேரியிலாவது ரூபா 50 பொறுப்புப் பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் காட்டி பெற்றுக்கொள்ளலாம். கேள்வி பத்திரங்கள் இணைப்பிரதிகளாக இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் மன்னுர்க் கச்சேரியில் 1969 ம் ஆண்டு மார்கழி மாதம் 14 ம் திகதி (14.12.69) பிற்பகல் 3 மணிவரை விநியோகிக்கப்படும். கிராம அபிவிருத்தியும் கூட்டுறவுச் சங்கங்களின் அதிபரினுல் அங்கீகரிக்கப்பட்டதும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவதிகாரியினுல் பதிவு செய்யப்பட்டதுமான கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பொறுப்புப் பணம் கட்டுவதினின்றும் நீக்கப்பட்டவராவர். கேள்விப்பத்திரங்கள் பெற்றபின்னர் தங்கள் கேள்விப் பத்திரங்களை அனுப்பத் தவறியவர்கள் தங்கள் வெற்றுக் கேள்விப் பத்திரங்களை, கேள்விப்பத்திரங்கள் அனுப்பவேண்டிய கால எல்லைக்குள் மன்னுர்க் கச்சேரியில் சமர்ப்பித்தாலன்றி அவர்களது கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

3. கேள்விப்பத்திரங்கள் மன்னுர்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிற் சேர்க்கலாம், அல்லது பதிவுசெய்யப்பட்ட தபால்மூலம் "அரசாங்க அதிபர், மன்னுர்" என்று விலாசமிட்டு 1969 ம் ஆண்டு மார்கழி மாதம் 15 ந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால்மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையிலும் "வங்காலையில் 12 வீடுகள் கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்திற் கெடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

4. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னுர்க் கச்சேரியில் 1969 ம் ஆண்டு மார்கழி மாதம் 15 ம் திகதி (15.12.69) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். இந்நேரம் கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமூகந் தரலாம்.

5. இக்கட்டிட வேலைக்குத் தேவையான சீமெந்தை தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திடமிருந்தோ, அன்றி மொத்த வியாபாரக் கூட்டுத்தாபனத்திடமிருந்தோ பெறுவதற்கு என்னால் சிபாரிசு கொடுக்கப்படும். ஆயினும் ஒப்பந்தத்தின்படி வேலையைச் செய்து முடிப்பதற்கு சீமெந்து பெறத் தாமதம் ஆகிய காரணங்கள் திருப்தியான தாமத காரணங்கள் என ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினுக்காட்படும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 50 ம் பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் ஐந்து சதவிகிதத்தை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் கட்டிடவேலை திருப்தியாக கட்டி முடிக்கப்படும்வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

7. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகித பணமும், 6 ம் பந்தியில் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழு வேலைகளும் முடிந்த மூன்றுமாத காலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

8. கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்ட விகிதங்கள், தொகைகள், புள்ளிகள் எக்காரணம் கொண்டேனும் மாற்றப்படலாகாது. இக் கேள்விப் பத்திரங்கள் கவனிக்கப்படும் வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்பட்ட இறுதி நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கேள்விப்பத்திரங்கள் வாபஸ் வாங்கப்படலாகாது.

9. எக்காரணம் கொண்டும் கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கவோ அல்லது கேள்விப்பத்திரங்களின் எப்பகுதியையோ ஏற்றுக்கொள்ளவோ உரிய சகல உரிமைகளும் அரசாங்க அதிபருக்குண்டு.

10. இக்கேள்விக்கான மேலதிக விபரங்கள் யாவற்றையும் மன்னார்க் கச்சேரி, காணிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

மன்னார்க் கச்சேரி,
1969 ஆண்டு நவெம்பர் மீ 28 ந் திகதி.

12–353—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு ஒரு கலக்கிடை நிறுத்தும் இழுவைக் கலத்தையும் (பேர்திங் ரக்), ஒரு பின்பக்க சேறு உறுஞ்சிக் கலத்தையும் வழங்குவதற்கும், ஒப்படைப்பதற்குமான கேள்விகளைக் கொழும்பிலுள்ள தேசியமய சேவைகள் அமைச்சின் கேள்விச் சபைத் தலைவர் 1970, பெப்பிரவரி 5 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

1970, பெப்பிரவரி 5 ஆம் திகதி முற்பகல் 10.00 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்கள் பார்வைக்கென இருக்கின்றன. கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/– க்கும், சாதனக் கட்டணங்களாக ரூபா 30/– க்குமெனக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச் சீட்டுடன் கொழும்பிலுள்ள கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பிப்போருக்கு மட்டும் கேள்வி சம்பந்தமான சாதனங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/– கேள்வி நிபந்தனைகளுக்கேற்பத் திருப்பிக் கொடுக்கப்படும். சாதனக் கட்டணப் பணமான ரூபா 30/– திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். 1970, பெப்பிரவரி 3 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை கேள்வி சம்பந்தமான சாதனங்கள் வழங்கப்படும்.

நிராகரிக்கப்பட்ட கேள்விச் சாதனங்கள் அல்லது விபரக் கூற்றுகள் வழங்கப்படமாட்டாது.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1969, டிசம்பர் 5 ஆம் திகதி.

12–376—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கண்டி உபபிரிவு (A)

கண்டி உபபிரிவில் "உடுநுவரையில் இருக்கும் குறகாந்தனியக்குளம் கட்டுவது" சம்பந்தமாக, கேள்விப்பத்திரங்கள், குண்டசாலை மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 31.12.1969 முற்பகல் 10.00 மணிவரை ஏற்கப்பட்டு உடனே திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 25,000/– க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்குரிய வெற்றுப் பத்திரங்களை கண்டி, மாத்தளை, கலைக்கை, நுவரெலியா ஆகிய நீர்ப்பாசன உபபிரிவுக் காரியாலயங்களில் 28.12.69 பிற்பகல் 4.30 வரைபெற்று, மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயங்களில் ஒன்றில் அல்லது கச்சேரியில் கேள்விக் கட்டணமாகிய ரூபா 25/-வைக் கட்டிய பற்றுச்சீட்டுடன் கேள்விகளை இரு பிரதியில் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்தைப் பரிசோதனைக்குச் சமர்ப்பித்து கேள்விக்குரிய வெற்றுப்பத்திரத்தைக் கோர வேண்டும்.

இக்கேள்விக்குரிய, மேலதிக விபரங்களை அறியவிரும்புவோர் கண்டி உபபிரிவு நீர்ப்பாசனப் பொறி இயலாளரின் கந்தோரில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரீ. ஜே. டீ பின்ரோ,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கண்டி உபபிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்,
குண்டசாலை,
26.11.69.

12–463—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மாங்குளம் நகர்காவலர் நிலையக் கட்டடத்திற்கு மின் இணைப்புச் செய்வதற்கான கேள்விப்பத்திரம்

மேற்குறிப்பிட்ட சேவை சம்பந்தமாக 1970 ம் ஆண்டு சனவரி மாதம் 9 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்)யிலோ அல்லது கொழும்பிற்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 8 ம் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச் சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களின் இணைப்படியில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. வைப்புப்பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டைக் கேள்விப் பத்திரதாரர்கள் கவனமாக வைத்திருந்து, வைப்புப்பணத்தை மீளப் பெற விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப்பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

4. கேள்விப்பத்திரப்படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்த தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "மாங்குளம் நகர் காவலர் நிலையக் கட்டடத்திற்கு மின் இணைப்புச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்க கீழ் மூலையில் குறிப்பிடப்

பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களம் அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து 1 மாதத்திற்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர் பிணைப்பணம் செலுத்தவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் கேட்கப்படுமிடத்து தவறின் அவரது கேள்விப்பத்திர வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய கேள்விக்கார பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1970 ம் ஆண்டு சனவரி மாதம் 9 ந் திகதி முற்பகல் 11.30 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரங்களுக்குக் கேள்விக்காரர் விண்ணப்பிக்கும்போது இவ்வகையான வேலைகள் செய்வதற்குத் திறமையும், அனுபவமும் உண்டென்பதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தேர்ச்சியுள்ள/தேர்ச்சியற்ற இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. வேறு ஏதாவது தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தித் திணைக்கள மேற்பார்வைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 3 ந் உ.
சீசீ/3/62

12–469—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

இல. இப/260 (69/70)

## காலிக் கச்சேரி

### கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்தில், கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைகளுக்கு 1969 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி பி. ப. 2.30 மணிவரை கொழும்பு (த. பெ. 500), காணிக் கொமிசனர் திணைக்களக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் கேள்விக்காரர்கள் அக்காரியாலயத்தில் சமூகமாயிருக்கலாம். காலிமுகம் செக்ரடேரியட் கட்டிடத்தின் மூன்றும் மாடியில் அமைந்துள்ள காணிக் கொமிசனர் காரியாலய 357 ஆம் இலக்க அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்கான பெட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. காலி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட படிவங்களிலேயே இணைப் பிரதிகளாகக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமாயுள்ள மாதிரிப் படம் மேற்படி கச்சேரியில் பார்த்துக்கொள்ளக்கூடியதாயுள்ளதுடன் அது சம்பந்தமான முழு விபரங்களையும் அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுமுளது.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ் வேலைகட்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு ஒப்பந்த வேலைகளுக்கு அரசாங்கத்தில் பதிவு பெற்றுள்ள தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், அரசாங்க வேலை, நீர்ப்பாசனம், கல்வி அல்லது வேறு திணைக்களங்களில் அவ்வவ்வேலைகளுக்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள, இவ்வேலைகளை நல்ல முறையில் செய்து முடிப்பதற்குரிய தகுதியுள்ள கூட்டுறவு, கிராமாபிவிருத்திச் சங்கங்களும் இவ்வேலைகளுக்காக விண்ணப்பிக்கலாம். ஆயினும் அவ்வாறு பதிவு செய்திருத்தலையும் கேள்விக்கான வைப்புப்பணம் ரூபா 100 ஐச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1969 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை கேள்விப்பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் வைப்புப்பணம் செலுத்தத் தேவையில்லை. ஆனால் அச்சங்கங்களுக்குரிய திணைக்களங்களின் மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகுதி சம்பந்தமான அத்தாட்சிப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்வி வைப்புப் பணத்தைக் காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறேதாவதொரு கச்சேரியில் அல்லது கொழும்புத் திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "..........................................க்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட்டு எல்லாக் கேள்விப் பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரை (சீல்) வைத்துப் பாதுகாப்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

டபிள்யூ. எல். ஆர். பி. த அல்விஸ்,
உதவி அரசாங்க அதிபர், காலி மாவட்டம்.

காலிக் கச்சேரி,
1969 ம் ஆண்டு நொவெம்பர் மீ 28 ந் உ.

அட்டவணை

| வேலை விபரம் | அமைந்துள்ள பிரதேசம் | பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| 1. உடவெலிவிட்டிய உயர் பூமிக் குடியேற்றப் பிரவேசப் பாதை மதகு அமைத்தல் | கங்கபொடபத்து .. | 20,000 |
| 2. லன்சியாஹேன குடியேற்றப் பாதையமைத்தல் | நாலுகடவத்தை .. | 30,000 |
| 3. தாம்மல—ஹல்விட்டிகல வீதி 1 ஆவது மைல் தாரிடுதல் | ஹினிதும்பத்து .. | 40,000 |
| 4. ஹாமஸ்லல குடியேற்றத்துக்கு நீர் விநியோகத் திட்டமொன்றமைத்தல் | தல்பே பத்து .. | 30,000 |

124–75—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்—மாத்தளை உபபிரிவு

மாத்தளை உபபிரிவில் கீழ்க்காணும் வேலைகட்கு கேள்விப்பத்திரங்கள் நத்தரம்பொத்த குண்டசாலையிலுள்ள மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ம் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அதின் பின் உடனே திறக்கப்படும்.

"1969/70 உம் 1970/71 (இரு) வருடங்களிலும் மாத்தளை உபபிரிவில் பொருட்கள் ஏற்றிச்செல்லுதல்"

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூ. 20,000 க்கும் அதற்குமேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கிராம அபிவிருத்திச் சபைகள், பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையராவர்.

ஒப்பந்தக்காரர்களாக முன்வருவோர் தமது சொந்தத்தில் இரண்டு லொறிகளேனும் வைத்திருப்பதுடன் தேவைப்படின் ரெயிலர் பூட்டிய டிராக்டர்மூலம் பொருட்கள் ஏற்றிச் செல்ல தயாராக இருக்கவேண்டும். கேள்விப் பத்திரங்கள் பெறு முன்னர் தமது சொந்தத்தில் லொறிகள் இருப்பதை அத்தாட்சிப் படுத்தும் விதத்தில் லொறிகளின் பதிவுப் புத்தகத்தையும், 1969 ம் ஆண்டுக்குரிய லைசன்ஸ் பத்திரத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாத்தளை, கண்டி, கசலக்க, நுவரெலியா ஆகிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் 17.12.69 முதல் 6.1.70 வரைக்கும் பெறக்கூடிய வெற்றுப்பத்திரங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை

களின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் ரூ. 25 ஐ கேள்விக்கட்டணமாக ஓர் கச்சேரியிலோ அல்லது மேற்கூறிய பொறியியலாளரின் அலுவலகங்களிலாவது செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கவேண்டும். கிராம முன்னேற்றச் சங்கங்களும் கூட்டுறவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இக்கட்டணம் செலுத்தத் தேவைப்படாது. இக்கேள்விக்கான விபரங்கள் எல்லாவற்றையும் மாத்தளை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகலிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர் மாத்தளை.

12–457—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### அனுராதபுர புதிய நகரத்தில் உப அலுவலகத்துக்கான உத்தேசிக்கப்பட்ட கட்டடம்

தேசிய வீடமைப்புத் திணைக்களக் கேள்விச் சபைத்தலைவரால் அனுராதபுரப் புது நகரத்தில் உப அலுவலகத்துக்கான உத்தேசிக்கப்பட்ட கட்டடத்தை அமைப்பதற்காக 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் தேதிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்வியாளர்கள் சமூகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்படவேண்டும். மேலும் தேவையான விபரங்கள்யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

பொது வேலைத் திணைக்களத்தில்/நீர்ப்பாசனத் திணைக்களத்தில்/அரசாங்க திணைக்களங்களில்/அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கட்டட வேலைக்காக ரூபா 150,000/–க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

பதிவுச்சான்றிதழையும், கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிறுப்பாரிடம் ரூபா 150/– செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு 1970, ஜனவரி 10 ம் தேதி நண்பகல் 12 மணிவரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

அ. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத்திணைக்களம்,
த. பெ. இல. 544,
கொழும்பு 2,
1969 ம் ஷூ நவம்பர் மீ 28 ந் வ.

12–549—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### தொடங்கஹேன வீடமைப்புத் திட்டம்

தேசிய வீடமைப்புத் திணைக்களத் கேள்விச் சபைத்தலைவரால் தொடங்கஹேன வீடமைப்புத் திட்டத்தில் இப்போதுள்ள பருக்கைக் கல் றோட்டைக் கல்பரவித் தார் இடுவதற்காக 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியாளர்கள் சமூகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

பொது வேலைத் திணைக்களத்தில்/நீர்ப்பாசனத் திணைக்களத்தில்/அரசாங்க திணைக்களங்களில்/ அரசாங்க கூட்டுத்தாபனங்களில் கட்டட வேலைக்காக ரூபா 25,000/–க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பதிவுச் சான்றிதழையும், கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிறுப்பாரிடம் ரூபா 50/– செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

அ. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளருக்காக.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544,
கொழும்பு–2,
1969 ம் ஷூ நவம்பர் மீ 28 ந் வ.

12–550—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### சிறீ சுபத்திபுர வீடமைப்புத் திட்டத்துக்கு நீர் வழங்கல்

தேசிய வீடமைப்புத் திணைக்களக் கேள்விச் சபைத்தலைவரால் பத்தரமுல்லையில் சுபத்திபுர வீடமைப்புத் திட்டத்துக்கு நீர் வழங்கலுக்காக 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்வியாளர்கள் சமூகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இத்திணைக்களக் கண்காணிப்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் இரு பிரதிகளாக அனுப்பப்பட வேண்டும். மேலும் தேவையான விபரங்கள்யாவும் இவரிடமிருந்து பெறலாம்.

பொது வேலைத்திணைக்களத்தில்/நீர்ப்பாசனத் திணைக்களத்தில்/ அரசாங்க திணைக்களங்களில்/அரசாங்க கூட்டுத்தாபனங்களில் நீர் வழங்கலின் வேலைக்காக ரூபா 75,000/–க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். பதிவுச் சான்றிதழையும், கேள்விக் கட்டுப்பணமாக இத்திணைக்களச் சிறுப்பாரிடம் ரூபா 250/– செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கும் ஒப்பந்த காரர்களுக்கு 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

அ. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளருக்காக.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்,
த. பெ. இல. 544,
கொழும்பு–2,
1969 ம் ஷூ நவம்பர் மீ 28 ந் வ.

12–551—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

மீழ்க்காணும் உபயோகிக்கத்தகாததும் மிகையானதுமான பொறித் தொகுதியும் சாதனங்களும், பம்பிகளும், துளைப்பொறிகள் உறுப்புக்கள் ஆதியனவற்றை விலைக்குப் பெற்று அகற்றுவதற்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் 7.1.1970 மு. ப. 11.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நிலச் செதுக்கிகள்

| விடயம் | விவரம் | கொள்ளளவு | திணைக்கள எண் |
|---|---|---|---|
| 1 | பியூசைறஸ் ஐர் எஸ் 152 | 15/18 கன யார் | ஐ. டீ. பீ. எஸ். 4 |
| 2 | டிை | டிை | ஐ. டீ. பீ. எஸ். 5 |
| 3 | டிை | டிை | ஐ. டீ. பீ. எஸ். 6 |

| விடயம் | விவரம் | கொள்ளளவு | திணைக்கள எண் |
|---|---|---|---|
| 4 | உவூல்றிட்ஜ் பீபீ/120 | 12/14 கன யார் | ஐ. டீ. பீ. எஸ். 50 (1 சீவ் பீ 189 உடன்) |
| 5 | டிெ | டிெ | ஐ. டீ. பீ. எஸ். 51 |
| 6 | டிெ | டிெ | ஐ. டீ. பீ. எஸ். 52 |
| 7 | டிெ | டிெ | ஐ. டீ. பீ. எஸ். 53 |
| 8 | டிெ | டிெ | ஐ. டீ. பீ. எஸ். 64 |
| **இயந்திர மண்தூக்கிகள்** | | | |
| 9 | சேஸ்சைட் | ½ கன யார் | ஐ. டீ. எம். எஸ். 2 |
| 10 | டிெ | டிெ | ஐ. டீ. எம். எஸ். 3 |
| **கொங்கிறீற் கலப்பிகள்** | | | |
| 11 | றன்சம் றப்பியர் | 5/3 கன அடி | ஐ. டீ. சீ. எம். 12 3 சங்கிலி 2 லிங்ஸ் 1 ஸ்ப்றெக்கெற்றுடன் |
| 12 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 13 |
| 13 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 14 |
| 14 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 22 |
| 15 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 23 |
| 16 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 31 |
| 17 | டிெ | டிெ | ஐ. டி. சீ. எம். 32 |
| 18 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 35 |
| 19 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 48 |
| 20 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 52 |
| 21 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 55 |
| 22 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 56 |
| 23 | பாக்கர் | 14/10 | ஐ. டீ. சீ. எம். 58 |
| 24 | டிெ | டிெ | ஐ. டீ. சீ. எம். 63 |
| 25 | றன்சம் றப்பியர் 7 என்றி | 10/7 | ஐ. டீ. சீ. எம். 64 |
| 26 | பாக்கர் (10 எஸ் என் ரீ) | 14/10 | ஐ. டீ. சீ. எம். 82 |
| **அளவைக் கருவிகள்** | | | |
| 27 | ஒட்டோமெற்றிக் ருவின் பக்கற் | | ஐ. டீ. பீ. டப்ள்யூ. 2 |
| 28 | டிெ | | ஐ. டீ. பீ. டபிள்யூ. 8 |
| 29 | டிெ | | ஐ. டீ. பீ. டபிள்யூ. 9 |
| 30 | டிெ | | ஐ. டீ. பீ. டபிள்யூ. 10 |
| 31 | டிெ | | ஐ. டீ. பீ. டபிள்யூ. 15 |
| **துளைக்கருவிகள்** | | | |
| 32 | துளை சலிவான் இல. 12 ஈ 2 ஸ்குறு வீட் | | ஐ. டீ. டீ. டீ. 1201 |
| 33 | டிெ | | ஐ. டீ. டீ. டீ. 1202 |
| 34 | டிெ | | ஐ. டீ. டீ. டீ. 1203 |
| 35 | சாதாரண இரட்டைத் துளைப் பம்பியுடன் நீரியல் ஸ்வைவல் தலைவுடன்சேர்ந்த துளை சலிவான் சேப்பஸ்கோர் இல. 7 | | டீ. 1204 |
| 36 | டிெ | | டீ. 1205 |
| 37 | டிெ | | டீ. 1207 |
| 38 | டிெ | | டீ. 1208 |
| 39 | டயமண்ட் துளை—சீபீ 8.. | | டீ. 1209 |
| **பம்பிகள்** | | | |
| 40 | ருவின் சிலிண்டர் நோவா பம்பி | | பீ. 1006 |
| 41 | டிெ | | பீ. 1007 |
| 42 | டிெ | | பீ. 1008 |
| 43 | டிெ | | பீ. 1009 |
| 44 | டிெ | | பீ. 1013 |
| 45 | டிெ | | பீ. 1014 |
| 46 | டிெ | | பீ. 1011 |
| 47 | நோவா பம்பி—தனிசி சிலிண்டர் | | பீ. 1012 |
| 48 | பம்பி புஸாகொட் | | பீ. 1004 |
| 49 | டிெ | | பீ. 1005 |
| 50 | ஜே. எச். பெண்டர் வாகன பிறேம் அக்ஸில் நிமித்தும் இயந்திரம் | | 1 |
| 51 | ட்ராக் அசம்பிளீஸ் (துண்டு இல. 1) | | 12 |
| 52 | டிெ (துண்டு இல. 2) | | 8 |

2. 1 லிருந்து 31 வரையும், 50 லிருந்து 52 வரையுமுள்ள விடயங்களை இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திரக் கிளையிலும், 34 ஆம் இலக்கப் பங்கிலிருக்கும் 32 தொடக்கம் 49 வரையுமுள்ள விடயங்களை கொழும்பு 5, ஜாவத்தை வீதியிலுள்ள துளைபொறிக் களஞ்சியத்திலும் பார்வையிடலாம். போயாமுன் தினத்தைத் தவிர்ந்த ஏனைய அலுவலக நாட்களில் மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையும் பார்வையிடலாம்.

3. 4 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள பிரகாரம் கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைக் காண்பித்து, 1970.1.4 ஆம் திகதி ஞாயிறு மு. ப. 11.00 மணி வரையும் இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திர பிரதான பொறியியலாளரால் வழங்கப்படும் படிவங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

4. கீழே தரப்பட்டிருக்கும் தொகையின் அடிப்படையின் பிரகாரம், கொழும்பு 7 லுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திலோ அல்லது இரத்மலானையிலுள்ள இயந்திரக் கிளையின் பிரதான பொறியியலாளரின் அலுவலகத்திலோ அல்லது கொழும்பு மாவட்டத்திற்கு வெளியேயமைந்த ஏதேனும் கச்சேரியிலோ கட்டுப்பணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை காண்பிக்கும் பொழுது கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

(அ) விடயங்கள் 1 லிருந்து 31 வரையும் 50 உம்—கேள்வியாளர் விரும்பிக்கோரும் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூ. 100– வீதம்.

(ஆ) விடயங்கள் 32 லிருந்து 49 வரையும், 50 லிருந்து 52 வரையும்—கேள்வியாளர் விரும்பிக்கோரும் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா 25 வீதம்

5. மேலதிக விபரங்களை கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்கள பொறித் தொகுதிக் கிளையிலோ அல்லது இரத்மலானையிலுள்ள நீர்ப்பாசனத் இயந்திரக் கிளையின் பிரதான பொறியியலாளரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

எல். ஓ. டி. எஸ். குணசேகர,
நீர்ப்பாசன அதிபருக்காக.

பௌத்தலோக மாவத்த,
கொழும்பு 7, 28 நவம்பர் 1969.

12–488—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

## கட்டிடங்கள் திணைக்களம்

### கைதடியில் ஆயுர்வேத வைத்தியசாலையும் குடிமனைகளும் கட்டுவதற்கு ஏற்ற கட்டிடப் பொருட்கள் விநியோகம் செய்ய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மேற்படி ஆயுர்வேத வைத்தியசாலை கட்டுவதற்கு கட்டிடப் பொருட்கள் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. யாழ்ப்பாணம் கட்டிடங்கள் திணைக்களம் வட பகுதி கண்காணிப்புப் பொறிவலாளருடன் ஒப்பந்தம் செய்ய விரும்பியவர்கள் தங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்யப்பட்ட கடித உறையில், "கண்காணிப்புப் பொறிவலாளர், வடபகுதி, கட்டிடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்" அவர்களிடம் 1969.12.28 முற்பகல் 10.30 மணிக்கு முன்பாக சேருமாறு அனுப்பப்படல் வேண்டும்.

காகித உறையின் இடது மேற்பக்க மூலையில் "கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை கட்டிடப் பொருட்கள் விநியோகம்" என எழுதுதல் வேண்டும்.

2. விண்ணப்பக்காரர் தங்களைப் பதிவு செய்யும் கடிதங்களுடன் பின்வரும் விபரங்களையும் அனுப்ப வேண்டும் :—

(அ) விண்ணப்பக்காரர் விநியோகிக்கக் கூடிய பொருட்கள்.

(ஆ) கட்டிடப் பொருட்கள் விநியோகிக்கக் கூடிய சொந்த வாகனங்களான லொறி, டிரக்டர் ரிப்பர், முதலியவற்றின் பதிவு இலக்கங்களும், அவை இவ்வருடத்திற்குப் பாவிப்பதற்கு அனுமதிச்சீட்டு உடையதாவென தெரிவிக்க வேண்டும்.

(இ) இவ்வகை விநியோகங்கள் முன்னர் செய்த அனுபவ அத்தாட்சிப் பத்திரங்கள்.

3. தேவையான பொருட்கள் :—

(1) கட்டிடத்திற்குத் தேவையான நிரப்பு மண் (கிறவல்)
(2) 6″—9″ பெருங்கல்லு
(3) 2″ சரளைக்கல் (மெற்றல்)
(4) 1½″ சரளைக்கல் (மெற்றல்)
(5) 1″ சரளைக்கல் (மெற்றல்)
(6) ¾″ சரளைக்கல் (மெற்றல்)
(7) கந்தாவளை மண்
(8) மண்கும்பான் மண்
(9) சுண்ணும்பு (அவியாதது)
(10) சுண்ணும்பு (அவித்தது)
(11) சூளைச்சுண்ணும்பு
(12) தற்காலிக ஏறு மேடைக்குத் தேவையான மூங்கில்
(13) வெட்டு மரங்கள்.

4. ஏனைய அரசாங்க திணைக்களங்களுக்கு மேற் குறிக்கப்பட்ட பொருட்கள் விநியோகம் செய்த அனுபவமுடையவர்கள் அல்லது வாகனங்கள் உடையவர்கள் மாத்திரம் பதிவு செய்யப்படுவதற்கு தகைமையுடையவராவர்.

தெ. மாணிக்கம்,
கண்காணிப்புப் பொறிவலாளர், வடபகுதி,
(கட்டிடங்கள்).

கண்காணிப்புப் பொறிவலாளர்,
வட பகுதி அலுவலகம்,
கட்டிடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1969.12.2.

12–462—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கல்முனை உபபிரிவு

கல்முனையிலுள்ள உபபிரிவு பண்டசாலைக்கு சாமான்களைக் கொண்டு சென்று ஒப்படைப்பதற்காகிய கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பிலுள்ள மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளரினால், 1969 ம் ஆண்டு மார்கழி மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று முற்பகல் 10 மணி 5 நிமிடமளவில் திறக்கப்படும்.

2. இதற்குரிய கேள்விப்பத்திரங்களை கல்முனை, அம்பாரை, செங்கலடியிலுள்ள பொறியியலாளரின் அலுவலகங்களில், அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு மார்கழி மாதம் 21 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரையும் இந்த இலாகாவில் ரூபாய் 15,000த்துக்கும் அதற்குமேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெற முன்வருவோர், தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் தற்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். கேள்விப்பத்திரங்கள் வழங்குமுன், கல்முனை, அம்பாரை, செங்கலடி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபாய் 25 கேள்விக்கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திய பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இதைப்பற்றிய மேலதிக விபரங்களை கல்முனை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சண்முகராசா,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கல்முனை உபபிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
கல்முனை,
1969 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 28 ந் ஷ.

12–473—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## வன திணைக்களம்

த. பெ. இல. 509, கொழும்பு 2 என்ற விலாசத்தையுடைய வன திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் 18.12.1969 காலை 10 மணி வரை, பொலிதீன் பைகள் விநியோகிப்பதற்கான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

| விபரம் | அளவு | தடிப்பு | தொகை |
|---|---|---|---|
| பொலிதீன் பைகள் | 9″—9″ | 300 கேஜ் | 225,000 |
| ஷை | 6″—9″ | 200 கேஜ் | 800,000 |
| ஷை | 6″—18″ | 300 கேஜ் | 20,000 |

2. கேள்விகள் இரு பிரதிகளில் கொழும்பு வனபாதுகாவல் அதிபரின் அலுவலகத்தில் வேலை நேரங்களில் 17.12.69 பி. ப. 4 மணி வரை பெறக்கூடிய கேள்விப் பத்திரத்தில் அனுப்பப்பட வேண்டும். கேள்விக் கட்டுப்பணம் ரூபா 100 செலுத்திய பற்றுச்சீட்டுச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரம் பெறமுடியும்.

3. கேள்விக் கட்டுப்பணம் கொழும்பு 1, யோக் வீதி, இலங்கை வங்கியில் வன பாதுகாவல் அதிபரின் கணக்கு இலக்கம் 34 க்குச் செலுத்தப்படவேண்டும்.

எம். எஸ். ரணதுங்க,
பதில் வன பாதுகாவல் அதிபருக்காக.

கொழும்பு 2.

12–486—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

---

## கடற்றொழித் திணைக்களம்

### பயிற்சி வள்ளம் "புகுணுமாறு 1" இன் விற்பனைக்கான கேள்விகள்

"புகுணுமாறு 1" எனப்படும் ஒரு வள்ளத்தை விற்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள, கடற்றொழில் இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களும், ஏனைய விபரங்களும் 1969.12.27 ந் தேதி நண்பகல் 12 மணிவரை கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விகள் 1969.12.28 ந் தேதி காலை 10.30 மணிக்கு முடிவுறும்.

4. கேள்வி வைப்புப் பணம் ரூபா 200.

ஐ. ஒ. கே. ஜீ. பர்னந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3.
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 2 ந் ஷ.

12–449—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884.

## மதுவரித் திணைக்களம்

**சீதுவ, பண்டாரவத்தையிலுள்ள அரசினர் சாராய வடிசாலைக்கு 1970ம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் திகதி வரைக்கும் கள் வழங்குவதற்காய கேள்விப்பத்திரங்கள்**

1970 ம் ஆண்டு பங்குனி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் திகதி வரையும் சீதுவ, பண்டாரவத்தையி லுள்ள அரசினர் சாராய வடிசாலைக்கு கள் வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 7, ரொறிங்டன் சதுக்கத்திலுள்ள உள்நாட்டு விவகார அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத்தலைவரால் 1970 ம் ஆண்டு தை மாதம் 9 ம் திகதி முற்பகல் 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும்.

மதுவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கேள்விப் பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். அவரிடமிருந்து சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

மு. ப. திசநாயக்க,
மதுவரி ஆணையாளர்.

மதுவரி ஆணையாளர் திணைக்களம்,
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
1969.11.30.

12–490—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

**கிரித்தலைத் திட்டத்திலுள்ள பெண்டிவெவவில் ஒரு கூட்டுறவுப் பண்டசாலை (பெரியது) நிருமாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்**

மேற்குறிப்பிட்ட பண்டசாலையை நிருமாணிப்பதற்கான கேள்விப் பத்திரங் களைக் காணி அபிவிருத்தி அதிபர் 1969 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ந் திகதி மு. ப. 11 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25/- கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும்பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ம் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர்கள் பணம் கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைப் பத்திர மாக வைத்திருந்து பணத்தை மீளப்பெற விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப் பத்திரங்களுடன் இணைக்கக் கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக் கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "கிரித்தலைத் திட்டத்திலுள்ள பெண்டிவெவவில் ஒரு கூட்டுறவுப் பண்டசாலை (பெரியது) நிருமாணிப் பதற்கான கேள்விப் பத்திரம்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடி யாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக் கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவை யுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விகளை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக் குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப் பணம் செலுத்தவும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அர சாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விக்காரர் குறைந்தது 25,000 ரூபாவுக்கு பொதுவேலைத் திணைக்களம்/நீர்ப்பாசன/கல்வி அல்லது காணி அபிவிருத்தித் திணைக் களம் முதலியவற்றில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களாக இருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரங் களுக்கு விண்ணப்பிக்கும் போது பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றை யேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறி யியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம், கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 3 ந் வ.
சிரி/2/397.

12–467—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

**பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள கௌடுல்லை கட்டம் II ல் கா. அ. க./ஓவசியர் குடிமனைகள் 3, நிருமாணிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள்**

மேற்குறிப்பிட்ட குடிமனைகளை நிருமாணிப்பதற்கான கேள்விப் பத்திரங் களைக் காணி அபிவிருத்தி அதிபர் 1969 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ந் திகதி மு. ப. 11 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும்பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவ தொரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ம் திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. கேள்விக்காரர்கள் பணம் கட்டியதற்குரிய பற்றுச்சீட்டைப் பத்திர மாக வைத்திருந்து பணத்தை மீளப் பெற விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப் பத்திரங்களுடன் இணைக்கக் கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப் பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "கௌடுல்லை கட்டம் II ல் கா. அ. க./ஓவசியர் குடிமனைகள் 3 நிருமாணிப்பதற்கான கேள்விப் பத்திரம்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது

அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையு மாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள் விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விகளை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக் குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து பிணைப் பணம் செலுத்தவும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தவறுமிடத்து அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அர சாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ந் திகதி முற்பகல் 11.15 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

10. கேள்விக்காரர் குறைந்தது 25,000 ரூபாவுக்கு பொதுவேலைத் திணைக்களம்/நீர்ப்பாசன/கல்வி அல்லது காணி அபிவிருத்தித் திணைக் களம் முதலியவற்றில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களாக இருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்க வேண்டும்.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றை யேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறி யியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம், கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 3 ந உ.
ஏசீ/2/398.

12–468—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன்கவனிப்பு சேவா திணைக்களம்

கொழும்பு, நம்பர் 3 பகதலே வீதியில் உள்ள உதவி நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன்கவனிப்பு சேவா ஆணையாளரின் கந்தோரில் 1969.12.27 திகதி முற்பகல் 10 மணிக்கு பாவிக்க முடியாத குளிர்ச்சிப் பெட்டி (எல். ஏ. சி) பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் அதற்குரிய பணத்தை உடனே செலுத்தி அவ்விடத்திலிருந்து உடனே அகற்ற வேண்டும்.

எதுவித காரணத்தினாலும் எடுக்கப்பட்ட பொருள் திருப்பி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாததும் பணம் திருப்பிக் கொடுபடமாட்டாதென்றும் கருதல் வேண்டும்.

1969.12.27 திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணிவரையும் குறிக்கப்பட்ட குளிர்ச்சிப் பெட்டியைப் பார்வையிடலாம்.

டபிள்யு. ஆர். பி. ராஜகருணு,
நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களத்தின் ஆணையாளர்.

103, 1/1 டிமெல் கட்டிடம்,
சதாம் வீதி,
கொழும்பு–1.

12–452—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## அஞ்சல் தந்தி திணைக்கள ஏலவிற்பனை

கீழ்க் கூறப்பட்ட உபயோகிக்கத்தகாத மோட்டார் மாற்றுறுப்புக்களும் ஏனைய பலவினமான துணைக்கருவிகளும், கொழும்பு 10, டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள பி. அ. அ. மோட்டார் தபால் போக்குவரத்துப் பிரிவில் 4 1.1970 ந் திகதி அன்று மு. ப. 10.00 மணி தொடக்கம் ஏலத்தில் விற்கப்படும்.

விற்பனை தொடங்கு முன்னர் விலைகேட்கக் கருதுவோர், மாற்றுறுப்புக் களைப்பரிசீலனை செய்யலாம். மேற்கூறப்பட்ட அலுவலகத்தில், 3.1.1970 அன்று வழமையான வேலை நேரத்தில் (மு. ப. 9.00 தொடக்கம் பி. ப. 4.00 வரை) மாற்றுறுப்புக்களும் ஏனைய துணைக்கருவிகளும் பரிசீலனைக் குக் கிடைக்கத்தக்கதாய் இருக்கும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விலைகேட்கக் கருதுவோர், விடயத்திற்குரிய முழுப் பெறுமதியையும் வழங்கிய பின்னரே, அதனை, விற்பனை முடிவடைந்த தும் உடனடியாக எடுத்துச் செல்லல் வேண்டும்.

வி. எம். அபெயசேகரா,
அஞ்சல் அதிபர்நாயகமும் தந்திப் போக்கு வரத்து அதிபரும்.

அஞ்சல் அதிபர்நாயகமும், தந்திப் போக்குவரத்து அதிபரினது அலுவலகம்,
அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம், கொழும்பு 1.

| | விடயம் | தொகை |
|---|---|---|
| 1. | பட்டரி (வி. 12) .. | .. 15 |
| 2. | பட்டரி (வி. 26) .. | .. 20 |
| 3. | லொறி ரையர்கள் .. | ..200 |
| 4. | மோட்டார் சைக்கிள் ரையர்கள் | .. 50 |
| 5. | லொறி டியூப் | ..150 |
| 6. | மோட்டார் சைக்கிள் டியூப் .. | .. 50 |

12–370—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## பொலிஸ் திணைக்களம்

உபயோகிக்க இயலாத பொலிஸ் உடைகள், துவிச்சக்கர வண்டிகள் முதலியன 18.12.69 ல் மாத்தறைப் பொலிஸ் நிலையத்தில் ஏல விற்பனை செய்யப்படும்.

| பொருட்கள் | தொகை |
|---|---|
| கைப்பட்டி | 19 |
| வெலிற் (உடுப்புப் பட்டி) | 30 |
| தோட்டாப் பைகள் | 27 |
| தோல் சப்பாத்துக்கள் (பூட்ஸ்) | 53 சோடி |
| பொலிஸ் சாரதிகள் தொப்பி | 4 |
| துவிச்சக்கரவண்டிச்சில்லின் ஆணி | 1 |
| துவிச்சக்கரவண்டி பிறீவீல் | 1 |
| மோட்டார் சையிக்கிள் தொப்பி | 4 |
| கன்வஸ் சப்பாத்து | 6 சோடி |
| காக்கிக் கோட் | 18 |
| காக்கி கலிசான் | 28 |
| பிளனல் சேட்டுக்கள் | 6 |
| படுக்கை விரிப்புக்கள் | 31 |
| மெத்தை | 37 |
| சப்பாத்துப் பட்டிகள் | 26 சோடி |
| மழை அணிகள் | 10 |
| கறுப்புச் சப்பாத்துக்கள் | 220 |
| தொப்பிகள் | 163 |
| நீலக் காலணிகள் | 13 சோடி |
| துவிச்சக்கர வண்டிச் சங்கிலி | 1 |
| துவிச்சக்கர வண்டி டைனமோ | 1 |

| பொருட்கள் | தொகை |
|---|---|
| மின்சாரக் கேற்றில் .. .. .. | 1 |
| பெற்றோல் மக்ஸ் லாம்பு .. .. .. | 2 |
| மழை அங்கிகளின் பட்டி .. .. .. | 1 |
| பூட்டுகள் .. .. .. | 6 |
| வானொலி (றேடியோ) .. .. .. | 1 |
| அளவைப் பெட்டி .. .. .. | 2 |
| புதிதான பழுதுபட்ட தொப்பிகள் .. .. | 1 |
| புதிதான பழுதுபட்ட காலணிகள் .. .. | 1 சோடி |
| பழை சங்கிலி (இரும்பு) .. .. .. | 1 |
| கோடலி .. .. .. | 2 |
| சங்கிலியுடன் விசில் .. .. .. | 1 |
| துவிச்சக்கர வண்டிகள் (பழையன) .. .. | 15 |

மேற்கூறிய பொருட்களை ஏலவிற்பனைக்கு முதல் நாள் மாத்தறை பொலிஸில் பார்வையிடலாம்.

ஏலவிற்பனை முடிந்தவுடன், பணத்தைச் செலுத்திப் பொருட்களை உடன் பெற்றுச் செல்ல வேண்டும்.

க. முருகேசபிள்ளை,
பொலிஸ் அதிகாரி,
தென்மாகாணம் (கிழக்கு),
மாத்தறை.

பொலிஸ் காரியாலயம்,
மாத்தறை.

12–334—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## பாவித்த பொருட்கள்—ஏல விற்பனை

எதிர்வரும் 27 ம் திகதி மார்கழி மாதம் 1969 ம் ஆண்டு முற்பகல் 9.30 மணிக்கு கொழும்பு, எச்சலன் சதுக்கம், பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்:—

| | |
|---|---|
| கைப்பட்டிகள் | உடுப்பு பெட்டி |
| தொப்பி | உடுப்பு போர்வைகள் |
| தோல்பட்டி | ரியூனிக் |
| குண்டுப்பை | வெனியன் |
| காக்கி உடைகள் | சப்பாத்து |
| கன்வஸ் சப்பாத்து | நீல மேஸ் கூட்டங்கள் |
| மெத்தை | 16 மி. மி. மின்சார இயந்திரம் |
| நீல நிற கால்சட்டை | வாளி |
| பூட்ஸ் | விளக்கு முதலியன |

ஏலத்தில் சாமான்கள் வாங்கியவர்கள் உடனடியாகப் பணம் கட்டி விற்பனை முடிந்தவுடன் பொருட்களை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுவர்.

என். ஜி. சி. செனிவிரட்டின,
பயிற்சி அதிபர்.

பொலிஸ் பயிற்சிப் பாடசாலை,
கொழும்பு–1,
1969 ம் ஆண்டு நவெம்பர் மீ 30 ந உ.

12–427—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

## காலிக் கச்சேரி

### பிரசித்த ஏலவிற்பனை

22 ஸ்ரீ 2321 ஆம் இலக்க 3½ தொன் மொறிஸ் மொமார்சல் லொறி மேலே குறிப்பிடப்பட்டுள்ள லொறி 1969 ஆம் வருடம் தெசம்பர் மாதம் 29 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு காலிக் கச்சேரியில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

2. மேற்படி லொறியைக் கிழமை நாட்களில் காரியாலய நேரங்களில் முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை (போயா தினத்துக்கு முன் தினம் முற்பகல் 9.30 முதல் பிற்பகல் 1.00 மணி வரை) காலிக் கச்சேரிப் பதிவறைப் பொறுப்பு உத்தியோகத்தருடன் முன்னேற்பாடு செய்துகொள்வதன் மூலம் பார்வையிடலாம்.

3. ஏல விற்பனையின்போது கேட்கப்படும் ஆகக் கூடிய தொகையைக் காணிக் கொமிசனர் அங்கீகரிக்கும்வரை லொறியை விற்பனைசெய்தல் சம்பந்தமான முடிவெதுவும் கொள்ளப்படமாட்டாது. ஆயினும் விற்பனை முடிவில் கூடியதொகைக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 10 வீதத்தைக் காலி மாவட்ட அரசாங்க அதிபரிடம் வைப்புப் பணமாக வைத்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கேள்வியைக் காணிக் கொமிசனர் அங்கீகரிப்பின் கேள்விக்காரர் மூன்று தினங்களுக்குள் பாக்கிய தொகையைச் செலுத்தி லொறியைக் கொண்டு செல்லல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்காதுவிடின் வைப்புப் பணமாக வைத்த வீதத் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

4. அனுமதிப் பத்திரம் (லைசன்ஸ்) மாற்றிக் கொடுக்கப்பட மாட்டாததுடன் வாகனம் காப்புறுதி செய்யப்பட்டுமில்லை. வாங்குவோரின் பூரண பொறுப்பின் பேரிலேயே வாகனம் தற்போதிருக்கும் நிலையில் விற்பனை செய்யப்படும்.

5. லொறியை விற்பனை செய்தல் சம்பந்தமான காணிக் கொமிசனரின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

பி. ஏ. ரி. குணசிங்க,
காலி மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, காலி,
1969 ம் ஆண்டு நவம்பர் மீ 24 ந உ.

12–425—12.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## ஆயக் குத்தகை

### நெடுந்தீவு குறிக்கட்டுவான் மோட்டார் வள்ளச் சேவை 1970 ம் ஆண்டு தை மாதம் முதலாந் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதி வரை

1970 ம் ஆண்டு தை மாதம் 1 ந் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதி கால எல்லைவரை நெடுந்தீவு–குறிக்கட்டுவான் மோட்டார் வள்ளச் சேவைக்கான குத்தகைக் கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ம் திகதி காலை 11 மணி வரைக்கும் யாழ்ப்பாணக் கச்சேரியில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் ரூபா 100 கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் இருத்தல் வேண்டும். வெற்றிபெற்ற குத்தகைக்காரர் உரிய காலத்திற்குள் பிணைப்பணத்தைக் கட்டத் தவறினுல் அல்லது ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடத் தவறினுல் முன் கட்டிய கேள்விப் பணத்தை இழக்கவேண்டியும், அவருடைய பெயர் தவறுனர் உத்தரவுச் சீட்டு நிரலில் சேர்க்கப்பட்டும்விடும். இவற்றைத் தவிர்த்து ஏனைய கேள்வியாளரின் கட்டுப்பணம் வெற்றி பெற்ற விற்பனையாளர் விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திட்டுப் பிணைப்பணம் கட்டிய பின்பு திருப்பிக் கொடுக்கப்படும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் மெழுகு சீல் இடப்பட்ட காகித உறைக்குள் வைக்கப்பட்டு 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ம் திகதி காலை 11 மணிக்கு முன் எனது காரியாலய உதவியாளரின் அலுவலகத்தில் இதற்கென இருக்கும் கேள்விப் பெட்டியில் இடலாம், அல்லது குறிக்கப்பட்ட திகதி, நேரத்துக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் வைக்கப்படும் காகித உறைகள் மெழுகு சீல் இடப்படுவதுடன் அவ்வுறையின் இடதுபுற மேல் உறையில் " நெடுந்தீவு–குறிக்காட்டுவான் மோட்டார் வள்ளச் சேவைக்கான கேள்விப் பத்திரம் " என்னும் வாசகம் எழுதப்படுவதோடு கேள்வியாளரின் பெயரும் விலாசமும் குறிக்கப்படல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ம் திகதி காலை 11 மணிக்கு எனது காரியாலய உதவியாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர்கள் சமுகமளிக்கலாம்.

6. மேற்கூறப்பட்ட நாள் நேரத்துக்குப் பிந்திக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. கேள்வியாளர்கள் இச்சேவையை நடத்துவதற்கேற்ற விதிமுறைகளை யாழ்ப்பாணக் கச்சேரியில் பார்வையிடலாம்.

8. நியமனம் பெற்ற கேள்வியாளர் கேள்வித் தொகையில் 10 ஒரு பங்கை முற்பணமாக உடனே செலுத்தல் வேண்டும். கேள்வித் தொகையின் அரைவாசியைக் காணிப் பிணையாகவும் அல்லது மூன்றி

ஒரு பங்கைக் காசுப் பிணையாகவும் கேள்விகள் ஏற்றுக் கொண்ட 10 நாட்களுள் பிணைப்பணமாகச் செலுத்தல் வேண்டும்.

9. நியமனம் பெற்ற கேள்வியாளர் தாங்கள் பிணையாகக் கொடுக்கும் காணிகளின் உறுதிகளைப் பார்வையிடுதல், உறுதிச்சீட்டு வரைதல், காணிகள் மதிப்பிடுதல், உறுதிச்சீட்டுப் பத்திரத்துக்குரிய முத்திரையை முத்திரைச் சட்டத்தின் கீழ் நிர்மாணித்தல் முதலிய வேலைகளுக்கு முடிக்குரிய வழக்கறிஞருக்குக் கொடுக்க வேண்டிய போதிய பணத்தை யும் செலுத்த வேண்டும்.

10. பிணையாகக் கொடுக்கும் ஒவ்வொரு உறுதிகளுடனும் அக் காணிகளில் வில்லங்கம் அல்லது கடனேதும் இல்லையென்று உறுதிப் படுத்தும் காணிப் பதிவாளரின் பத்திரம் இணைத்தல் வேண்டும். பிணை கட்டுபவர் மேற்கூறிய பத்திரம் பெற்றுக் கொள்வதற்குரிய செலவைக் கொடுக்க வேண்டும்.

11. கேள்விகள் எதுவும் கிடைக்காவிட்டால் அல்லது கிடைத்த கேள்விகள் திருப்திகரமாக இல்லாவிட்டால் ஆயக் குத்தகை பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

12. அரசாங்க அதிபர் எந்தக் கேள்வியையும் அல்லது எல்லா வற்றையுமே எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

13. நியமனம் பெற்ற கேள்வியாளர் இலங்கைத் தொழிலாளர் களையே வேலைக்கு அமர்த்தல் வேண்டும். இது ஆயக் குத்தகையின் விதி முறைகளில் ஒன்ருக இருக்கும். இந்த விதியை மீறும் நியமனம் பெற்ற கேள்வியாளர் ஆயக் குத்தகை உரிமையை இழக்கவேண்டி நேரிடும். திறைசேரியின் அனுமதியுடன் அரசாங்க அதிபர் இலங்கையர் அல்லாதாரைக் குறிப்பிட்ட காரணங்களுக்காக வேலைக்கு அமர்த்த எழுத்து மூலம் அனுமதிக்கலாம்.

14. மேற்கொண்ட விபரங்கள் வேண்டுவோர் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு மனுப்பண்ணிப் பெற்றுக் கொள்ளலாம்.

எல். சீ. பீற்றேர்ஸ்,
யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர்.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1969 ம் ஆடு நவம்பர் மீ 30 ந உ.

12-472—12.12.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,884

# நானுவித அறிவித்தல்கள்

## பாடசாலை உபயோகத்திற்கெனக் கல்வி நூற் பிரசுர ஆலோசனைச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடப்புத்தகங்களினதும் உப பாடப் புத்தகங்களினதும் பூரண அட்டவணை

1966 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கல்வி நூற் பிரசுர ஆலோசனைச் சபையால் பாடசாலை உபயோகத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட (தமிழ்) பாடப்புத்தகங்களினதும், உப பாடப்புத்தகங்களினதும் பூரண அட்டவணை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2. பாடசாலைகளின் உபயோகத்துக்குப் புத்தகங்களைத் தெரிவு செய்தல் "1.1.70 தொடக்கம் அரசினர் பாடசாலைகளின் கட்டாய உபயோ கத்துக்கான புத்தகங்கள்" பற்றி கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சரால் 1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ந் திகதி விடுக்கப்பட்ட ஆ. க. 11/150 ம் இலக்கச் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமையும்.

3. பாடசாலை உபயோகத்திற்குத் தற்பொழுது செல்லுபடியான பாடப்புத்தகங்களும், உப பாடப்புத்தகங்களுமே இவ்வட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைக் கவனிக்கவும். அங்கீகாரங்களின் செல்லுபடி முடிவடைந்தவைகளும் இச்சபையால் மீண்டும் அங்கீகாரம் அளிக்கப் படாதவைகளுமான பாடப்புத்தகங்களும் உப பாடப்புத்தகங்களும் நீக்கப்பட்டுள்ளன.

4. சுலபமாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு பாடப்புத்தகங்கள் வெவ்வேறு பாடங்களின் கீழும், அங்கீகாரக் காலவெல்லையை வகுத்துக் காட்டும் அட்டவணையின் கீழும் கொடுக்கப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் பாடசாலை உபயோகத்திற்கு மேலும் செல்லுபடியாகவேண்டுமெனின் ஒவ் வொரு புத்தகமும் அங்கீகாரக் காலவெல்லை முடியும் பொழுது மீண்டும் இச்சபையால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

5. வித்தியா பகுதியாலும் கல்வி நூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்படும் பாடப்புத்தகங்கள் தவிர்ந்த வையும் இச்சபையால் சிபார்சு செய்யப்படாதவையுமான புத்தகங்களை பாடசாலை உபயோகத்திற்கு விதித்தல் குற்றமாகும்.

வித்தியா பகுதியாலும் கல்வி நூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்படும் பாடப்புத்தகங்கள், குறிப்புரை களுடன் கூடிய இலக்கிய நூல்களின் புதுப் பதிப்புகள், சொற்தொகுதிகள், அகராதிகள், கோட்டுப் படங்கள், வரைப்படங்கள் ஆகியன இச்சபையின் அங்கீகாரத்தினின்றும் விலக்களிக்கப்பட்டன.

6. வித்தியா பகுதியாலும் கல்வி நூற் பிரசுரப் பகுதியாலும் அரசகரும மொழிப் பகுதியாலும் வெளியிடப்பட்டுள்ள பாடப்புத்தகங்கள் இவ்வட்டவணையில் சேர்க்கப்படவில்லை.

7. இவ்வட்டவணையில் கொடுபட்டுள்ள வரிசைக்கிரமம் புத்தகங்களின் சிறப்பு ஒழுங்கையோ முக்கியத்துவத்தையோ குறிப்பதல்ல.

சோமரத்ன விஜயசிங்க,
செயலாளர்,
கல்வி நூற் பிரசுர ஆலோசனைச்சபை.

கல்வி நூற்பிரசுர ஆலோசனைச்சபை,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆடு டிசெம்பர் மீ 1 ந உ.

### வகுப்பு வாசினைப் புத்தகங்கள்

#### அங்கீகாரக் காலவெல்லை—1.1.68 தொடக்கம் 31.12.70 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | உமா வாசகம் 3 ம் புத்தகம் | — | கலைவாணி புத்தகசாலை | கலைவாணி புத்தகசாலை |
| 2. | பாலபோதினி 7 ம் புத்தகம் | — | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் | வட இல. தமிழ் நூ. பதிப்பகம் |
| 3. | உமா வாசகம் 7 ம் புத்தகம் | — | கலைவாணி புத்தகசாலை | கலைவாணி புத்தகசாலை |
| 4. | உமா வாசகம் 1 ம் புத்தகம் (1965 ம் ஆண்டுப்பதிப்பு) | 1 | கலைவாணி புத்தக நிலையம் | ஷ |
| 5. | உமா வாசகம் 2 ம் புத்தகம் (1966 ம் ஆண்டுப்பதிப்பு) | 2 | ஷ | ஷ |
| 6. | பாலபோதினி (1 – 6) | 1 – 6 | வட இல. தமிழ் நூ. பதிப்பகம் | வட இல. த. நூ. பதிப்பகம் |

#### அங்கீகாரக் காலவெல்லை—1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 7. | உமா வாசகம் (5) (1964 ம் ஆண்டுப் பதிப்பு) | 5 | கலைவாணி புத்தக நிலையம் | கலைவாணி புத்தக நிலையம் |
| 8. | *மாணவர் தமிழ் வாசகம் 1, 2 (1965 ம் ஆண்டுப் பதிப்பு) | 1 – 2 | வே. கணபதிப்பிள்ளை | வே. கணபதிப்பிள்ளை |
| 9. | *மாணவர் தமிழ் வாசகம் 3, 6 (1963 ம் ஆண்டுப் பதிப்பு) | 3 – 6 | வே. கணபதிப்பிள்ளை | வே. கணபதிப்பிள்ளை |
| 10. | *மாணவர் தமிழ் வாசகம் 4 (1964 ம் ஆண்டுப்பதிப்பு) | 4 | ஷ | ஷ |

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 11. | *மாணவர் தமிழ் வாசகம் 5 (1961 ம் ஆண்டுப்பதிப்பு) | 5 | வே. கணபதிப்பிள்ளை | வே. கணபதிப்பிள்ளை |
| 12. | சுதந்திர இலங்கை நவீன வாசகம் | 5 | மந்திரி கிரகோரி அன் கோ., கொழும்பு | மந்திரி கிரகோரி அன் கோ. |
| 13. | சிறுவர் செந்தமிழ்ப் பயிற்சி மாலை | 2–4 | சௌ. க. கந்தப்பு | ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம் |
| 14. | செந்தமிழ்ப் பயிற்சி | 5 | ஷை | ஷை |
| 15. | செந்தமிழ்ப் பயிற்சி மாலை | 6 | ஷை | ஷை |

**தமிழ் இலக்கியம்**

**அங்கீகாரக் காலவெல்லை—1.1.66 தொடக்கம் 31.12.70 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் மலர் மாலை | 7–8 | வட இல. தமிழ் நூற் பதிப்பகம் | வட இலங்கை தமிழ் நூற் பதிப்பகம் |
| 2. | *தமிழ் மஞ்சரி முதற் புத்தகம் (1964 ஆம் ஆண்டுப் பதிப்பு) | 6 | ஷை | ஷை |
| 3. | *தமிழ் மஞ்சரி மூன்றும் புத்தகம் (1963 ம் ஆண்டுப் பதிப்பு) | 8 | ஷை | ஷை |

**தமிழ்ப் பாஷை**

**அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் மரபு | க. பொ. த. (சாதாரண) க. பொ. த. (உயர்தர) | பொன் முத்துக்குமாரன் | வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம் |

**அங்கீகாரக் காலவெல்லை—1.1.66 தொடக்கம் 31.12.70 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 2. | *பயிற்சிமூலம் பாஷைத் தேர்ச்சி (1954 ம் ஆண்டுப் பதிப்பு) | 8 | ரத்தினம் செல்லையா | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் |
| 3. | *தமிழ் மொழிப் பயிற்சியும் தேர்ச்சியும் முதற் புத்தகம் (1960 ம் ஆண்டுப் பதிப்பு) | 6 | தி. சதாசிவ ஐயர் | ஷை |

**உப பாடப்புத்தகம்**

**அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் அறிவு | உயர்தர | க. பே. முத்தையா | திருமதி எம். ஜே. முத்தையா, 8, கச்சேரி, நல்லூர் றோட், சுண்டிக்குளி |

**பூமிசாஸ்திரம்**

**அங்கீகாரக் காலவெல்லை—19.7.69 தொடக்கம் 31.12.72 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | தற்காலப் புவியியல் | 7 ம் புத்தகம் | த. தியாகராசா | மனோகரி கல்விப்பிரசுரம், கொழும்புத்துறை |

**அங்கீகாரக் காலவெல்லை—9.9.68 தொடக்கம் 31.12.71 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 2. | எட்டாந்தரப் புவியியல் | 8 | வீ. கந்தவமை, பீ. ஏ. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் |
| 3. | ஆரம்பப் புவியியல் | 8 | கே. குணராசா | அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம் |

**அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.71 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 4. | *தற்காலப் புவியியல் | 8 | த. தியாகராசா | இலங்கா மத்திய புத்தகசாலை, கண்டி |

**அங்கீகாரக் காலவெல்லை—1.1.68 தொடக்கம் 31.12.70 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 5. | *தற்காலப் புவியியல்—இலங்கை | க. பொ. த. | த. தியாகராசா | ஆ. புவனேந்திரநாதன், 124, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் |
| 6. | *தற்காலப் புவியியல்—" உலகம் " | ஷை | ஷை | ஷை |
| 7. | *செய்கைமுறைப் படவேலை | ஷை | கே. குமாரராஜா, எஸ். ராஜ கோபால், கே. பரமேஸ்வரன் | அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம் |
| 8. | படவரை கலையில் வரைப்படங்கள் | உயர்தர வகுப்பு | கே. குணராசா | ஷை |
| 9. | *ஐரோப்பாவும் இரு அமெரிக்காக் கண்டங்களும் (59 ம் ஆண்டுப் பதிப்பு) | 7 ம் வகுப்பு | எஸ். எவ். டி சில்வா | அப்போதிக்கரீஸ் கம்பெனி, கொழும்பு |
| 10. | *உலகப் புவியியல் (64 ம் ஆண்டுப் பதிப்பு) | க. பொ. த. | கே. குணராசா | அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம் |

### உபபாடப்புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை—19.7.69 தொடக்கம் 31.12.72 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. பாடசாலைகட்கான இலங்கைப் புவியியல் .. | — .. | ஏ. டி. பப்டிஸ்ற் .. | ஓறியன்ற் லோங்மன்ஸ், சென்னை |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| | | | |
|---|---|---|---|
| 2. *பூமிசாத்திரம் (63 ம் ஆண்டுப் பதிப்பு) .. | உயர்தர .. | ஏ. டி. பப்டிஸ்ற் .. | ஓறியன்ற் லோங்மன்ஸ், சென்னை |
| 3. படவரை கலையில் எறியங்கள் .. .. | க. பொ. த. (சாதாரண) (உயர்தர) .. | க. குணராசா .. | அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம் |

### சரித்திரம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. புதுமுறைச் சரித்திரம் (66 ம் ஆண்டுப் பதிப்பு) .. | 7 .. | ஆ. சபாரத்தினம் .. | கலைவாணி புத்தகநிலையம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.68 தொடக்கம் 31.12.70 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 2. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் — இரண்டாம் பாகம் | — .. | ஜீ. சீ. மெண்டிஸ், எஸ். ஏ. பேக்மன் | அப்போதிக்கரிஸ் கொம்பனி |
| 3. புதுமுறைச் சரித்திரம் .. .. | 6 .. | ரி. வி. கே. மூர்த்தி, ஏ. சபாரத்தினம் அவர்களால் மீளாயப்பட்டது | கலைவாணி புத்தகநிலையம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 4. *புதுமுறைச் சரித்திரம், பகுதி 3 (64 ம் ஆண்டுப் பதிப்பு) | 8 .. | வி. எஸ். எஸ்ராம், ரீ. வி. கே. மூர்த்தி | கலைவாணி புத்தகநிலையம் |

### உபபாடப்புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. புதுமுறைச் சரித்திரம், க. பொ. த. அடங்கன் 1 .. | பகுதி II க. பொ. த. .. | ஆ. சபாரத்தினம் .. | கலைவாணிபுத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

### குடியியல்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. புதிய குடியியல் .. .. | .. | வி. சிவசுப்பிரமணியம், வ. மகாதேவன் .. | ஸ்ரீகாந்த அச்சகம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.70 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 2. *குடியியல் 1 ம் 2 ம் புத்தகங்கள் (1963 ம் ஆண்டுப் பதிப்பு) | 6, 7 .. | எஸ். எவ். டி சில்வா .. | மாக்மிலன் அன் கம்பனி லிமிட்டெட் |
| 3. *குடியியல் 3 ம் புத்தகம் (62 ம் ஆண்டுப் பதிப்பு) .. | 8 .. | ஷை .. | ஷை |

### வர்த்தகம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. இக்கால வாணியமுறை .. .. | க. பொ. த. .. | க. நவரத்தினம் .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் |

### கணக்குப் பதிவியல்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. கணக்குப்பதிவு நூல் .. .. | க. பொ. த. .. | க. நவரத்தினம் .. | வட இல. தமிழ் நூற் பதிப்பகம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 2. கணியற் சுருக்கம் .. .. | க. பொ. த. .. | வே. அளகேசன் .. | சரோஜ நூல் வெளியீட்டு நிலையம், 62, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம் |

### சுகாதாரம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. சுகாதார போதினி .. .. | 8 .. | டொக்டர் ச. அ. தர்மலிங்கம் .. | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் |
| 2. சுகாதார போதினி 1 ம் 2 ம் பாகங்கள் (1966 ம் ஆண்டுப் பதிப்பு) | க. பொ. த. .. | ஷை .. | ஷை |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 3. உடலியலும், சுகாதாரமும் (2 ம் புத்தகம்) .. | 6, 7 .. | எல். வி. பி. பிள்ளை .. | எல். வி. பி. பிள்ளை |
| 4. சுகாதாரமும் சரீர சாஸ்திரமும் .. .. | க. பொ. த. .. | நா. நடராசா .. | கலைவாணி புத்தக நிலையம் |

### கேத்திர கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. அறிமுறைக் கேத்திர கணிதம் 2 ம் புத்தகம் .. | க. பொ. த. .. | எஸ். கே. சந்திரசேகரம் .. | சுமதி கல்வி வெளியீட்டகம் |

### அட்சர கேத்திர கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. அட்சர கேத்திர கணிதம் .. .. | 7 .. | தோமஸ் ஈப்பன், ஆர். சோம சுந்தரம் .. | லிற்றில் பிளவர் புத்தக நிலையம், கரவெட்டி |

### எண்கணிதம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. சுதந்திர இலங்கை நவீன கணிதம் .. | 2 .. | சரவணமுத்து க. சபாநடேசர் | மந்திரி கிரகேரி அன் கோ. |
| 2. நவீன வாழ்க்கைக் கணிதம் .. .. | 2 — 5 .. | க. சபாநடேசர் .. | கலைவாணி புத்தகநிலையம், யாழ்ப்பாணம் |
| 3. படிமுறைக் கணிதம் .. .. | 6, 7, 8 க. பொ. த. .. | எம். வி. ஆசீர்வாதம் .. | எம். வி. ஆசீர்வாதம், 29, கண்டி வீதி, யாழ்ப்பாணம் |

### உபபாடப்புத்தகம்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.68 தொடக்கம் 31.12.70 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. புதுமுறை எண்கணிதம் 2 ம் புத்தகம் .. | 7 .. | க. பொ. இரத்தினம், சே. இ. செயசூரியா | மாக்மிலன்ஸ் அன் கம்பனி லிமிட்டெட் |

### பாடப்புத்தகம் — ரசாயனம்

அங்கீகாரக் காலவெல்லை—15.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. உயர்தர ரசாயனம் .. .. | உயர்தர வகுப்பு .. | டி. கணேசர், எஸ். சிவபாலன் | விஜய லக்குமி புத்தகசாலை, கொழும்பு |

### பொது விஞ்ஞானம்

அங்கீகாரக் காலவெல்லை—24.3.69 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. புதுமுறைப் பொது விஞ்ஞானம் .. | 7 ம் வகுப்பு .. | ஈ. நாகராசா .. | கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம் |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 2. பொது விஞ்ஞானம் 3 ம் புத்தகம் .. | 8 .. | ம. சி. பிரான்சிஸ் .. | சுமதி கல்வி வெளியீட்டகம், யாழ்ப்பாணம் |

### உயிரியல்

அங்கீகாரக் காலவெல்லை—1.1.68 தொடக்கம் 31.12.70 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. நவீன உயிரியல் 1 ம் 2 ம் புத்தகம் .. | க. பொ. த. .. | ஆர். கே. ராஜசேனன், எம். இராமனுதன், எ. குலேந்திரன் | விஜயலக்குமி புத்தகசாலை |

அங்கீகாரக் காலவெல்லை—1.1.66 தொடக்கம் 31.12.70 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 2. உயிரியல் .. .. .. | க. பொ. த. .. | வி. ராமகிருஷ்ணன், த. புத்ர சிங்கம் | த. புத்தரசிங்கம் |

### அரப்புப் பாடம்

அங்கீகாரக் காலவெல்லை—15.1.69 தொடக்கம் 31.12.71 வரை

| புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|
| 1. தகலீம் அல் அரேபியா, பகுதி 1 .. | வகுப்பு 1—6 .. | மௌலவி ஒ. எம். பாசிஅலிப் .. | ஏ. எம். ஹபீஸ் முகம்மது, டிவிஷன் 1, சம்மாந்துறை |

**சைவசமய பாடம்**

**அங்கீகாரக் காலவெல்லை—1.1.67 தொடக்கம் 31.12.71 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 1. | *சைவபோதினி ஆரம்ப பிரிவு 1, 2 (64 ம் ஆண்டுப் பதிப்பு) | 4 — 5 | .. விவேகானந்தசபை | .. விவேகானந்தசபை, கொழும்பு |
| 2. | *சைவ போதினி, கீழ்ப்பிரிவு, 1, 2 (64 ம் ஆண்டுப் பதிப்பு) | 6, 7 | .. ஷை | .. ஷை |
| 3. | *சைவ போதினி மத்திய பிரிவு (64 ம் ஆண்டுப் பதிப்பு) | 8 | .. ஷை | .. ஷை |
| 4. | *சைவ போதினி மேற்பிரிவு 1 (64 ம் ஆண்டுப் பதிப்பு) | க. பொ. த. | .. ஷை | .. ஷை |
| 5. | *சைவசமய பாடத் தொகுப்பு .. .. | 8 | .. வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் |

**அங்கீகாரக் காலவெல்லை—1.1.69 தொடக்கம் 31.12.71 வரை**

| இல. | புத்தகத்தின் பெயர் | வகுப்பு | நூலாசிரியர் | வெளியிடுவோர் |
|---|---|---|---|---|
| 6. | சைவபோதினி பாலர் பிரிவு 1 .. .. | — | .. விவேகானந்த சபை | .. விவேகானந்தசபை, கொழும்பு |
| 7. | சைவசமய போதினி .. .. | 2 | .. வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் | வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் |
| 8. | சைவசமய போதினி .. .. | 4 | .. ஷை | .. ஷை |
| 9. | சைவசமய போதினி .. .. | 5 | .. ஷை | .. ஷை |
| 10. | சைவசமய போதினி .. .. | 6 | .. ஷை | .. ஷை |
| 11. | சைவசமய பாடம் .. .. | 2, 3, 4, 5 | .. — | .. கலைவாணி புத்தகநிலையம், யாழ்ப்பாணம் |
| 12. | சைவசமய போதினி .. .. | 3 | .. — | .. வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், சுன்னாகம் |
| 13. | *சைவசமய பாடம் .. .. | 6, 7, 8 | .. — | .. கலைவாணி புத்தகநிலையம், யாழ்ப்பாணம் |

*அடுத்த பதிப்புத் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

12-482—12.12.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,884

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசத்தாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** .. | 5.12.69 | வெள்ளி .. | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி .. | 12.12.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **சனவரி** .. | 2.1.70 | வெள்ளி .. | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி .. | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி .. | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி .. | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் .. | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| **பெப்புருவரி** .. | 5.2.70 | வியாழன் .. | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி .. | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி .. | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி .. | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| **மாச்சு** .. | 5.3.70 | வியாழன் .. | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி .. | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி .. | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் .. | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ௵ யூன் ௴ 14 ஆந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.